# முழுநிலா முத்து

## முழுநிலா கலைவிழா மலர் - 2019


நிலா 08



மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்

DENP

J/ Chavakachcheri Hindu College
18 MAR 2019
Chavakachcheri



# முழு நிலா முத்து

வடமாகாண முழுநிலா நாள்
கலைவிழாச் சிறப்பு மலர்
2019

# மலர் விபரப் பட்டியல்

| | | |
|---|---|---|
| **மலரின் பெயர்** | :- | **“ முழுநிலா முத்து’**<br>முழுநிலாக்கலைமலர் - 2019 |
| **வகை** | :- | கலை ஆக்கங்களின் தொகுப்பு |
| **மலராசிரியர்** | :- | திரு.சி.சிவசிவா |
| **வெளியீடு** | :- | முழுநிலாக் கலைவிழாக் குழு,<br>மாகாணக் கல்வித் திணைக்களம்,<br>வடக்கு மாகாணம். |
| **பதிப்பு** | :- | 2019 |
| **பக்கங்கள்** | :- | 84 |
| **பிரதிகள்** | :- | 600 |
| **அச்சப்பதிப்பு** | :- | கரிகணன் (தனியார்) நிறுவனம்<br>இல.681, கே.கே.எஸ் வீதி,<br>யாழ்ப்பாணம். |

# முழுநிலாக் கலைவிழாக் குழுவினர்

**காப்பாளர்**
திரு. சி.சத்தியசீலன்
செயலாளர், கல்வி, பண்பாட்டலுவல்கள்,
விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
வடக்கு மாகாணம்

**தலைவர்**
திரு. செ.உதயகுமார்
மாகாணக் கல்விப் பணிப்பாளர்
வடக்கு மாகாணம்

**செயலாளர்**
திரு. சி.சிவசிவா
உதவிக் கல்விப் பணிப்பாளர்
அழகியல்
வடக்கு மாகாணம்

**உப செயலாளர்**
திருமதி. மதிவாணி விக்னராஜா
ஆசிரிய வளவாளர்
அழகியல்
வடக்கு மாகாணம்

**இணைப்பாளர்கள்**
திரு. கு.பிரேமகாந்தன்
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்
நிருவாகம்
வடக்கு மாகாணம்

**திருமதி ஹேமா சுரேக்ஷ்குமார்**
பிரதம கணக்காளர்,
மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்

**திரு. சி. கமலராஜன்**
பிரதிக் கல்விப் பணிப்பாளர்
கல்வி அபிவிருத்தி
வடக்கு மாகாணம்

# மலரின் உள்ளே


| | | |
|---|---|---|
| 1. இசையின் மகத்துவம் | - | 1 |
| 2. தவில் மேதை P. S. இராஜ கோபால்பிள்ளை | - | 4 |
| 3. கோயிற் சடங்குகளில் பயன்படுத்தப்படும்..... | - | 6 |
| 4. க.பொ.த (உ/த) வகுப்பில் இசை பயிலும்.... | - | 9 |
| 5. பாடசாலையில் சங்கீத பாடம் | - | 13 |
| 6. இறைவன் விரும்பிய இசை | - | 17 |
| 7. மாணவர்களின் இசைஞானத்தை விருத்தி செய்வதற்குக்..... | - | 20 |
| 8. இறைவனும் இசையும் | - | 22 |
| 9. சங்க நாதமே முழங்கிடு | - | 24 |
| 10. ஆளுமை வளர்க்கும் அழகியற் கல்வியின் அவசியம் | - | 25 |
| 11. மறைந்தும் மறையாத கலைச்சுடர் கலாபூஷணம் | - | 29 |
| 12. கலைத்திட்டத்தை நடைமுறைப் படுத்தலில் | - | 32 |
| 13. நாட்டுப்புறக் கலைகள் ஓர் கண்ணோட்டம் | - | 37 |
| 14. நாட்டியக் கலையின் பெருமை | - | 42 |
| 15. தொன்மக் கலைகளில் ஓவியக்கலை | - | 44 |
| 16. பாட்டன் கால கலையிதுவோ | - | 47 |
| 17. உளச் சிகிச்சையாக அரங்கு | - | 49 |
| 18. யாழ்ப்பாணன் (இசைநாடகம்) | - | 52 |
| 19. பாவம் இல்லாத பாடல் பெரும் பாபம் | - | 69 |

# வாழ்த்துச்செய்தி



வடமாகாண கல்வித் திணைக்களமானது 2019 ஆம் ஆண்டு முழுநிலா கலைவிழாக்களின் ஆரம்ப விழாவாக பன்னிரண்டு வலயங்களையும் இணைத்து இவ்விழாவை ஏற்பாடு செய்துள்ளது.

வடமாகாண பாடசாலை மாணவர்கள் கலைத்துறையில் தமது தனிப்பட்ட திறனை வெளிக்கொணர்வதற்கு சந்தர்ப்பத்தை வழங்கும் முகமாக வடமாகாண கல்வித் திணைக்களமானது மாதந்தோறும் முழுநிலா விழாக்களை வலய ரீதியாக நடாத்தி வருகின்றமை பாராட்டத்தக்கதாகும். இக்கலை விழா மூலமாக மாணவர்களது கலை சார்ந்த ஆற்றல்கள் திறமைகள் வெளிக்கொணரப்படுவது மட்டுமல்லாது ஒரு சமுதாயத்தின் கலாச்சாரம், பாரம்பரியம் மற்றும் விழுமியங்கள் என்பவற்றை அனைவரும் அறிந்து கொள்ளவும் அவை அழியாது தொடர்ந்தும் பின்பற்றப்படுகின்றன என்பதையும் அறியக்கூடியதாகவுள்ளது. வெவ்வேறு பிரதேசத்தின் சிறப்புமிக்க கலாசாரங்களையும் நாம் அறிந்துகொள்ளக்கூடியதாகவுள்ளது. பல்வேறு பாடசாலை மாணவர்களையும் ஒன்றிணைப்பதன் மூலம் அவர்களுக்கிடையிலான இடைவினைச்செயற்பாடும் ஒற்றுமையும் ஏற்படுத்தப்படுகின்றமையும் சிறப்புக்குரியதே.

இவ்விழாவில் வெளியிடப்படவுள்ள முழுநிலா நிலா முத்து மலரில் பல்வேறு கலை சம்பந்தமான ஆக்கங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அந்த வகையில் இம்மலர் எதிர்கால சந்ததியினருக்கு வரலாற்றுப் பதிவாக அமையும் என்பதில் ஐயமில்லை.

இன்றைய இம்முழுநிலா கலை விழாவும் "முழுநிலா முத்து" மலர் வெளியீடும் சிறப்புற அமைய எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சி. சத்தியசீலன்**
செயலாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு.
வடமாகாணம்.

# மாகாணக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



மனிதனின் வாழ்க்கையை செம்மைப்படுத்துவதற்கு அழகியற் கலைகள் அவசியம். கலைகள் மனித பண்பாட்டின் அடையாளமாகவும் விளங்குகின்றன. கலைகளை இரசிப்பதினூடாக எம்மை நாமே ஆற்றுப்படுத்திக் கொள்ள முடியும். இசையின் மூலம் இறைவனை வழிபடலாம் என்பதனை நாயன்மார்களும் ஆழ்வார்களும் தமது வாழ்க்கையினூடாக எடுத்துக் காட்டினார்கள். சகல மதங்களிலும் இசையினூடாக வழிபாடு நடாத்தப்படுகின்து. முன்னோர்கள் தமது வாழ்க்கை அனுபவங்களை இசை, நடன, நாடக, சித்திரக் கலையினூடாக வெளிக்கொணர்ந்தனர். அவை சிறந்த கலைகளாகவும் பண்பாட்டின் அடையாளமாகவும் திகழ்வதை நாம் காண்கின்றோம்.

மாணவர்களிடையே ஆற்றுகைத்திறனை வளர்ப்பதற்கும் இரசிக்கும் திறனை மேம்படுத்துவதற்கும் மாகாண மட்டதிலும் பன்னிரண்டு வலயங்களிலும் வருடந்தோறும் நடாத்தப்படும் முழுநிலா நாள் கலை விழாக்கள் சிறந்த களங்களாக அமைகின்றன. மாணவர்கள் கலைகளைப் பயில்வதினூடாக சிறந்த ஆளுமைமிக்க பிரசைகளாக வளரமுடியும். மாணவர்களுக்கு கலைகளை பயிற்றுவிப்பதற்கு பெற்றோர்கள் முன்வருதல் வேண்டும்.

மாணவரிடையே எழுத்தாற்றலை விருத்தி செய்வதற்காகவும் கலைசார் அனுபவங்களை ஆசான்கள் மற்றும் துறைசார் அறிஞர்களினூடாகப் பெற்றுக் கொள்வதற்காகவும் முழுநிலா நாள் கலைவிழா நிகழ்ச்சிகளைத் தடம் பதிப்பதற்காகவும் மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் வருட ஆரம்பத்தில் நடாத்தப்படும் முழுநிலா நாள் கலைவிழாவில் "முழுநிலா முத்து" எனும் முழுநிலாக் கலைவிழா மலர் வருடந்தோறும் வெளியிடப்படுகின்றது. நூற்றுக்கு மேற்பட்ட முழுநிலா நாள் கலைவிழாக்கள் சிறப்பாக நடைபெற்றுள்ளன. மாகாண கல்வித் திணைக்களத்தினால் நடாத்தப்படும் 104 ஆவது முழுநிலா நாள் கலைவிழா சிறப்பாக நிறைவேறவும் "முழுநிலா முத்து" முழுநிலாக் கலைவிழா மலர் வெளியீடு சிறப்புற அமையவும் வாழ்த்துக்கள் கூறி இவ்விழாவினை முன்னெடுக்கும் அனைவரையும் பாராட்டி மகிழ்கின்றேன்

**செ. உதயகுமார்,**
*மாகாணக் கல்விப் பணிப்பாளர்,*
*வடக்கு மாகாணம்.*

# மலராசிரியர் உள்ளத்திலிருந்து ....



நவீன உலகில் பல வேலைப்பழுக்களுக்கு மத்தியில், மக்கள் இயந்திரம் போல் இயங்கிக் கொண்டிருக்கிறார்கள். எதற்கும் நேரம் போதவில்லை. பதற்றமான வாழ்க்கை. அழகியற் கலைகளை ஆற்றுகை செய்வதினூடாக அல்லது அழகியற் கலைகளை இரசிப்பதினூடாக பதற்றத்தைக் குறைத்து ஆரோக்கிமான வாழ்வில் ஈடுபடுவதற்கான பெரும் உந்து சக்தியாக அழகியற் கலைகள் விளங்குகின்றன. விழுமியக் கல்வியை வளர்ப்பதோடு பிள்ளைகளின் ஆளுமைத்திறனை வளர்ப்பதிலும் அழகியற் கலைகள் பெரும் பங்காற்றுகின்றன. அழகியற் கலைகளை இரசிப்பதற்கு நேரத்தை ஒதுக்குவதோடு பிள்ளைகளைகளுக்கு அழகியற் கலைகளில் ஒன்றினை பயிற்றுவிப்பதற்கும் பெற்றோர்கள் முன்வருதல் வேண்டும். மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் கலை ஆற்றுகைத்திறனை வளர்ப்பதற்காகவும் கலைகளை இரசிக்கும் திறனை வளர்த்தெடுப்பதற்காகவும் மாகாணமட்டத்திலும் மாகாணக் கல்வித்திணைக்களத்தின் அனுசரணையுடன் பன்னிரண்டு கல்வி வலயங்களிலும் முழுநிலா நாளில் கலைவிழா வருடந்தோறும் கொண்டாடப்படுகின்றது.

மாணவர்களின் எழுத்தாற்றல் திறனை வளர்த்தெடுப்பதக்காகவும் ஆசிரியர்கள், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள், உதவிக்கல்விப்பணிப்பாளர்கள் மற்றும் அழகியல் துறைசார் அறிஞர்கள் ஆகியோர்களின் அழகியல் துறைசார் ஆக்கங்களை வெளிக்கொணருமுகமாக வருடந்தோறும் மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் வெளியிடப்படும் "முழுநிலா முத்து" முழுநிலாக் கலை மலர் இவ்வருடமும் எட்டாவது மலராக வெளிவருகின்றது.

"முழுநிலா முத்து - 2019" முழுநிலாக் கலை மலர் சிறப்பாக வெளிவருவதற்கும் முழுநிலா நாள் கலைவிழாச் சிறப்பாக நடைபெறுவதற்கும் வழிகாட்டி ஆலோசனைகள் வழங்கி உதவிய மாகாணக் கல்விப் பணிப்பாளர் திரு.செ. உதயகுமார் அவர்களுக்கு உள்ளம் கனிந்த நன்றிகள். விழாச்சிறப்பாக நடைபெற ஒத்துழைப்பு வழங்கிய மாகாணக் கல்வித் திணைக்கள அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் உள்ளம் கனிந்த நன்றிகள்.

2018 ஆம் ஆண்டிற்கான முழுநிலா நாள் கலைவிழாக்களைச் சிறப்பாக நடாத்திய பன்னிரு வலயங்களுக்கான கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், அழகியற் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், அழகியற் பாடங்களுக்கான சேவைக்கால

ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள், அழகியற் பாடங்களுக்கான அசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் உள்ளம் கனிந்த நன்றிகள்.

இவ்வருட மாகாணமட்ட முழுநிலா நாள் கலைவிழாவினை யாழ்ப்பாண மாவட்டத்தில் சிறப்பாக நடாத்த ஒத்துழைப்பு வழங்கிய யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், அழகியற் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர், அழகியற் பாடங்களுக்கான சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள், யா / கொக்குவில் இந்து கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலைச் சமூகத்தினர் அனைவருக்கும் உள்ளம் கனிந்த நன்றிகள்.

"முழுநிலா முத்து" மலரானது முழுமை பெறுவதற்கு ஆக்கங்களைத் தந்துதவிய அனைவருக்கும் உள்ளம் கனிந்த நன்றிகள். அட்டைப் படத்தை அழகுற வரைந்ததவிய கிளி/பூநகரி மத்திய கல்லூரி ஆசிரியர் திரு. ப. பிரதீபன் அவர்களுக்கும் உள்ளம் கனிந்த நன்றிகள். "முழுநிலா முத்து - 2019" மலரினை அழகுற அச்சுப் பதிப்பு செய்துதவிய "கரிகணன்" அச்சகத்தினருக்கும் உள்ளம் கனிந்த நன்றிகள்.

**சி.சிவசிவா,**
*உதவிக் கல்விப் பணிப்பாளர்,*
*அழகியல்*
*மாகாணக் கல்வித் திணைக்களம்,*
*வடக்கு மாகாணம்.*

# வடமாகாணக் கல்வித் திணைக்களக் கீதம்

கலைநிறை வளவகம் எழில்மிகு கலையகம்
அறிவொடு புகழ்தரும் கலையகம் வாழ்கவே
வாழ்க வாழ்க வடமாகாணக் கல்வித் திணைக்களம் வாழ்க
வாழ்க வடமாகாணக் கல்வித் திணைக்களம் வாழ்க
வாழ்க வடமாகாணக் கல்வித் திணைக்களம் வாழ்க வாழ்க
வடமாகாணக் கல்வித் திணைக்களம் வளரும் பணிகள் என்றும் வாழ்கவே நின் வளரும்
பணிகள் என்றும் வாழ்கவே.

கல்வி என்னும் எம்முயிர் செழிக்கவே கலை கலாச்சாரம் சிறந்து ஓங்கவே
எல்லை கடந்தும் எம்புகழ் ஒளிர இணையிலாப் பணியாற்றிச் சுடர் விடும்

(கலைநிறை ......)

பஞ்சவர்ணக் கொடியும் பறந்திடும்
பலபல அர்த்தங்கள் புரிந்திட அசைந்திடும்
மிஞ்சும் உலகை எதிர்கொள்ள வேண்டி மேற்புறு கொள்கை வகுத்துச் செயற்படும் சூழும்
கடலும் சுடரும் ஒளியும் துலங்கிடும் உலகம் உள்ளவும்
நாளை என்னும் நம்பிக்கை ஒளிக்காய்
நல்லவரைத் தினம் ஆக்கிடும் வல்லவரைத் தினம் ஆக்கிடும்

(கலைநிறை.......)

பன்னிரு வலயமும் கன்னிகரின்றி உயர்ந்திடவும்
சின்னவர் யாவருமே மன்னவராகி சிறப்புறவும்
தொன்மை மிகு பணி தொல்லறமெல்லாம் துலங்கிடவும்
அன்னமெனத் திறனாய்ந்து செழித்து வளர்கவே
ஆரம்பம் இடைநிலை உயர்நிலை என்று
முத்திறப்பட்ட கல்வியிலே
அறிவியல் அழகியல் விளையாட்டெல்லாம்
அத்துறை சித்துற விளங்கிடவே
உடலொடு உள்ளமும் ஓங்கிடவே
ஒற்றுமை சக்தி சிறந்திடவே
வல்ல பணி செய்யும் வடமாகாணக் கல்வித் திணைக்களம் வாழ்கவே.

கல்வித் திணைக்களம் வாழ்கவே.
கல்வித் திணைக்களம் வாழ்கவே.

பாடலாக்கம்:- நெடுந்தீவு செ. மகேஷ்
இசையமைப்பு :- சத்தியன்

# இசையின் மகத்துவம்



**பொன். ஸ்ரீ வாமதேவன்**
*ஓய்வு நிலை ஆசிரியர்*
*மட்டுவில்,*
*சாவகச்சேரி*

இசை என்பது மனித வாழ்விற்கு இறைவனால் அளிக்கப்பட்ட பிரதானமான சொத்துக்களில் ஒன்றாகும். அவ்வாறான இசை நாட்டிற்கு நாடு மக்களின் மொழி, கலாசாரம், பழக்கவழக்கங்கள், பண்பாடுகள் ஆகியவற்றின் காரணத்தினால் வேறுபாடு அடைகின்றது. எனினும் பொதுவாக இசையை கர்நாடக இசை, ஹிந்துஸ்தானி இசை, ஐரோப்பிய இசை என மூன்று வகையாகப் பிரிக்கலாம். இவற்றுள் கர்நாடக இசையை ஆதாரமாகக் கொண்டு நாட்டார் இசை, மெல் இசை, பண்ணிசை, திரையிசை, கூத்திசை போன்ற இசைகள் வளர்ச்சி பெற்றுக் காணப்படுகின்றன.

இசை என்பது வாழ்வுடன் ஒன்றிப் பிணைந்திருப்பதைக் காண முடிகிறது. குழந்தைக்கான தாலாட்டில் இருந்து மரண நேரத்தில் கையாளப்படும் இசை வரையும் மனித வாழ்வில் இசை முக்கியமான ஒரு அம்சமாகக் காணப்படுவதை அவதானிக்கலாம்.

1. அழும் குழந்தையின் அழுகையை நிறுத்துவதற்கும், தூங்குவதற்காகவும் தாலாட்டு இசை கையாளப்படுகின்றது.

2. முன்பள்ளி மாணவருக்கு ஆடல், பாடல், விளையாடல் என்ற வரிசையில் பாடல் நடுநாயமாக இருப்பதோடு அவர்களுக்கு வழங்க வேண்டிய எண்ணக்கருக்களை பாடல் மூலமாக மிக இலகுவாக கற்பிக்க முடிவதையும் காணலாம்.

3. ஆரம்பப் பள்ளி மாணவர்க்கும் பரந்த விடயப் பரப்புக்களை மிக இலகுவாக மனதில் நிற்க செய்வதற்கு இசை உறுதுணை புரிகிறது.

4. எச்சமயமாக இருப்பினும் ஆலய வழிபாடுகளில் இசை முக்கிய ஊடகமாக இருப்பதைக் காணலாம். குறிப்பாக இந்து சமயத்தில் ஆலயங்களில் தவில், நாதஸ்வரம், தேவார பாராயணம் போன்றவை மிக அத்தியாவசியமான இசை நிகழ்வுகளாகக் காணப்படுகின்றன.

5. விழாக்களில் மங்களகரத்தை அதிகரிக்கும் பொருட்டு இசை ஒலிபரப்பப்படுவதை அவதானிக்கலாம். திருமணம், பூப்புனித நீராட்டு விழா, புதுமனைப் புகுவிழா ஆகிய விழாக்களின் போது ஒலிபரப்பப்படும் பாடல்கள் விழாக்களும் பொருத்தமானதாகவும், மிகக் குறைந்த சப்தத்துடனும் ஒலிபரப்பப்படுவது கவனிக்கப்பட வேண்டியதாகும்.

**6. பயணங்களில் இசை**: பயணத்தின் போது பயண அலுப்புத் தெரியாத வகையில் இசை வாகனங்களில் கையாளப்படுவதைக் காணலாம். எனினும் வாகனங்களில் ஒலிபரப்படும் இசையும், தெரிவு செய்யப்பட்ட பாடல்களாக அதாவது விரசமான பாடல்களை நீக்கி அனைத்து வயதினரும் கேட்கக்கூடிய பொருள் பொதிந்த பாடல்களை மிகக் குறைந்த சப்தத்துடன் கையாளுவது முக்கியமானது.

**7. விளம்பரத்திற்கான இசை:** பொருட்களை விற்பனை செய்வதற்கு கையாளப்படும் விளம்பரங்களுக்கு இசை மேலும் மெருகூட்டுவதனால் விளம்பரங்களில் இசை கையாளப்படுகிறது.

**8. மருத்துவத்திற்கான இசை :** பலவிதமான நோய்களைக் குணமாக்குவதற்கு இசை கையாளப்படுகிறது. உதாரணமாக சில வகையான மனநோய்கள், தூக்கமின்மை, வயிற்று வலி, மனஅழுத்தம் போன்றவற்றை இசை மூலமாக கிரமமாக குறையச் செய்து மாற்றுகிறது.

**9. பொழுது போக்கில் இசை:** மாணவர்கள், இளைஞர், யுவதிகள் தமது ஓய்வு நேரத்தை மகிழ்ச்சியாகக்களிப்பதற்கும் இசை ஒரு நல்ல ஊடகமாக உள்ளது. இதன் மூலமாக அவர்கள் பிறழ் நடத்தைகளில் ஈடுபட முனைவது தவிர்க்கப்படுகிறது.

**10. வயோதிப காலத்தில் இசை**: வயோதிபர்களான காலத்திலே இசையை கையாளக்கூடியவர்கள் புராண பாடல்கள் பாடியும், தேவார திருவாசகங்கள், முற்றோதல் பாடியும் தமது பொழுதை மகிழ்ச்சியாகக் களிக்க முடிகின்றது.

**11.** ஈற்றில் மரணிக்கும் தருவாயில் உள்ள ஒருவருக்கு அவரது காதில் கேட்கும் படியாக அவரவர் சமயத்திற்குரிய பக்திப் பாடல்களைப் பாடும் வழக்கம் நம்மிடையே காணப்படுகின்றது. மரணிக்கும் தருவாயில் அவரது உள்மனம் பிரபஞ்சமாயை நினைப்புக்களில் இருந்து இறைவனை நினைக்கக்கூடிய வகையில் இந்தப் பாடல்கள் பாடப்படுகிள்றன. மரணத்தின் பின் ஒப்பாரி வைத்தல். இது ஒரு நாட்டார் இசை வடிவம் ஆகும். இவ்வாறாக மனித வாழ்வில் இசையானது பிறந்த குழந்தையில் இருந்து மரணிக்கும் வரை பின்னிப்பிணைந்திருப்பதைக் கவனிக்கலாம்.

இவ்வாறு மகிமை பொருந்திய இசையை பாடசாலைக் கல்வியில் தரம் - 06 முதல் தரம் - 13 வரை சேர்க்கப்பட்டு இருப்பது ஒரு முக்கியமான அம்சமாகும். க. பொ. த. சாதாரண வகுப்பு வரை இசை பயிலும் மாணவர்கள், இசையை ரசிக்கக் கூடிய ரசனை உணர்வை வளர்த்துக் கொள்கிறார்கள். இசையின்றி நடனம், சித்திரம், நாடகம் ஆகிய துறைகளில் மாணவர்கள் ஈடுபட்டாலும் இவ்ரசனையுணர்வு வளர்க்கப்படுகிறது. ரசனையுணர்வு வாழ்வை வெற்றிகரமாக வாழ்வதற்கு மிகவும் அத்தியாவசியமானதாகும் தவிரவும், தரம் - 13 வரை இசை பயிலும் மாணவர்களில் சிலர் இசை மேற்படிப்பிற்கு செல்லக்கூடிய வாய்ப்பும் உள்ளது. இசைக்கான மேற்படிப்பு நிலையங்களாக மட்டக்களப்பு விபுலானந்த இசைக்கல்லூரி, யாழ்ப்பாணம் இராமநாதன் அக்கடமி காணப்படுகின்றன. இவ்நிலையங்களில் நான்கு

# மாகாணக் கல்வித் திணைக்களத்தின்
# முழு நிலா நாள் கலைவிழா - 2018
# நிகழ்வுகளில் சில...










# மாகாணக் கல்வித் திணைக்களத்தின்
# முழு நிலா நாள் கலைவிழா - 2018
# நிகழ்வுகளில் சில...
















வருடங்கள் பட்டப்படிப்பை முடித்துக்கொண்ட மாணவர்கள் BFA சான்றிதழ்களுடன் இசையாசிரியர்களாகவும் வேறு பல அரச நிறுவனங்களில்ப் பணியாளர்களாகவும் இசை விரிவுரையாளர்களாகவும் தொழில் பெற்றுத் தமது எதிர்காலத்தை சிறப்புடையதாக ஆக்கிக் கொள்ள முடியும். மேலும் தனியார் வகுப்புக்களை நடத்தியும், மேடைக்கச்சேரிகள், வானொலி தொலைக்காட்சி கச்சேரிகள் நடத்தியும் பொருள் ஈட்டும் வாய்ப்புக்களும் உள்ளன. மேலும் இத் துறையில் M.A, M.Phil, PHD ஆகிய மேற்படிப்புக்களைத் தொடரவும் முடிகிறது.

ஒரு நல்ல இசையாளனிடம் பொறுமை, அடக்கம், பணிவு, தலைமைத்துவம், விட்டுக்கொடுக்கும் பண்பு, சாந்தமான குணம், நேர்மை, கண்ணியம் போன்ற இன்னோரன்ன பண்புகள் காணப்படும்.

இந்து சமயத்தைப் பொறுத்த வரையில் இறைவனுடைய திருவுருவங்களில் இசை வாத்தியங்கள் காணப்படுகின்றது. நாரதரிடம் தம்புராவும், நந்தியிடம் மத்தளமும், சரஸ்வதியிடம் வீணையும், கிருஸ்ணரிடம் புல்லாங்குழலும், சிவனிடம் டமருகமும் காணப்படுகின்றன. ராவணன் இறைவனை மகிழ்விக்க தனது கைகளில் இருந்து நரம்புகளை எடுத்து மீட்டி இசை வாசித்து இறைவனை மகிழச்செய்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. இது மாத்திரமின்றி உயிரினங்கள் இசையை ரசிக்கின்றன. மதம் கொண்ட யானையை உதயணன் தனது கோடபதி எனும் யாழை வாசித்து சுமூக நிலைக்கு வரப்பண்ணியதாக வரலாறு காணப்படுகின்றது. அது மாத்திரமன்றி பயிர்கள் செழித்து வளரவும், கூடிய அளவு பலனைத் தரவும் இசையைக் கையாளுவதன் மூலம் அடைய முடியும் என்பதை மேலைத்தேய ஆராய்ச்சியாளர்கள் நிரூபித்துள்ளனர்.

இவ்வாறான சிறப்பியல்புகள் நிறைந்த இசை யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஒரு காலத்தில் மிக உன்னத நிலையில் காணப்பட்டது. எனினும் தற்காலத்தில் தராதரப் பத்திரங்களுக்காக மாத்திரம் இசைபயிலும் ஒரு நிலையைக் காணக்கூடியதாக இருக்கிறது. அக்காலத்தில் இசையை வளர்த்த ரசிக ரஞ்சன் சபா, அண்ணாமலை மன்றம், இளங்கலைஞர் மன்றம், போன்றவை பெரும் பங்காற்றின. எனினும் தற்காலத்தில் வட இலங்கை சங்கீத சபை மாத்திரம். மாணவர்களுக்கு பரீட்சைகள் வைப்பதன் மூலமாகவும், கலாவித்தகர் பட்டம் வழங்குவதன் மூலமாகவும் ஓரளவு இசை வளரச்சிக்குத் தொண்டாற்றுகின்றது.

இசை பயிலும் மாணவர்கள் தாங்கள் எடுத்துக் கொண்டதுறையில் தங்களால் எவ்வளவு தூரம் பிரகாசிக்க முடியுமோ அவ்வளவு தூரம் பிரகாசிப்பதற்கான பயிற்சிகள் செய்தல் அவசியம். அது மாத்திரமின்றி ஒரு நல்ல ஆசிரியரை இனங்கண்டு அவரிடம் இசை கற்பதோடு இசை நிகழ்வுகள் உள்ள இறுவட்டுக்கள் மூலமாக நிறையக் கேள்வி ஞானத்தை வளர்த்துக் கொள்ளுதல் அவசியமாகும். சுருக்கமாகக்கூறின் இசையில் ஆர்வமுடையோர் நல்ல இசையாசிரியரைத் தனது குருவாகக் கொண்டு சதா இசை நிகழ்வுகளைக் கேட்டு தினம் தவறாமல் நிறைந்த சாதகம் செய்வதன் மூலமாகவும் எதிர்காலத்தில் அவர் ஒரு நல்ல இசைக் கலைஞராக வரமுடியும் என்பது துணிபு.



# தவில் மேதை P. S. இராஜ கோபால்பிள்ளை



**சிவபாதரத்தினம் சிவசிவா.**
*உதவிக் கல்விப் பணிப்பாளர் அழகியல்,*
*மாகாணக்கல்வித் திணைக்களம்,*
*வடக்கு மாகாணம்.*

இணுவில் கர்தகாமி கோவிலடியைச் சேர்ந்த சாமிநாதர் கமலம் தம்பதியினருக்கு புதல்வராக 1915.03.08 ஆம் திகதி பிறந்தார். பிரபல்ய நாதஸ்வரமேதைகளான P.S. கந்தசாமி, P.S. ஆறுமுகம்பிள்ளை, தவில் வித்துவான்களாகிய P.S. சின்னத்துரை, P.S. சாரங்கபாணி ஆகியோர் இவரது சகோதரர்களாவர். இவரது மனைவி தையல்நாயகி. யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் சிலகாலம் வசித்து வந்தார். பிற்காலத்தில் கலைகளுக்கு புகழ் பெற்ற கிராமமான அளவெட்டியில் தனது இறுதிக்காலம்வரை வசித்து வந்தார்

இவரது தவில் வாசிப்பு தனித்துவமானதும் சிறப்புமிக்கதுமாகும். லயக்கணிசம் நிரம்பியது என்று கூறுவார்கள். இவரது வாசிப்பு மிகவும் இனிமையானது, சுவையானது. இவரது வாசிப்பில் துரிதகாலச் (மேற்காலம்) சொற்கள் மிகவும் சுத்தமானதாகவிருக்கும். சிறு சிறு கோர்வைகளை வாசிப்பதில் தேர்ச்சியுடையவர். எந்தத் தாளமாக இருந்தாலும் (7,11,13 அட்சரமுடையதாளங்கள்) மிக இலாவகமாக் தவிற்சமா (தனியாவர்த்தனம்) வாசிப்பதில் கைதேர்ந்தவர். இவர் தவிற்சமா வாசிக்கும்போது வருகின்ற சிறுசிறு சொல்லடிகள் சிறுசிறு கோர்வைகள், கேட்போரைப் பிரமிக்கவைக்கும் என்று கூறுவார்கள். சொற்கள், ஜதிகளுக்கடையில் நீண்ட கார்வைகளை வைத்து பாடங்களை வாசிப்பதிலும் கைதேர்ந்தவர். பல தவில் வித்துவான்கள் இவரது நீண்ட கார்வைகளக் கொண்ட பாடங்களை உடனடியாக விளங்கிக்கொள்ள முடியாமல் இடர்பட்ட சம்பவங்களைப் பல இரசிகர்கள் இரசித்துக் கூறுவதுமுண்டு. நீண்ட கார்வைகளுக்கு அங்க அசைவுகள்மூலம் கார்வைகளை மறைத்து வாசித்து தன்னுடன் வாசிக்கும் சக கலைஞர்களையும் இரசிகர்களையும் வியப்பில் ஆழ்த்துவதில் வல்லவர். நாதஸ்வரத்தில் வாசிக்கப்படும் உருப்படிகளுக்குப் பொருத்தமான முறையில் இனிமையாக வாசிக்கும் திறன் கொண்டவர்.

இவர் தனது தம்பியாரான நாதஸ்வர மேதை P.S. ஆறுமுகம்பிள்ளை அவர்களுடன் சேர்ந்து பலகாலம் கச்சேரிகள் வாசித்து வந்தார். அக்காலத்தில் வாழ்ந்த பிரபல்யமான நாதஸ்வர வித்துவான்களுக்கு தவில் வாசித்ததுடன் இளையவர்களைத் தட்டிக்கொடுத்து உற்சாகம் கொடுத்து அவர்களது நாதஸ்வரத்திற்கும் தவில் வாசித்துள்ளார்.

அக்காலத்தில் வாழ்ந்த பிரபல தவில் வித்துவான்களுடனும் இளங்கலைஞர்களுடனும் சேர்ந்து தவில் வாசித்துள்ளார். பிற்காலத்தில் லயஞான குபேர பூபதி வி.தெட்சனாமூர்த்தி, தவில் மேதை கைதடி பழனி, தவில் மேதை இணுவில் N.R சின்னராசா, தவில் மேதை நாச்சிமார் கோவிலடி கணேசபிள்ளை, ஆகியோருடன் சேர்ந்து தவில் வாசித்துள்ளார்.

P.S. இராஜகோபால்பிள்ளை அவர்களுடன் சேர்ந்து தவில் வாசிக்கத் தனக்குக் கிடைத்த வாய்புக்களைப் மிகப் பெருமையுடன் மிருதங்க வித்துவான் ஐ.சிவபாதம் அவர்கள் கூறுவார். P.S. இராஜகோபால்பிள்ளை அவர்கள் பல ஜதிக்கோர்வைகளை ஆக்கியுள்ளார் இவரது பெரும்பாலன ஜதிக்கோர்வைகளில் கண்ட, திஸ்ர, சதுஸ்ர, மிஸ்ர, சங்கீர்ண ஜாதி ததிங்கிணதொம் (தரிதணகும்) வகைகளை வாசிக்கக் கூடியதான அமைப்பு முறையில் அமைந்திருக்கும். இவரிடமிருந்து பல ஜதிக்கோர்வை கற்றதாக ஐ.சிவபாதம் அவர்கள் கூறினார்.

தவில் மேதை P.S. இராஜகோபால்பிள்ளை அவர்களால் அமைக்கப்பட்ட ஆதிதாளத்திலமைந்த ஜதிக்கோர்வை ஒன்றினை அளவெட்டி மிருதங்க வித்துவான் ஐ.சிவபாதம் அவர்களிடமிருந்து கற்றுக்கொண்டது.

**கண்டம் ஜாதி ததிங்கிணதொம்**

தாதீ தகிடதகஜணுதோம் தக தாதீ தகிடதகஜணுதோம் தததக தாதீ தகிடதகஜணுதோம் ததிங்கிணதொம் தா தக ததிங்கிணதொம் தா தததக ததிங்கிணதொம் தா

**திஸ்ர ஜாதி ததிங்கிணதொம்**

தாதீ தகிடதகிடதோம் தக தாதீ தகிடதகிடதோம் தததக தாதீ தகிடதகிடதோம ததீங்கிணதொம் தா தக ததீங்கிணதொம் தா தததக ததீங்கிணதொம் தா

இவ்வாறாக ஜதிக்கோர்வையினை சதுஸ்ர, மிஸ்ர, சங்கீர்ண ஜாதி ததிங்கிணதொம் வரிசைகளில் வாசிக்க முடியும்

அளவெட்டியில் மனைவியுடன் வசித்து வந்த காலங்களில் தவளக்கிரி முத்துமாரி அம்மன் ஆலயத்திற்குத் தினமும் சென்று வழிபடுவார். புத்தகங்கள் மற்றும் செய்தித்தாள்கள் வாசிக்கும் பழக்கமுடையவர். அளவெட்டி வடக்குச் சனசமூக நிலையத்திற்குச் சென்று செய்தித்தாள்களை வாசிப்பார். நேரம் கிடைக்கும்போது வீட்டில் கதைப்புத்தகங்களை வாசிப்பார். தன்னிடம் வந்து பாடங்கேட்கும் பெரியவர்கள் மற்றும் இளங்கலைஞர்களுக்கு சிறுசிறு சொற்கள், கோர்வைகள் மற்றும் லய நுட்பங்களைச் சொல்லிக் கொடுப்பார். இவ்வாறாகக் கலைச்சேவையாற்றி 1991.10.11 ஆம் திகதி இறைவனடி சேர்ந்தார்.

# கோயிற் சடங்குகளில் பயன்படுத்தப்படும் தாளவாத்தியக் கருவிகள்



**தண்ணுமை வேந்தன் மா. சிதம்பரநாதன்**


"கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்னும் முதுமொழி, எமது பண்பாட்டு மரபில் கோயில் பெறும் சிறப்பிடத்தை விளக்கி நிற்கிறது. நீக்கமற எங்கும் நிறைந்து நிற்கும் பரம்பொருளுக்கு உருவம் கொடுத்து, அபிடேக ஆராதனைகளுடன் வழிபாடு செய்யும் இடமே ஆலயமாகும். அத்தோடு எமது கலைமரபுகளைப் பேணி வளர்க்கும் பண்பாட்டு மையங்களாகவும் அவை திகழ்கின்றன. தமிழர் கலைகளில் பெரும்பாலானவை கோயிலுடன் தொடர்புபட்டவை. இசை, நடனம், நாடகம், சிற்பம், ஓவியம், கட்டடக்கலை என்பன கோயிலைச் சார்ந்தே வளர்ச்சி பெற்றிருக்கின்றன. கோயிற் கிரியைகளில் பல்வேறு தாளவாத்தியக் கருவிகள் பயன்படுகின்றன. தவில், மிருதாங்கம், பஞ்சமுக வாத்தியம் ஜெண்டை, பறை, உடுக்கை என்பன அவற்றுட் சிலவாகும்.



**தவில் :** நாதஸ்வரத்தின் துணைவாத்தியமான தவில் கோயிற் சடங்குகளின் சிறப்பான இடத்தை வகிக்கின்றது. இந்த வாத்தியத்தின் பங்களிப்பின்றி எந்த உற்சவமும் ஆலயங்களில் நடைபெறுவதில்லை. கணபதி தாளம், பூத நடனம் என்பவை, இந்த வாத்தியமின்றி முழுமை பெறாது. தோற்கருவியான தவில் கட்டை, மூட்டு, வார் என மூன்று பகுதிகளை உடையது. உருளை வடிவான கட்டையில் மூங்கில் வளைகளொடு கூடிய தோல் மூட்டுக்கள் வாரினால் இணைக்கப்பட்டிருக்கும். கட்டை பலா மரத்தில் கடைந்தெடுக்கப்படுகிறது. இதன் வார் கோர்க்கும் கண்கள் பதினொன்றாகும். வலந்தரையில் கூடு அணிந்த விரல்களாலும் இடந்தரையில் 'கழி' கொண்டும் இக்கருவியை வாசிப்பர். தற்போது வாருக்குப் பதிலாக உலோகத் தகடுகள் பயன்படுகின்றன.

**மிருதங்கம் :** தென்னக தாளவாத்தியக் கருவிகளில் தன்னிகரற்றது மிருதங்கம். கோயிற் சடங்குகளில் இதன் பங்கு காத்திரமானது. கொடிமரப் பூஜையின் போது மிருதங்க இசையால் அர்ப்பணம் செய்வது இன்றும் பல ஆலயங்களில் வழக்கமாக உள்ளது. ஆலயங்களில் இடம்

பெறும் பண்ணிசை, பஜனை அரங்குகளில் அணி செய்வதோடு நவசந்திகளில் நடைபெறும் நாட்டிய நிகழ்வுகளிலும் லயம் சிறக்க உதவுகின்றது.



மிருதாங்கம் கட்டை, மூட்டு, வார் என மூன்று பகுதிகளை உள்ளடக்கியது. கடைந்தெடுத்த பலா மரக் கட்டையில் மூட்டுக்கள் பதினாறு கண்கள் ஊடாக வாரினால் பொருத்தப்படும். வலந்தரை மூட்டில் மூன்று தோல்கள் காணப்படும். நடுத்தோலில் (கொட்டுத் தட்டு) சாதம் (கரணை) இடப்படும். மிருதாங்கத்தின் நாதச் சிறப்புக்குக் கரணையே காரணம் ஆகும். இடந்தரைப் பகுதியைத் 'தொப்பி ' என அழைப்பர்.



**பஞ்சமுக வாத்தியம் :** அந்நாளில் ஆலயங்களில் பரவலாகப் பயன்பட்ட இவ்வாத்தியம் இன்று திருவாரூர், திருத்துறைப் பூண்டி ஆகிய ஓரிரு ஆலயங்களில் மட்டும் இசைக்கப்படுகிறது. அளவில் பெரிதான இவ்வாத்தியம் குடத்தின் அமைப்பினைக் கொண்டது. ஐந்து முகங்களை உடையது. நடுவில் அமைந்துள்ள தலை முகம் பெரிதாகவும் ஏனையவை சிறியதாகவும் அமைந்திருக்கும். இவ்வைந்து முகங்களும் தோலினால் போர்த்தப்பட்டிருக்கும். குடமுழா என்பது இதன் மறு பெயராகும்.



**ஜெண்டை :** கேரளாவிலுள்ள ஆலயங்களில் பூஜை வேளைகளிலும் சுவாமி வீதியுலா வரும்போது இவ்வாத்தியம் இசைக்கப்படுகின்றது. எமது பறையைப் போன்ற அமைப்பைக் கொண்ட இக் கருவியின் இரு மூட்டுக்களிலும் பன்னிரண்டு வார் கோர்க்கும் கண்கள் உண்டு. கட்டை பலா மரத்தினால் ஆனது. கதகளி நாட்டியத்தில் இதுவே முதன்மை வாத்தியமாகும்.



**பறை :** முருகன், அம்மன் ஆலயங்களிலும் கிராமியத் தெய்வ வழிபாடுகளிலும் இத்தோற்கருவி இசைக்கப்படுகிறது. பலா மரத்தால் ஆன கட்டையில் இரு மூட்டுக்களும் வாரினால் இணைக்கப்படும். குச்சிகளைக் கொண்டே இக்கருவியை இசைப்பர். செய்திகளை அறிவிப்பதற்கும் இக்கருவி பயன்படுகிறது.



**உடுக்கை :** கிராமியத் தெய்வ வழிபாடுகளில் இக்கருவிக்குச் சிறப்பான இடம் உண்டு. இதில் எழும் நாதம் உருவேற்றும் தன்மை கொண்டது. ஆலயத்தோடு தொடர்புள்ள காவடி, கரகம், சிந்து நடைக்கூத்து போன்ற கிராமியக் கலை வடிவங்களில் இக்கருவி பயன்படுகிறது. பண்டைக் காலத்திலிருந்து வழக்கிலிருக்கும் தோற்கருவிகளில் இதுவும் ஒன்று.

இரு பக்கமும் அகன்றும் நடுவில் சிறுத்தும் இருக்கும் இக்கருவியைப் பெண்களின் சிற்றிடைக்கு உவமை சொல்வர் புலவர்கள். இதன் கட்டை பலா, கிழுவை போன்ற மரங்களினாலும் உலோகத்தினாலும் உருவாக்கப்பட்டது. கட்டையின் ஒரு பக்கம் பசுவின் வயிற்றுப்பகுதித் தோலினாலும் மறுபக்கம் குடற் சவ்வினாலும் போர்த்தப்பட்டிருக்கும். மூட்டுக்கள் ஆறு கண்கள் ஊடாக மெல்லிய கயிற்றினால் பொருத்தப்படும். நடுப்பகுதியில் கயிற்றினைச் சுற்றிய நாடாவை அழுத்தியும் நெகிழ்த்தும் ஒலி ஜாலங்களை எழுப்புவர்.

# க.பொ.த (உ/த) வகுப்பில் இசை பயிலும் மாணவர்கள் எதிர்கொள்ளும் சவால்களும் அவற்றிற்கான தீர்வுகளும்



**பரமேஸ்வரி - கணேசகம்பர்**
*சிரேஸ்ட விரிவுரையாளர் (இசை)*
*யாழ் பல்கலைக்கழகம்*

**முன்னுரை**

ஒரு நாட்டின் பண்பாட்டின் விழுமியங்களாக விளங்குபவை கலைகள் - நுண்கலைகளுள் இசை முதன்மையானதாக விளங்குகிறது. இசையின்பத்தினை உணராதவர்கள் வெறும் நடமாடும் உருவங்களே ஒழிய ஆத்மீக தர்மத்தின்படி பகுத்தறிவாளர்களாக கருதப்படமாட்டார்கள். இசையில் ஸ்வரநிலைகளின் இடைவெளிகளை கணக்கிட்டு இசைக்கும் பெருமை இன்று வல்லுனர்களுக்கே உண்டு. இனிமையான நாத அலைகள் சாரீரத்தில் பல வருடங்கள் அப்பியாசம் செய்த பின்னர் தான் சுலபமாக நினைத்தபடி எல்லாம் சங்கதிகள் பாடி இராகங்களை உருவாக்க வைக்கின்றன. எனவே இசைப்பயிற்சியினை ஒருவர் சிறுவயதிலேயே மேற்கொள்ளவேண்டியுள்ளது. இசையை கற்பதினால் ஓர் மாணவன் மனவெழுச்சியிலிருந்து விடுபட்டு சமநிலையடைகிறான். இசையானது மனநலத்திற்கும் உடல் நலத்திற்கும் உறுதுணையாகிறது.

இசை பாடசாலைக் கல்வியைப் பொறுத்தவரை க.பொ.த சாதாரணம் - க.பொ.த உயர்தரம் இரண்டிலும் ஓர் பாடமாகத் திகழ்கிறது. பட்டதாரி ஆசிரியர்களையும் விரிவுரையாளர்களையும் இன்று உருவாக்குவதற்கு அடிப்படைக் காரணம் க.பொ.த. உயர்தரத்தில் இசை ஓர் பாடமாக அமைக்கப்பட்டிருப்பதே ஆகும். எனினும் மாணவர்கள் சில பாடசாலைகளில் இசை கற்பதில் பல சிரமங்களை எதிர் நோக்குகின்றார்கள். சில பாடசாலைகளில் வளங்கள் போதியளவு இருந்தும் பெறுபேற்றின் அடைவு மட்டம் குறைவாக உள்ளது. சில பாடசாலைகளில் வளங்கள் பற்றாக்குறையாக இருப்பினும் பெறுபேறு உயர்வாய் உள்ளது. இவற்றிற்கான காரணங்கள் என்ன? இசைக்கல்வியை பாடசாலை மட்டத்தில் மேம்படச் செய்ய எத்தகைய முயற்சிகளை மேற் கொள்ளலாம் என்பது பற்றி இக் கட்டுரையில் கூற விளைகின்றேன்.

பாடசாலைகளில் கர்நாடக இசை கற்கும் மாணவர்களுக்கு உயர் கல்வி கற்கும் வாய்ப்புக்கள் இருக்கின்ற போதும் கற்பித்தல், கற்றலில் ஏற்படுகின்ற பல பிரச்சனைகள் காரணமாக அவ்வாய்ப்புக்களை மாணவர்கள் தவறவிடுகின்றனர். பாடசாலைகள் மற்றும் கற்பிக்கும் ஆசிரியர்கள் பிரச்சனைகளைச் சீர்செய்து சிறந்த கற்பித்தல், கற்றல் சூழலை ஏற்படுத்துவதன் மூலம் மாணவர்கள் உயர் கல்வி கற்கும் வாய்ப்பினைப் பெறுவதற்கு வழி செய்வதோடு சிறந்த ஆற்றுகைத் திறனைப் பெறுவதற்கும் வழி செய்ய முடியும்.

## சிறந்த கற்பித்தல், கற்றல் சூழலை ஏற்படுத்துவதற்காக செய்யப்படவேண்டியவை,

- வகுப்பறையானது இசை கற்கும் சூழலுக்கேற்றவாறு அமைந்திருத்தல் வேண்டும்.
- மாணவர்களுக்கு வேண்டிய கற்பித்தல் உபகரணங்கள் சகல பாடசாலைகளிலும் இருப்பதோடு மாணவர்கள் பயிற்சிக்காக கற்பித்தல் உபகரணங்களை வீட்டில் வைத்திருப்பதற்காக வழிப்படுத்தல். உ+ம்:- சுருதிப்பெட்டி
- பாடத்திட்டத்தினை ஆசிரியர்கள் முழுமையாக அறிந்து மாணவர்களை வழிப்படுத்துவதோடு மாணவர்களுக்கும் பாடத்திட்டத்தில் உள்ள விடயங்களை வழங்கித் தெளிவுபடுத்தல்.
- உயர்தர வகுப்புக்களில் கற்கும் ஆசிரியர்கள் அதற்கேற்பத் தம்மை வளர்த்துக்கொள்ளல்.
- இசையின் அடிப்படை விடயங்களை முறையாக கற்காமல் உயர் வகுப்பில் பாடத்திட்டத்தினைக் கற்க விரும்பும் மாணவர்களுக்கு ஆசிரியர்கள் விசேட பயிற்சிகள் வழங்குவதினூடாக மாணவர்களை வளப்படுத்தல்.
- ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் அதிகரிக்கப்பட வேண்டும்.
- செயலமர்வுகள் குறைவாகவே நடைபெறுகின்றன எனினும் பல ஆசிரியர்கள் செயலமர்வில் பங்குபற்றுதல் குறைவாகக் காணப்படுகின்றன அவர்களைச் செயலமர்வுகளில் பங்குபற்ற வழிப்படுத்தல்.
- தானவர்ணம் கற்பிக்கும்போது ஒவ்வோரு ஸ்வரமாக கற்பிக்காமல் 1 /4, 1/2 ஆவர்த்தனங்களுக்கு ஒருமுறை நிறுத்தி கற்பித்தல். இவ்வாறு செய்வதால் மாணவர் மனதில் ஸ்வரம் விரைவாக பதியப்படும்.
- ஸ்வரம் மனனம் செய்த பின்னர்தான் சாகித்தியம் கற்பிக்கப்படல் வேண்டும்.

**இராகங்களின் ஸ்வரஸ்தானங்களை நீண்ட கார்வையாக நிறுத்திப்பாடப் பயிற்சி அளித்தல்**
- ஸ்வரத்தின் தன்மைக் கேற்ப கார்வையின் அளவினைக் கூட்டிக் குறைக்கலாம்.

உ+ம் - சாதாரண காந்தாரம் - குறைந்த அளவு நேரம்

சதுஸ்ருதி தைவதம் - குறைந்த அளவு நேரம்

ஸ்ருதி ஞானத்தை வளம்படுத்த ஸ - ப - ஸ் -ஸ்வரங்களை சரியான ஸ்தானத்திலிருந்து குறைத்தும் பின்பு அதிகமாகவும் பாடிக் கற்பித்தல் ..... மூன்று பாடவேளையாவது இத்தகைய பயிற்சிக்காக எடுத்துக்கொள்ளல் வேண்டும். இப் பயிற்சி சரியாக சுருதியுடன் ஸ்வரத்தை எவ்வாறு இணைப்பது என்பது பற்றிய தெளிவை மாணவருக்கு ஏற்படுத்தும்.

இசை கற்கும் சூழலுக்கேற்ப வகுப்புக்கள் அமையாதிருத்தல் எனும் போது மற்றைய பிரிவு மாணவர்களின் வகுப்பிற்கு அருகில் இசை வகுப்புக்கள் இருப்பது கற்கும் மாணவர்களுக்கும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் இடையூறாக அமைகிறது. ஏனைய வகுப்பு மாணவர்கள் தமது பாட வேளைகளில் கவனம் செலுத்த முடியாமல் போகிறது. எனவே இசைக்கல்வி கற்பதற்குரிய வகுப்பறை, காற்றோட்டம் ஆனதாயும் ஓர் பிரத்தியேகமான அமைவிடத்திலும் இருப்பது அவசியமாகிறது. சில பாடசாலைகளில் வகுப்பறையில்லாமல் மரங்களுக்குக் கீழே வகுப்புக்கள் நடத்தும் துர்ப்பாக்கிய நிலையும் காணப்படுகிறது.

மாணவர்களுக்கு உரிய கற்பித்தல் உபகரணங்கள் எனும்போது எல்லாப் பாடசாலைகளிலும் இசைக்கு ஆதாரமான சுருதிப்பெட்டி முதற் தேவையாக அமைகிறது. அத்தோடு மிருதங்கம் - வயலின் - டோல்கி - ஆர்மோனியம் போன்றவை பாடசாலைகளின் கற்றல் கற்பித்தலுக்கு அவசியமானவை. ஓர் குழு கேள்விற்கு வேண்டிய உபகரணங்கள் பாடசாலையில் இருத்தல் வேண்டும். அவை பொதுவாக அனேகமான பாடசாலைகளுக்கு கிடைப்பதிலலை.

ஆசிரியர்கள் பாடசாலைக்கு போக்குவரத்து மூலம் நீண்ட தூரம் செல்ல வேண்டி இருப்பின் அதன் காரணமாக ஏற்படும் களைப்பினால் பாடத்திட்டத்தைப் பூர்த்தி செய்வதில் ஆசிரியர்கள் கவனம் செலுத்துவதில்லை. இதற்கு கடமை உணர்வுடன் பிரத்தியேக வகுப்புக்கள் எடுக்கும் ஆசிரியர்கள் கவனம் செலுத்துவதில்லை. இதற்கு மாறாக கடமை உணர்வுடன் பிரத்தியேக வகுப்புக்கள் எடுக்கும் ஆசிரியர்களும் உள்ளனர். இத்தகைய பிரச்சினைகள் எல்லாம் கள ஆய்வு மூலம் கண்டறியப்பட்டுள்ளன.

ஆசிரியர் ஓர் பாட அலகிற்கு ஒதுக்கப்பட்ட பாடவேளைகளில் குறித்த நேரத்தை மாணவர்களுக்கு ஒதுக்குவது அதாவது தாளவர்ணம் பத்து பாட வேளை எனின் மூன்று பாடவேளைகளுக்குள் பூர்த்தி செய்வது ஸ்வரப்பகுதியை மாணவர்கள் புரிந்து கொள்ளும் வரை கற்பிக்காமல் சாகித்தியம் கற்பிப்பது இதனால் மாணவர்கள் தரம் குறைந்தவராக

உருவாகுகின்றனர். இத்தகைய தவறுகளைத் தவிர்த்து ஆசிரியர்கள் கடமை உணர்வுடன் செயற்படுவாரெனில் உயர்தர மாணவர்களின் தரத்தில் மாற்றம் உண்டாகும். இதனால் பல்கலைக்கழகத்திற்கு உள்வாங்கப்படும் மாணவர்களின் தரமும் உயர்வடையும்.

இசையை முறையாகக் கற்காமல் அடிப்படை பயிற்சிகள் பற்றி அறியாமல் உயர்தரப் பாடத்தை உள்வாங்குவது கடினமையான முயற்சியாகும். எனவே அடிப்படைப் பயிற்சிகளை நன்கு கற்றவர்களே இசையை உயர்தரப் பாடத்திற்கு கற்று நற்பயனை அடைய முடியும். ஆசிரியர்களுக்கு புதிய பாடத்திட்டத்திற்கான செயலமர்வுகள் கல்வி அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். மூன்று மாதத்திற்கு ஒரு முறை செயலமர்வுகள் நடாத்தப்பட வேண்டும். செயலமர்விற்கு ஆசிரியர்கள் தவறாது சமூகம் அளிக்க வேண்டும். இதனை அழகியல் கல்விக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்ட அதிகாரிகள் முக்கியமான கவனத்திற் கொள்ள வேண்டும்.

**முடிவுரை**

இசைக்கல்வி சம்பந்தமான விழிப்புணர்வை மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் ஏற்படுத்த வேண்டும். இயற்கையாக இசையில் ஆர்வம் மிக்க மாணவர்களை இனங்கண்டு இசை கற்பிக்கப்பட வேண்டும். கணிதம் - விஞ்ஞானம் தொழில்நுட்பம் இலக்கியம் போன்றவற்றை விரும்பிக் கற்க வழிகாட்டும் பெற்றோர் இசைக்கல்வியில் ஈடுபாடு ஏற்பட தமது குழந்தைகளை வழிப்படுத்தி மென் திறன்களை வளர்த்தல் வேண்டும். இத்தகைய பொறுப்பு வாய்ந்த விழிப்புணர்வு மற்றும் வலுவூட்டல் செற்பாடுகளின் ஊடாக உருவாக்கப்படுகின்ற மாணவர்களில் சிறந்த இசை ஞானமுடைய, கற்பனைத்திறன் மிக்க மாணவர்கள் உயர்தரத்தில் இசைக்கல்வியினை ஒரு பாடமாக தெரிவு செய்து தமது கற்கையினை சிறந்த பெறுபேற்றுடன் பூர்த்தி செய்வதனால் பல்கலைக்கழகங்களிலும், பல்கலைக்கழக கல்லூரிகளிலும் தேசிய கல்வியியற் கல்லூரிகளிலும் தமது பட்டக் கல்வியினை பெற்றுக் கொள்வதற்கு உசிதமானதாக அமைகிறது.

# பாடசாலையில் சங்கீத பாடம்



**கார்த்திகேசு குகபரன்.**
M.A, Mphil, MED
*விரிவுரையாளர், ஆசிரியகலாசாலை,*
*கோப்பாய்*

ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் ஏய உணர்விக்கும் என்னம்மை........."

கலைகள் அறுபத்துநான்கு, இக்கலைகளை சாதாரண கலைகள் என்றும், நுண்கலைகள் என்றும் இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம் அவற்றுள் சங்கீதம், நடனம், சித்திரம், சிற்பம், நாடகம் போன்றவை நுண்கலைகளுள் அடங்கும். இக்கலைகள் உள்ளத்தில் ஒருவகை உணர்வை உண்டுபண்ணி இன்பமளிக்க வல்லவையாகும். இக்கலைகளுள் இசைக்கலை மிக உன்னதமான உயர்ந்த இடத்தைப் பெற்றுள்ளது. கேட்பவரின் உள்ளத்தை இசைவிப்பதால் இக்கலைக்கு இசைக்கலையெனப் பண்டையோர் பெயர் வைத்தமை சாலவும் பொருந்தும். இசை என்றால் என்ன? என்ற வினாவிற்கு சிலப்பதிகாரத்தில்

யாழும் குழலும் சீரும் மிடறும்
தாழ்குரல் தண்ணுமை ஆடலொடு
இவற்றின் இசைந்த பாடல் இசையாகும் (சிலப்பதிகாரம்: 3: 26-29)
என வரையறை செய்கிறாஉ இளங்கேவடிகள்.

ஏனைய கலைகளை கற்றறிந்தவர்களும் இசையை கண்டும், கேட்டும் அனுபவிக்க முடியும். இசைக்கலையை கற்றோர், கல்லாதோர் என எவ்வித வேறுபாடுமின்றி அனுபவிக்க முடியும். மானிடரல்லாத பல உயிரினங்களும் பச்சிளம் பாலகர்களும் பாட்டின் பொருள் உணர்ந்து நயப்பதில்லை. பாடலின் ஒலி நயத்தைக் கேட்டே நயக்கின்றனர். சாதிமத பேதமற்றது இசை. எனவேதான் பாடசாலைக் கலைத்திட்டத்தில் இதை கட்டாய பாடமாக இணைக்கப்பட்டது.

பூரண கல்விக்கும், சிறந்த கல்வி வளர்ச்சிக்கும் இசை இன்றியமையாததாகும். 1972ம் ஆண்டு வரை இலங்கையின் கலைத்திட்டத்தில் அறிவுசார் கல்விக்கு மட்டுமே முக்கிய இடம் கொடுக்கப்பட்டிருந்ததை நீங்கள் அறிவீர்கள், இதனால் மாணவர்களும் முற்று முழுதாக புத்தகக் கல்வியிலேயே கவனத்தைச் செலுத்தி வந்துள்ளனர். இசையை இரசிக்கும் தன்மை, ஆக்க முயற்சி, கிரகிக்கும் திறன் ஆகியவற்றைத் தூண்டவல்ல எந்த விதச் செயற்பாடுகளும் அல்லாத ஒரு மாணவர் சமுதாயமே வளர்ந்து வருவதைக் காணக்கூடியதாக இருந்தது. மேலும் பாடவிதானத்தில் இல்லாத ஒரு மகிழ்வூட்டும் முக்கியமற்ற பாடமாக இசை கருதப்பட்டதோடு விளையாட்டுப் போட்டி, கலைவிழா, பரிசளிப்புவிழா, சமய விழாக்கள் போன்வற்றில் மட்டுமே

அதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டும் வந்துள்ளது. 1952ம் ஆண்டில் பாடசாலைகளில் அழகியற் கல்வி போதிக்கப்பட்டதெனினும் பரீட்சைக்குரிய கட்டாய பாடமாக சங்கீதம் இடம் பெறவில்லை. பாடசாலைக் கலை நிகழ்ச்சிக்கு மட்டுமே குறிப்பிட்ட சில மாணவர்கள் பயிற்றப்பட்டனர். நிகழ்ச்சிகள் முடிந்ததும் இசைப்பயிற்சியும் மறைந்து விடும் அளவுக்கு இசை புறக்கணிக்கப்பட்டது.

இந்தியாவில் இத்துறையில் பயிற்றப்பட்ட சிலர் வந்து தனிப்பட்ட கலாமன்றங்களை அமைத்து இசையைப் போதித்து வந்தனர். பணவசதியுள்ளவர்கள் மட்டுமே அவர்களிடம் சென்று கற்று வந்தனர். இதனால் பாடசாலைகளும் பின்னர் தங்களுடைய நிகழ்ச்சிகளுக்கு பணவசதியுள்ளவர்களின் உதவியையே பெற்று வந்துள்ளன. இதனால் வசதி படைத்த உயர்மட்ட சமுதாயம் மட்டும் சங்கீதத்தில் விருப்புக் காட்டியதோடு ஏனைய மட்டத்திற்கு இக்கலைகள் சென்று பரவக் கூடிய வாய்ப்பும் இருக்கவில்லை. இதனால் இசையில் திறமை படைத்த மாணவர்கள் இலைமறை காய்போல் காணப்பட்டனர்.

நாட்டின் சகல பிரசைகளுக்கும் அழகியற் துறையில் நயக்கும் திறன்கள், வளர்த்தெடுக்கப்படல் வேண்டுமென்ற புதிய கலைத்திட்டத்தின் நோக்கம், மேற்கூறப்பட்டதோர் தனியான செல்வாக்குச் செலுத்துவதை முடிவுக்குக் கொண்டு வந்தது. அத்துடன் பிள்ளைகளின் உடலியக்கங்களையும் கவனத்திற் கொண்டு அவர்களின் வெளிப்படுத்தும் ஆற்றல், நயத்தல் திறன், விமர்சிக்கும் திறன் ஆகியவற்றை முறையான அழகியற் கல்வி மூலமும் வளர்த்தெடுக்கலாம் எனவும் எதிர்பார்க்கப்பட்டது.

பலதரப்பட்ட பாடங்களைப் பயிலும் மாணவர்களுக்கு இசைக்கல்வி இன்பமூட்டுவதாக அமைகிறது. ஒரு மாணவரின் உடல், உள, சமூக, சமய பொருளாதார விருத்தியை வளர்ப்பதற்கும், விருத்தி செய்வதற்கும் இசை வழிவகுக்கிறது. அழகியற் கலைகளுள் இசை எல்லோரையும் இசைவிக்க வல்லதாக இருக்கின்றது. உடற் கல்வியில் ஈடுபடும் ஒரு மாணவன் இசைத்திறனை வளர்க்கக் கூடிய ஆரோக்கியத்தைப் பெறுகிறான். அழகியற் கல்வி பற்றிய அடிப்படைக் கல்வியை மாணவர்களுக்கு வழங்குவதன் மூலம் ஆக்கங்களைப் படைக்கும் உளச்சார்பினைக் கொண்ட பிள்ளைகளைக் கண்டறியலாம் என்பதையும் புதிய கல்வித்திட்டம் சுட்டிக் காட்டியுள்ளது. எனவே, அழகியற் பாடங்களாகிய சங்கீதம், நடனம், சித்திரம் ஆகியவற்றில் ஏதாவதொன்று ஆண்டு 6 தொடக்கம் ஆண்டு 11 வரை சகல மாணவர்களுக்கும் கட்டாயமாகக் கற்பிக்கப்படல் வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

பிள்ளைகளுக்கு நூல்சார் கல்வியை மட்டும் வழங்கி வந்த கலைத்திட்டம் 1972ம் ஆண்டு முதல் இதுவரை காலமும் இல்லாத முக்கிய இடத்தை அழகியற் கல்விக்கு அளித்துள்ளது. ஒரு பெரும்பாக்கியம் எனக் கூறலாம். இந்த ஆண்டு தொடக்கம் மாணவர்கள் தங்கள் திறமைகளை வெளிக்கொணர ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. அத்துடன் பிள்ளைகளின் நயத்தல் திறன்களை வளர்ப்பதற்கும் ஏதுவாக இருந்தது.

மாணவர் இயற்கையாகவே தங்கள் வீட்டுச் சூழலில் ஏற்கனவே அறிந்து கொண்ட தாலாட்டுப்பாடல் சமய சம்பந்தமான பாடல்கள், தொழிற் பாடல்கள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டே பாடத்திட்டத்தில் உள்ள இசை அமைக்கப்படல் வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது. ஒரு பிள்ளை தன் தாய் மொழிக்கும் பண்பாட்டிற்கும் மாத்திரமன்று, தன் சூழலுக்கேற்ற இசைகும் உரிமையுடையவனாகிறான். அத்துடன் இசை ஒரு சமூகத்தின் பற்பல தொழிற்துறையினரிடையே உள்ள வேறுபாடுகளை நீக்கவல்லது. அதாவது இசை மூலமும் தன் பெற்றோர், அயலவர், ஊரார் போன்றோர் புரியும் பல்வேறு தொழில்களையும் மாணவன் மதிக்கப் பழகுகின்றான்.

1972ம் ஆண்டு வெளியிடப்பட்ட ஐந்தாண்டுத்திட்டத்தில் அறிவுசார் கல்வியினால் முழுமையான ஆளுமை விருத்தியை மாணவரிடையே ஏற்படுத்த முடியாது என்பதை சுட்டிக் காட்டப்பட்டது. அத்துடன் முழுமையான ஆளுமை விருத்திக்குத் தொழில் முன்னிலைப்பாடம், அழகியற் பாடம் என்பன கலைத்திட்டத்தில் புகுத்தப்பட வேண்டுமென விதந்துரைக்கப்பட்டது.

1972ம் ஆண்டு புதிய கலைத்திட்டத்தில் அழகியலும் ஒரு பாடமாக புகுத்தப்படாமை குறிப்பிடத்தக்கதாகும். ஆண்டு 6 தொடக்கம் 11 வரை அழகியற் பாடங்களில் ஒன்றான சங்கீதம் கற்பிக்கப்படுவதற்குத் தேவையான பாடத்திட்டம் வழங்கப்பட்டது. அதற்கமைய ஆசிரியர் கைநூல்களும் தயாரிக்கப்பட்டு, பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டன. கர்நாடக இசை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான தேவையையொட்டி சேவைக்காலப் பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்பட்டன.

1975இல் நடத்தப்பட்ட தேசிய பொதுச் சான்றிதழ் பரீட்சையில் அழகியல் பாடங்களில் ஒன்றான கர்நாடக சங்கீதத்தைத் தெரிவுப்பாடமாகக் கொண்டு தோற்றும் முறை முதன் முதல் அமுலுக்கு வந்தது. பின்னர் 1977இல் க.பொ.த சாதாரண தரமாக மாற்றப்பட்டபோது இப்பாடம் தொடர்ந்தும் கலைத்திட்டத்தில் இடம் பெறுகின்றது.

மேலும் இக்கலைத்திட்டத்தினை சிறந்த முறையில் அமுல் செய்யும் முகமாக பாடசாலைகளில் விசேட அழகியற் கல்வி ஆசிரியர்களை நியமித்து அவர்களுக்கான விசேட பயிற்சிகளை ஆசிரியர் கல்லூரிகள் வழங்கின. தங்கள் ஆசிரியர் பயிற்சியில் வேறு பாடங்களை சிறப்புப் பாடநெறியாகத் தெரிவு செய்யும் ஆசிரியர்களுக்குக் கூட அழகியல் தொடர்பான அறிவிருக்க வேண்டுமென்ற காரணத்தினால் ஆசிரியர் கல்லூரிகளில் இவ்வழகியற் பாடங்கள் பொதுப் பாடங்களாகக் கற்பிக்கப்படுகின்றது.

1981ம் ஆண்டு வெளியிடப்பட்ட வெள்ளை அறிக்கையிலும் க.பொ.த உயர்தர வகுப்புக்களில் சங்கீதம் ஒரு தெரிவுப் பாடமாக இடம் பெற்றது. இதில் சித்தி பெறுபவர்கள் யாழ்ப்பாணத்தில் இராமநாதன் நுண்கலைக்கல்லூரி, விபுலானந்த இசை நடனக்கல்லூரி ஆகியவற்றுடன் சேர்த்து சங்கீத பாடத்தில் பட்டப்படிப்பின் கற்கை நெறியாக சேர்த்துக் கொள்வதற்கும் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது.

இவற்றுடன் தேசிய கல்வி நிறுவகத்தினால் நெறிப்படுத்தப்படும் பரந்த கல்விச் செயற்பாட்டின் கீழ் அழகியற் கல்விக்குரிய கருமங்கள் அதன் அழகியற் கல்வித்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அத்துறை ஆண்டு 6 தொடக்கம் 13 வரையுள்ள அழகியற் பாடத்திட்டங்களையும் திட்டமிடும் பெரும் பணியைக் கொண்டுள்ளது. அத்துடன் தேசிய கல்வி

நிறுவகத்தால் ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் தொலைக் கல்வித்துறை விசேட பாடநெறியாக அழகியற் பாடநெறிகளை தெரிவு செய்யும் ஆசிரிய மாணவர்களுக்கு சுயகற்றல் சாதனமாக மொடியூல்களையும் தயாரித்து வழங்கி வருகிறது.

குருகுல வாசத்தினால் மட்டும் விருத்தி செய்யப்பட்ட இசை இன்று பாடசாலைக்கல்வியினூடாகப் பரவலாக்கப்பட்டுள்ளது. ஒருவனை முழு மனிதனாக்க இசையின் பங்கும் இன்றியமையாத தென்பது தெளிவென்பதை பாடசாலைச் சங்கீதம் கற்பிக்கும் போது அங்கு நிகழும் சமய, சமூக, விழாக்களின் போதும், இசை, நடன, நாடகப் போட்டிகளின் வாயிலாகவும் நாம் காணலாம். இதனை இன்னும் சீரிய முறையில் மாணவரிடையே வளர்ப்பதற்காக இன்று திறமையுள்ள ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு, கற்பிப்பதற்கென விசேட பயிற்சியும், சேவைக்காலப் பயிற்சியும் கொடுக்கப்பட்டு வருவது எமது அரசு எடுக்கும் சிறந்த முயற்சியாகும்.

**கர்நாடக சங்கீதம் கற்பித்தலுக்குரிய பொது நோக்கங்கள் எனப்பார்த்தால்**

- கர்நாடக சங்கீதம் தொடர்பான தத்துவங்கள் வரலாறு என்பவற்றை அறிந்து கொள்ளல்.
- மாணவர்களிடையே இசைஞானத்தை விருத்தி செய்தல்.
- பாடுவதற்கும், இசைக் கருவிகளைக் கையாள்வதற்கும் உரிய திறனைப் பெறுதல்.
- ஸ்வர ஞானத்தை விருத்தி செய்தல்.
- இசையைக் கேட்டலின் மூலமும் பாடுவதன் மூலமும் இரசிக்கும் தன்மையினை மேம்படச் செய்தல்.
- இசைக்கலையினூடாக ஆக்கத்திறனை விருத்தி செய்தல்.
- இசையினூடாக கலாச்சாரப் பண்பாடுகளைப் பேணி, பாதுகாத்து, மதித்து, அடுத்த சந்ததியினருக்குக் கையளிக்கும் மனப்பான்மையினை வளர்த்தல்.
- மாணவர்களிடையே வெளிப்பாட்டுத்திறனை விருத்தி செய்தல்.
- இசை உருப்படிகளின் வேறுபாட்டினைத் தெரிவு கொள்ளலும், அவற்றை இனங்காணும் திறனை விருத்தி செய்தலும்.
- பலவித கிராமியச்சூழலுக்குரிய, நாம் வாழும் சூழலோடு தொடர்புடைய சமய அடிப்படையிலான இசை வகைகளை அறிந்து கொள்ளுதல்.
- எமது மிடறில் இருந்து எழுகின்ற ஓசையினால் உடம்பிலுள்ள அத்தனை நரம்புகளும் அதிர்வடைகின்றன. என்பதையும் மனிதனது உடம்பில் ஒரு வகை நாதம் பரவுகின்றதென்பதையும் உணர்ந்து கொள்ளல்.
- இசை கற்பதன் மூலம் சிறந்த ஆளுமையுடைய, சமூகப் பொருத்தபாடுடைய ஒருவரை உருவாக்குதல்.
- இசை ஒரு சர்வதேச மொழி என்ற வகையில் மனித சமுதாய ஒற்றுமைக்கும் மேம்பாட்டிற்கும் அது துணைபுரியும் என்ற மனப்பாங்கினை வளர்த்துக் கொள்ளல்.
- இசை வளர்ச்சிக்கு உதவி செய்த சங்கீத விற்பனர்களை இனங்கண்டு, மதித்து, கௌரவிக்கும் மனப்பாங்கை வளர்த்துக் கொள்ளல்.
- இசைக்கும் ஏனைய பாடங்களுக்குமிடையில் ஒன்றிணைப்பை ஏற்படுத்துதல்.
- இசை நிகழ்ச்சிகளை நடுநிலை நின்று விமர்சிக்கும் திறனைப் பெறல்.
- பல்வேறு இசை வகைகளை அறிதல், இனங்காணல்.
- மாணவரிடையே தம்மைத் தாமே சுய மதிப்பீடு செய்யும் ஆற்றலை விருத்தி செய்தல்.

போன்ற மாணவனுக்குரிய முக்கிய அடிப்படைப்பண்புகளை வளர்தெடுக்கின்றது என்பதில் ஐயமில்லை.

# இறைவன் விரும்பிய இசை



**ச. நித்தியானந்தம்**
*ஆசிரிய ஆலோசகர் (சங்கீதம்)*
*வலயக்கல்வி அலுவலகம்,*
*வலிகாமம்.*

நான்கு வேதங்களான இருக்கு யசுர், சாமம், அதர்வணம் ஆகியவற்றுள் சாமவேத சாரமே சங்கீதமாகும். தெய்வீகத்தன்மை பொருந்திய கலையாக இசைக்கலை விளங்குகின்றது. மனதை இறைவன்பால் இசைவிப்பதே இசையாகும். இசையின் பயனே இறைவன் தானே என்று தொன்று தொட்டுக் கூறப்படுகின்றது. ஓர் மனிதனுடைய மனத்திலே பக்தி உணர்வை எழுப்பி அதன் மூலமாக தெய்வீக அழகையும், பேரின்பத்தையும், மனசாந்தியையும் கொடுக்கவல்லது இசை. இத்தகைய இசைமூலமாகவே நாதாந்த சொருபமாக விளங்கும் இறைவனை அடைந்துள்ளனர். மானிடப்பிறவி எடுத்த ஒவ்வொரு மனிதனும் சங்கீதத்தை உபாசித்து மோட்சம் அடைந்துள்ளனர்.

அந்த வகையிலே இறைவனால் அருளப்பட்ட இசைவடிவங்கள் தமிழிலே ஏராளமாக இருக்கின்றன. இவ்வாறு அவை ஏராளம் தோற்றம் பெற இறைவனே காரணமாக விளங்குகின்றார். தேவாரம், திருவாசகம், திருப்புகழ், திருவருட்பா, நாலாயிரத்திவ்ய பிரபந்தம் என பலவாறான இசைவடிவங்கள் காணப்படுகின்றன. இதன்படி சாஸ்திரிய சங்கீதத்திற்கு மூல ஊற்றாக அமைவது தமிழிசையே ஆகும். இதனையே தமிழிசை தனியிசையே தரணியிலே முதலிசையே என்று சிறப்பிக்கப்படுகின்றன. தமிழிசையில் முதன்மையானது தேவாரம் ஆகும். தேவார இசையினை ஆளுடைய பிள்ளை என்று போற்றப்படும் சம்பந்தர் பெருமான் மூன்று வயதிலே உமையம்மையின் ஞானப்பாலுண்டு பாடியருளினார். இதனையே

**" புகலியர்கோன் அமுது செய்ய திருமுறைப்பால் சுரந்தளித்த**
**சிவகாம சுந்தரிதன் பூங்கழல்கள் போற்றி"**

என்ற பாடலடி காட்டுகின்றது.

இது போன்றே சரியா பாத நெறிநின்று சமணர்களின் செருக்கை ஒழித்த அப்பர் பெருமானும் தேவார இசை மூலம் இறைவனை நேசித்தார். இதனை வேதாரணியம் என்னும் திருமறைக்காட்டிலே பூட்டப்பட்ட கதவை திண்மாகத் திறந்தருள் செய்மினே என்று வேண்டி திருக்கதவு திறந்த சம்பவத்தைக் கூறலாம். இது போன்றே ஏராளமான அற்புதங்களை தம் இசை கொண்டே நிகழ்த்தியுள்ளனர்.

இதைவிட பித்தர் என்று வன்சொற்கள் கொண்டு வஞ்சித்துவம் அதனை மென் சொற்களாகக் கருதி என்னை பித்தா என்றே பாடு என்று சுந்தரமூர்த்தி நாயனாரிற்கு இறைவன் திருவருள் பாலித்த சம்பவமும் இறைவன் இசையை விரும்பியதை எடுத்துக்காட்டுகின்றன. இவ்வாறு இசையை நேசித்த இறைவனை சுந்தரர் தனது பதிகத்திலே ஏழிசையாய் ஏழிசையாய் இசைப்பயனாய் என்று சிறப்பித்துள்ளார்.

இசையின் பயனாக விளங்கும் இறைவனின் இணைப்பு நிழல் எவ்வாறு இருக்கும் என்பதை

"மாசில் வீணையும் மாலை மதியமும்......"

என்ற பதிகத்தீலே அப்பர் சுவாமிகள் மிக அழகாகக் கூறியுள்ளார். மனதிலே இரக்க உணர்வை ஏற்படுத்தவல்ல ஆற்றல் இசைக்கலைக்கு உண்டு என்பதனை இராவணன் சாமகானம் பாடி இறைவன் மனதை கவர்ந்த சம்பவத்தைக் கூறலாம். இதனையே இசையில் வல்ல இராவணனும் இசைத்த இசையில் தன்னை மறந்து விசையாய் ஊன்றிய விரலதனை விரைவாய் எடுத்தார் என்று வேதங்கள் கூறுகின்றன.

அந்த வகையில் இசையை நன்றாய் உணர்ந்ததன் மூலமாகவே இறைவனை எளிதில் அடைந்தோம் என்று அருளாளர்கள் பலரும் பாடியுள்ளனர். அவ்வாறாக தேனிலும் அரிதான திருவாசகத்தைப்பாடி மாணிக்கவாசகசுவாமிகள் இறைவனை கண்டுள்ளார். இத்தகைய பெறுதற்கரிய சிறப்பினையே அப்பரும் சுந்தரரும் ஆளுடைப்பிள்ளையும் அருணகிரிநாதரும் அருட்ஜோதி வள்ளலும் எப்படிப்பாடினரோ என்று வியந்து பாடியுள்ளனர். இவ்வாறு தமிழிசைப்பண்களே சாஸ்திரிய சங்கீதத்திற்கு வழிகாட்டியது எனலாம்.

இதன்படி இறைவன் விரும்பிய இசை எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை உணர்த்துவதற்காக ஒரு சமயம் மதுரையிலே ஏமநாதன் என்ற ஆணவம் கொண்ட இசைக்கலைஞனின் இசையை விரும்பாது தன்னையே அன்றாடம் நினையும் பாணபத்திரனின் எளிமையான இசையே தன்விருப்பம் என்பதை உணர்ந்தானே விறகு விற்பவனாக வந்து தன் இசைத்திறனால் ஏமநாதனை எழுந்தோடச் செய்தவர் எம் பெருமான் சிவப்பரபொருளே ஆவார். இது போன்றே வைணவசமயத்திலும் ஆழ்வார்கள் மகா விஷ்ணுவை இசையால் வசப்படுத்தி உள்ளனர். இத்தகைய சிறப்புக்கள் பலவற்றையும் தன்னகத்தே கொண்டுள்ள இசையின் மேன்மையினையே தற்காலக்கவிஞர்கள் இசையால் வசமாக இதயமேது என்று பாடியுள்ளனர்.

இவ்வண்ணமாக தமிழிசையால் வளர்த்தெடுக்கப்பட்ட லலித கலைகளுள் மேன்மையானதும், சிரவணக்கலை என்று போற்றப்பட்ட சங்கீதக்கலை சங்கீத மும்மூர்த்திகளினால் வளர்த்தெடுக்கப்பட்டது. அந்த வகையில் தியாகராஜசுவாமிகள், முத்துஸ்வாமிதீட்சிதர், சியாமாசாஸ்திரிகள் ஆகிய மூவருமே மும்மூர்த்திகளாவார். அதனடிப்படையில் 96 கோடி முறை ராம நாமத்தை உச்சாடனம் செய்து ராம பட்டாபிஷேக காட்சியை கண்ட தியாகராஜசுவாமிகளின் இசையுலக வாழ்வில் ஏராளமான இறைவன்

# வவுனியா வடக்குக் கல்வி வலய
# முழு நிலாநாள் கலைவிழா - 2018
# நிகழ்ச்சிகளில் சில...











விரும்பிய இசைப்பாட்டுக்களை பாடியருளினார். அந்தவகையிலே திருப்பதி தரிசனத்தில் திரைமூடி இருந்த போது "தெரதீயகராதா.... என்ற கிருதியைப்பாட திரையகன்றது. இச்சம்பவம் இறைவனுக்கும் இசைக்கும் உள்ள தொடர்பை எடுத்துக்காட்டுகிறது.

இவரைப்போன்றே திருத்தணி சென்ற முத்துஸ்வாமி தீட்சிதருக்கு முருகப்பெருமான் வயது முதிர்ந்த முதியவர் வேடத்தில் வந்து வாயிலே கற்கண்டைப்போட தீட்சிதர் மாயாமாளவ கௌளைராகத்தில் " ஶ்ரீ நாதிகுருகுகோ..." என்ற கிருதியைப் பாடினார். அத்துடன் தீட்சிதர் ஒரு நாள் எட்டயபுரம் சென்றபோது அங்கு மழை இன்மையைக்கண்டு அமிர்தவர்ஷனி இராகத்தில் "ஆனந்தமாம்மிருத கர்ஷனி அமிர்தவர்ஷனி......" என்ற கிருதியைப்பாடி மழையை பொழியச் செய்துள்ளார். மற்றும் இறைவனின் துணை கொண்டு கோவிலூர் இறைவனை தரிசிக்க சென்றபோது பூசாரி கதவை மூடிச் சென்றபோது " அக்சயலிங்க" என்ற சங்கராபரண கிருதியைப்பாடி கதவைத்திறந்தார். இவ்வாறான சம்பவங்கள் இறைவனுக்கும் இசைக்கு முள்ள தொடர்பைக் காட்டுகின்றன.

அடுத்து சியாமகிருஷ்ண என்ற இளமைத்திருநாமத்தோடு விளங்கிய சாஸ்திரிகளும் இசையால் இறைவனை வசப்படுத்தியுள்ளார். இவரே மதுரை மீனாட்சி அம்பாள் மீது நவரத்தின மாலை கிருதியைப் பாடியுள்ளார். இவரின் இசைப்பாடல்களில் இராகமுத்திரை விளங்குவது சிறப்பாகும். உதாரணமாக "நன்னுப்ரோவ லலிதா.... என்ற லலிதா ராக க்ருதியை குறிப்பிடலாம்.

இவர்களைப் போன்றே தாளப் பாடல்களின் சந்தங்களின் நயங்கள் மிகுதியால் சந்தப்பாவர் என்று போற்றப்படும் அருணகிரியாரும் இறைவனும் இசையால் தொடர்புபடுகின்றனர்.

"முத்தைத்தரு பத்தித் திருநகை......" என்று முருகப்பெருமானே அடியெடுத்துக் கொடுத்து அருணகிரிநாதரை திருப்புகழ் பாடச் செய்துள்ளார். அருணகிரிநாதரும் தன் இளமைக்கால வாழ்வில் இழிவான நடத்தைகளை செய்த போதும் அதனை மாற்றி முருகன் தன் புகழை பாடவைத்துள்ளார். இதனை அவரின் திருப்புகழ் பாடல்களிலேயே நாம் காணமுடிகின்றது.

அதாவது

**" அசன மிடுவார்கள் தங்கள் மனைகள் தலைவாசல்நின்று**
**அனுதினமும் நாணமின்றி அழிவேனோ...."**

என்ற பாடலடி விளக்குகின்றது.

இவ்வாறு இறைவனால் விரும்பப்பட்ட இசையினை இந்தியாவிலும், இலங்கையிலும், ஏனைய மேலைநாடுகளிலும் இசை வளர்க்கப்படுகின்றது. இசையே மானிடர்களின் பொது மொழி. ஒவ்வொரு உள்ளத்தையும் உருக்கும் மொழி என்று ஆராய்ச்சிகள் கூறுகின்றன. இசை என்பது ஒரு தனி மொழி. வார்த்தைகளினால் வெளிவிடமுடியாத கருத்துக்களை இசையின்மூலம் தெளிவுபடுத்தலாம். இத்தகைய இசைவளம் ஏழேழுபிறப்பிற்கு முன்பு இறைவனிற்குத்தேனாபிஷேகம் செய்தோர்க்கே இறைவன் இசையை சொத்தாக அருள்வார் என்று கூறப்படுகின்றது. தற்காலத்திலே இசைவளர்க்கப்பட வேண்டிய தேவைப்பாடு காணப்படுகிறது. எனவே இன்னிசை வேந்தன் இறைவன் விரும்பிய இசையை நாமும் நேசிப்போம்.

# மாணவர்களின் இசைஞானத்தை விருத்தி செய்வதற்குக் கையாள வேண்டிய பயிற்சிகளும், முறைகளும்



**திருமதி. தாரணி சிவகரன்**
*ஆசிரியர், கர்நாடக சங்கீதம்,*
*யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி.*

சங்கீதம் பயிலும் மாணவர்களின் சங்கீதஞானத்தை விருத்தி செய்ய சங்கீத ஆசிரியர் பல யுத்திமுறைகளைக் கையாள வேண்டியது அவசியமாகிறது. தரம் 6 முதல் தரம் 13 வரையான சங்கீத மாணவர்களைக் கலைத்திட்டத்தின் ஊடாகப் படிப்படியாகச் சங்கீத ஞானத்தில் விருத்தி செய்தல் வேண்டும் அந்த வகையில் சுருதிஞானம், ஸ்வரஞானம், ராகஞானம், தாளஞானம் என்பவற்றினூடாக சங்கீத ஞானத்தை விருத்தி செய்வது பற்றி நோக்குவோம்.

**1. சுருதிஞானம், ஸ்வரஞானம்**

சுருதி ஞானம் என்பது ஆதாரசுருதியையோ அதற்கு மேற்பட்ட ஸ்வரத்தையோ குறிப்பிட்ட சுருதியில் பாடுவதாகும். சுருதி ஞானம் நல்ல நிலையில் இருக்கும் ஒரு மாணவனுக்கு கேள்வி ஞானத்தில் கண்டுபிடிக்கும் ஆற்றலும் இருக்கும். ஆதார ஸட்ஜத்தைக் கொண்டு பாடக்கூடியனவாகவும் இருப்பான்.

இவ்வாறான சுருதி ஞானத்தை உண்டாக்க முதலில் வகுப்பறையில் ஆசிரியர் இரண்டு நிமிடங்களுக்குச் சுருதியைக் கேட்கச்செய்து, பின் ஒவ்வொருவராக ஸட்ஜத்தைச் சேர்க்கச்செய்து, பின் பஞ்சமத்தைச் சேர்க்கச் செய்து, அதைத் தொடர்ந்து தார ஸட்ஜத்தை சேர்க்கச் செய்து, இறுதியில் அனைவரும் சேர்ந்து ஸ, ப ,ஸ் எனச் சுருதி சேர்த்தல் வேண்டும். இவ்வாறே ஆரம்ப வகுப்புக்களில் சில தினங்கள் பயிற்சி வழுங்கல் வேண்டும்.

ஸ்வரவரிசைகள், ஜண்டை வரிசைகள், அலங்காரங்கள் என்பவற்றை முதலாம், இரண்டாம் காலங்களில் ஆறுதலாகப் பாடப்பயிற்சி வழுங்கிப் பின் நன்கு இரண்டு காலங்களிலும் பாடச் செய்தல் வேண்டும். அதைத் தொடர்ந்தே மூன்றாம் காலப்பயிற்சியினை வழுங்க வேண்டும். இவ்வாறு மேற்கொள்ளின் ஸ்வரஸ்தான சுத்தம் ஏற்படும். எனவே ஆரம்ப அப்பியாச வரிசைகளை நன்கு பயிற்சி செய்வதன் மூலம் மாணவரின் சுருதி ஞானத்தை வளர்க் முடியும். மேலும் வகுப்பறையில் சுருதியில் குறைபாடுடைய மாணவர்களைச் சுருதி சேரும் மாணவருக்கிடையில் அமர்த்தி பயிற்சியில் ஈடுபடுத்தும் போது சுருதி சேருதல் படிப்படியாக விருத்தியடையும். மேலும் ஒரு வாத்தியத்தில் ஸ்வரங்களை வாசித்து, அந்த ஓசையுடன் ஆசிரியர் சேர்ந்து பாடி, மாணவர்களையும் சேர்ந்து பாடச் செய்தல் மூலம் ஸ்வர ஞானத்தை மேலும் வலுப்படுத்தலாம். கோமள, தீவிர ஸ்வரங்களைப் பேதப்படுத்திக் காட்டலாம். இவ்

வேளையில் கோமள ஸ்வரங்களைக் கொண்ட இராகம் தோடி என்றும், தீவிர ஸ்வரங்களைக் கொண்ட இராகம் கல்யாணி என்றும் கூறுவதன் மூலம் இராக ஸ்வரஸ்தானங்களையும் மனதில் பதிவிக்க முடியும். மேலும் கீதங்களைக் கற்பிக்கும் பொழுது ஸ்வரத்தை ஆசிரியர் பாட சாஹித்தியத்தை மாணவர் பாட கீதத்தை இலகுவில் மாணவர்களுக்குக் கொள்வர். இவ்வாறே சிறுவர் பாடல்களிலும் அமையும். இவ்வாறான படிப்படியான வளர்ச்சி வர்ணத்திலும் பயனைத் தரும்.

**2. ராகஞானம்**

சுருதிஞானம், ஸ்வரஞானம் கொண்டவர்கள் ராக ஞானத்தையும் பெற்று விடுவார்கள். ராகஞானம் என்பது கேள்வி ஞானத்திலும் தங்கியுள்ளது. உயர்தரத்தில் சங்கீத பாடம் பயிலும் மாணவர்கள் ராக ஞானத்தில் தேர்ச்சி பெற்றிருத்தல் அவசியமாகும். ராகஞானத்தை விருத்தி செய்ய ஆசிரியர் ராகங்களைக் கண்டுபிடிக்கும் திறனை வளர்க்கச் செய்தல் வேண்டும். அந்த வகையில் முதலில் இலகுவான இராகங்களைத் தெரிந்தெடுத்து அவற்றிலுள்ள உருப்படிகள் சிலவற்றைப்பாடிக்காட்ட வேண்டும். உதாரணமாக சண்முகப்பிரியா இராகத்தில் விளையாட இது நேரமோ, சரவணபவ, முருகா வர்ணம், முத்தருபத்தித்திருநகை, பார்வதி நாயகனே போன்ற உருப்படிகளையும், மோஹன இராகத்தில் மயில்வாகனா,வரவீணா, திருவாசகம், காலனிடத்தணுகாதே போன்ற உருப்படிகளையும், மாயாமாளவகௌளை இராகத்தில் தேவதேவ, துளசீதள, ஆடிக்கொண்டார், கணநாதாகழல் தொழுதேன் போன்ற உருப்படிகளையும் சங்கராகரண இராகத்தில் வெண்பா, பாஹிராமச்சந்திரா, உற்றுமை சேர்வது போன்ற உருப்படிகளையும், ஆனந்த பைரவி இராகத்தில் திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, சிங்காரவேலவன் ராவேமே போன்ற உருப்படிகளையும் பாடிக்காட்டி இராகங்களை இனங்காணப்பயிற்சிகள் வழங்கலாம். ஒரு இராகத்தைக் கேட்ட மாத்திரத்திலேயே இன்ன ராகம் எனக் கூறுவது ராகஞானமாகும். ராக ஞானம் உள்ளவர்கள் நன்கு பாடும் திறனும் கொண்டவர்கள். எனவே மாணவருக்கேற்ற வகையில் ராகங்களைப் பாடிக்காட்டியோ, பதிவுகளில் கேட்கச் செய்தோ வாத்தியங்களில் வாசித்தோ, ராகஞானத்தை வளர்த்தல் வேண்டும்.

**3. தாளஞானம்**

இயல்பாக, தாளஞானம் "உள்ள மாணவர்கள் காணப்படுகிறார்கள். இவர்கள் லயப்பிடிப்பானவர்கள். தாளஞானம் குறைந்தவர்கள் தாளத்தினைப் பிழையாகப் போடுவார்கள். பாட்டுடன் தாளம் ஒட்டாது. இவ்வாறான மாணவர்களைத் தாளத்தினை உயர்த்திப்போடச் சொல்வதன் மூலமும் சரி செய்யலாம். தாளத்தினைச சிறுவகுப்புகளிலையே சரி செய்து விடுதல் வேண்டும். இசைக்கு சுருதி, லயம் இரண்டும் முக்கியமானது (சுருதி-மாதா-லயம்-பிதா). சில கீர்த்தனைகள் 1/2 இடங்களில் அமைந்து காணப்படுபவை. அவற்றை சம இடத்திற்கு மாற்றியமைத்துக் கற்பிப்பதனால் சகல மாணவரும் பாட வழி வகுக்கலாம். எனவே மாணவரின் சங்கீத ஞான விருத்தியில் ஆசிரியரின் சிறப்பான செயற்பாடு மிகவும் அவசியமாகின்றது. கற்றலில் மட்டுமன்றி, போட்டிகளிலும் மாணவர்களைப் பங்குகொள்ளச் செய்வதனால் மாணவரின் திறன் விருத்தியடைகின்றது.

**பாடப்பாட இராகம் பயிற்றப்பயிற்ற ஞானம்**

# இறைவனும் இசையும்



**ம. கேசரன்**
A/L (2019),
*யா / கொடிகாமம் திருநாவுக்கரசு,*
*மத்திய கல்லூரி.*

இசைக்கு மயங்காத இதயம் எதுவும் இல்லை. ஆறறிவு படைத்த மானிடர்கள் மட்டுமல்லாது மற்ற உயிரினங்களும் கூட இசைக்குப் பணிவதைக் காண்கிறோம். வேய்ங்குழல் இசைக்கு பசுக்கூட்டமும், மகுடியின் இசைக்கு நாகமும் மயங்குவதைப் பார்க்கின்றோம் சர்க்கஸ் கூடாரங்களிலும் தாள வாத்தியங்களுக்கு ஏற்றவாறு யானை, குதிரை போன்ற விலங்குகளும் ஆடுவதைப் பார்க்கின்றோம். எனவே இசை என்பது அனைத்து உயிரினங்களையும் கவர்ந்து இழுக்கக்கூடிய காந்த சக்தியாகத் திகழ்கிறது.

நமது நாட்டில் மட்டுமல்லாது மேற்கத்திய நாடுகளிலும் அந்தந்த நாட்டின் கலாசாரங்களுக்கு ஏற்றவாறு இசைக் கருவிகளை இசைத்துப் பாடுகிறார்கள். ஆனால் இந்த இசைகளுக்கெல்லாம் அடித்தளமாக அமைந்திருப்பது கர்நாடக சங்கீதம். எந்தப் பாடலைப் பாடினாலும் அதற்கு மூல காரணமாக விளங்குகின்றது. இராகம், தாளம், சுருதி, குரல்வளம் இவை நான்கும் சரிவர அமையாமல் இசைக்கப்படும் பாடலை எவருமே ரசிக்க முடியாது. இசையை ரசிப்பதற்கு இசை ஞானம் தேவையில்லை. நல்ல பாடலைக் கேட்கும் போது இசை ஞானமே இல்லாத பாமர மனிதன் கூடத் தலையை ஆட்டித் தாளம் போட்டு ரசிக்கின்றான். ஆனால் இவருடைய ரசிப்பு ஆழமற்ற தற்காலிக ரசிப்பாகும். ஒரு பாடலை ஆழ்ந்த ஞானத்துடன் இரசிப்பதற்கும் பயணம் செய்கின்ற போது பேரூந்தில் ஒலிக்கின்ற பாடலைக் கேட்டு விட்டும் படியிறங்கிச் செல்வதற்கும் வேறுபாடு உண்டல்லவா.

இப்படிப்பட்ட இசையானது மனித வாழ்வின் ஒவ்வொரு பருவத்திலும் பங்கு பெறுகிறது. அன்னையின் வயிற்றில் இருக்கும் குழந்தை கூட: இசையை இரசிக்கின்றது. குழந்தையை தொட்டிலில் இட்டுத் தாலாட்டும் போது தாய் தாலாட்டுப் பாடல் பாடுகிறார். அந்தப் பாடலைக் கேட்டு குழந்தை அழுவதை நிறுத்திவிட்டு அயர்ந்து உறங்குகின்றது. இந்தத் தாய் கர்நாடக இசையை முறைப்படி பயின்று வந்தா பாடுகிறாள்? அவள் பாடிய அந்த தாலாட்டுப்பாடல் என்ன இராகத்தில் அமைந்தது என்பது கூடத் தெரியாது. இந்த இடத்திலிருந்து தான் மானிடப் பிறவிக்கும் இசைக்கும் தொடர்பு ஏற்படுகிறது. தொட்டில் குழந்தையை தாலாட்டும் போது

பாடுவது நீலாம்பரி இராகத்திலிருந்து தொடங்கியது. ஒருவன் வளர்ந்து வாலிப வயதை அடைந்து திருமண நாளில் மங்கல வாழ்த்து என்பது ஆனந்தபைரவி என்னும் ராகத்தில் பாடப்படுகிறது. முன்னைய அரசர்கள் போர்க் காலங்களில் போர்க் களத்திற்கு செல்லும் போது கம்பீர நாட்டை என்னும் ராகம் இசைக்கப்படுகிறது. மனித வாழ்வின் இறுதி நாளில் அவலச்சுவையான முகாரி என்னும் ராகத்தில் ஒப்பாரிப் பாடல் இடம் பெறுகிறது. இவ்வாறு பாடப்பெறும் பாடல்களுக்கான அடிப்படை கர்நாடக இசை தான். இந்த இசை அனைத்து உயிரினங்களையும் கவர்ந்து மயக்கச் செய்வதனால் தான் நமது பாரம்பரியமான இசை வெளிநாடுகளிலும் பெயர் பெறுகிறது. இதனால் தான் இசையால் மயங்காத இதயம் எது? என்றும், கல்லும் இசையால் கனியாகும், முள்ளும் இசையால் மலராகும் என்று ஒரு கவிஞர் பாடியுள்ளார்.

ஒரு முறை ராவணன் சிவபெருமாானை நேரில் வரவழைக்க தனது வீணையில் காம்போதி ராகத்தை இசைக்கத் துவங்கினான். இவனது இசையைக் கேட்டு ஈஸ்வரனும் உமையாளும் மெய்மறந்து அமர்ந்து விட்டார்கள். வெகு நேரமாகியும் இறைவன் காட்சி கொடுக்காததால் ராவணனும் வீணை இசைப்பதை நிறுத்தவில்லை. காலையில் வீணை இசைக்க தொடங்கியது. மாலை வரையிலும் தொடர்கிறது. ராவணனுடைய விழிகளிலும், விரல்களிலும் குருதி கொப்பளிக்கிறது எனினும் இசையை நிறுத்தவில்லை. வீணையில் உள்ள கம்பிகள் அறுந்து ஒவ்வொன்றாக சுருள்கின்றன. கடைசிக் கம்பியும் அறுந்துவிட்டது. அனைத்துக் கம்பிகளும் அறுந்து சுருண்ட போதிலும் ஆன்மீக உள்ளம் கொண்ட வேந்தன் சிவனை கண்ணால் கண்டு தரிசிக்காமல் விடமாட்டேன். என வைராக்கியத்தினால் தனது வயிற்றைக் கிழித்து குடலை வெளியே இழுத்து தனது இடதுகை விரல்களால் வரிசையாகக் கோர்த்து இழுத்துப் பிடித்து அதில் தொடர்ந்து காம்போதி இராகத்தை இசைத்தான். அவனுடைய தீவிரமான பக்தியை கண்டு சிவபெருமான் காட்சியளித்ததாக கூறப்படுகிறது.

ஈஸ்வரனை பாடித் துதிக்க காம்போதி இராகம் மட்டுமல்லாது. கரகரப்பிரியா, சங்கராபரணம், சகானா ஆகிய இராகங்களிலும் பாடலாம். உமா மகேஸ்வரியான பார்வதி தேவிக்கு உகந்த இராகமாக பைரவி, சிந்து பைரவி, அடானா, கல்யாணி ஆகிய இராகங்களில் பாடலாம். ஸ்ரீமத் நாராயணனை பூபாள இராகத்தில் பாடித் துதி செய்ய வேண்டும்.

இசைக்கும் இறைவனுக்குமான தொடர்பை தெய்வங்களின் கைகளில் உள்ள இசைக் கருவிகளைக் கொண்டு அறியலாம். சிவபெருமான் கையில் உடுக்கையும், கண்ணன் கையில் புல்லாங்குழலையும், சரஸ்வதி கையில் வீணையும், நாரதர் கையில் தம்புராவும் சிவகணங்களில் கையில் சங்கும் இருப்பதைக் காண்கிறோம். இப்படிப்பட்ட இசைக்கருவிகளைக் கொண்ட இறைவனும் இசையும் பிரிக்க முடியாத ஒன்று என்பதை அறியலாம்.

# சங்க நாதமே முழங்கிடு



**மீசாலையூர் புனிதகுமாரி ஈழநேசன்**
*ஆசிரிய ஆலோசகர் (சங்கீதம்),*
*தென்மராட்சிக் கல்வி வலயம்.*

சங்க நாதமே முழங்கிடு
சந்ததம் பொங்க முழங்கிடு
சஞ்சலங்களை விலக்கிடு
சாந்தி நிலவ தினம் முழங்கிடு

அன்பே உலகை ஆண்டிட முழங்கிடு
ஆண்டவன் ஒருவனென்றேற்றிட முழங்கிடு
அறநெறிகளுமே மலர்ந்திட முழங்கிடு
ஆறுவது சினமென்று வாழ்ந்திட முழங்கிடு

இனியொரு விதி செய்வாய் மனிதா என முழங்கு
இன்பங்கள் தோன்றிட இதயங்கள் விரிந்திட
ஒன்றாகுவோம் அமைதித் தேரின் வடம்
நன்றாகவே பிடித்துமே வென்றிட
(சங்கநாதமே)

மனிதனை மனிதன் மதித்திடும் - நல்ல
மாண்பது மலர்ந்திட முழங்கிடு
கனவு தருமன்பும் கருணையும் பணிவும்
கற்றதென் பயனென்று முழங்கிடு
இனியொரு விதி செய்வாய்.........
(சங்கநாதமே)

இன மத பேதங்கள் ஒழிந்திடவேண்டும்
இவ்வுலகத்தின் ஏக்கம் நின்றிட வேண்டும்
இயற்கையே இறைவன் மொழி எனப்போற்றி
வளமுடன் நலமுடன் வாழ்ந்திடவேண்டும்
இனியொரு விதி செய்வாய்.....
(சங்கநாதமே...)

# கிளிநொச்சி கல்வி வலய
# முழு நிலா நாள் கலைவிழா - 2018
# நிகழ்ச்சிகளில் சில...

















# ஆளுமை வளர்க்கும் அழகியற் கல்வியின் அவசியம்

**திருமதி சிறிதேவி கண்ணதாசன்.**
சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்
நடனம்
மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்



அழகு, முருகு எனும் சொற்களிலிருந்து அழகியல், முருகியல் எனும் சொற்பதங்கள் உருவாகின. அழகு என்பது பார்ப்பவர் கண்களைப் பொறுத்தது என்றும் அவரவர் புலன்களுக்கு இன்பம் பயக்கவல்ல சாதனமாக அமைவதால் அவற்றை அழகியல் என்றும் கூறப்படுகிறது. அழகியல் என்பது

"அழகின் தன்மையை ஆராய்வதும், கலைப்படைப்புக்களில் அழகை இனங்கண்டு இரசிப்பதும், சுவையுடன் படைப்புக்களைப் படைப்பதும் பற்றிய இயலாகும்." – Wikipedia

ஆயகலைகள் அறுபத்துநான்கு என்று குமரகுருபரசுவாமிகள் பாடியுள்ளார். இந்த 64 கலைகளில் முக்கியமானதும் மனிதனுக்கு இன்ப உணர்ச்சியை ஊட்டவல்லதுமான கலைகள் அழகியற்கலைக்குள் உள்ளடங்குகின்றன.

முருகியல் உணர்வின் முழுவளர்ச்சியில் மனிதனின் முழுமை வளர்ச்சி தங்கியிருக்கும் எனக் கிரேக்க தத்துவஞானி "பிளேட்டோ" குறிப்பிடுகின்றார். தனது கல்விக்கூடத்தின் நுளைவாயிலில் "கேத்திர கணிதம் அறியாதான் இங்கு நுளையாதிருப்பானாக."என்னும் வாசகத்தைப் பொறித்து எவ்வகைக் கல்விக்கும் கேத்திரகணிதம் அடிப்படையானது என்ற கருத்தை முன்வைத்த ஓர் அறிவியல் சார்ந்த கல்வித்தத்துவஞானியான பிளேட்டோவின் சிந்தனையில் முருகியல் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டமையிலிருந்து ஒரு மனிதனை முழுமையாக்குவதற்கு அழகியற்கல்வியின் பங்கு அளப்பரியது என்பது புலனாகின்றது என கல்வித்தத்துவம் எனும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறே கல்வியின் நோக்கங்களை வரையறை செய்த கல்வியியலாளர்கள் அதன் பிரதான நோக்கமாக ஆளுமை வளர்ச்சியைக் குறிப்பிட்டுள்ளனர். ஒன்றிணைந்த ஆளுமை வளர்ச்சிக்கும் சமநிலையான சிந்தனைக்கும், ஆக்கமலர்ச்சிக்கும், மனவெழுச்சிப் பயிற்சிக்கும் அழகியல் அவசியம் என்றும் ஆய்வுகளின் அடிப்படையில் அழகியற்கல்வியின் வழியாக வலது மூளை வளமாக்கப்படும் போது மூளையின் ஆற்றலில் அதிகரிப்பு ஏற்படவும் மனித

ஆளுமையில் சமநிலையான ஒருங்கிணைப்பு ஏற்படவும் வாய்ப்பு ஏற்படுகிறது என்றும் பேராசிரியர் சபா. ஜெயராசா அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

அண்மைக்காலங்களில் உலகமயமாதலின் விளைவாக நாட்டிலே கலை, கலாசார, பண்பாட்டுச் சீரழிவுகள் அதிகரித்து வருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இதன் விளைவுகள் பாடசாலை மாணவர்களிடையே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றமை கண்கூடாகக் காணமுடிகின்றது. அதிகரித்து வரும் சினிமா மோகம், முகப்புத்தகங்களின் பிரமாண்டமான வளர்ச்சி, வெளிநாட்டு நாகரிகங்களின் ஆதிக்கம் போன்ற பல விடயங்கள் இந்தச் சீரழிவுகளுக்கெல்லாம் அடிகோலுவனவாக அமைகின்றன. இதன்பேறாக பாடசாலை மாணவரிடையே சமய நம்பிக்கைகள், கலைபண்பாட்டு வெளிப்பாடுகள், விழுமியப்பண்புகள், பயனுள்ள பொழுதுபோக்குப்பழக்கங்கள் போன்ற சமூகத்தில் நற்பிரஜையாக வாழ வழிவகுக்கும் பண்புகள் படிப்படியாக அருகி வருகின்றமை யாவரும் அறிந்ததே.

இன்றைய சிறார்கள் நாட்டின் நாளைய தலைவர்கள். எனவே இவற்றுக்கெல்லாம் வகை கூறவேண்டியவர்களாக பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மற்றும் பெற்றோர்கள் விளங்குகின்றார்கள். மாணவரிடம் பொதிந்துள்ள திறன்களையும் ஆற்றல்களையும் கண்டு கொண்டு அவற்றை வெளிக்கொணர வேண்டிய பொறுப்பு ஆசிரியர்களிடம் உள்ளது. மாணவர்களிடையே காணப்படும் அறிவு, திறன், மனப்பாங்கு ரீதியான வளர்ச்சியிலும் கலாசார பாரம்பரியங்களை இளைய பரம்பரையினருக்கு வழங்கும் நிறுவனமாக பாடசாலைகள் விளங்குகின்றன.

அந்தவகையில் மாணவனொருவன் பாடசாலையில் காலடி எடுத்து வைத்த நாள் முதல் அவன் பல்வேறுபட்ட செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு வழிசமைப்பது பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படும் பாடவிதான ஒழுங்கமைப்பு முறையாகும்.

"மாணவரின் உளவியற் தேவைகள், கிடைக்கப்பெறும் வளங்கள், சமகால கலாசாரப் போக்குகள் ஆகியவற்றுக்கமைய பாடசாலையினால் திட்டமிடப்படும் கல்விக்கருமமே பாடவிதானமாகும்."-David Varvic

எனவே இதன்படி பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படும் இணைபாடவிதானச் செயற்பாடுகளில் அழகியற் கல்வி தொடர்பான செயற்பாடுகள் மிக முக்கியமானவையாக விளங்குகின்றன. கற்றல் என்பது அனுபவத்தினூடாக அறிவைப் பெறுதலாகும். பாடசாலைகளில் தனியாள் வேறுபாடுடைய மாணவர்கள் பலர் பல்வேறு திறன்களைக் கொண்டவர்களாகக் காணப்படுவர். தனியே அறிகைசார் கற்றலை மட்டும் மேற்கொள்ளாமல் மாணவர்களிடம் மறைந்து கிடக்கும் ஆற்றல்களை வெளிக்கொணர இந்த அழகியற் செயற்பாடுகள் உதகின்றன.

தற்காலத்தில் தரமான கல்வியை வழங்கி பயனாளிகள் பெருமிதம் கொள்ளும் வகையில் பாடசாலைகள் விளங்க வேண்டும் என்று கல்விக்கொள்கைகள் வலியுறுத்துகின்றன. இதற்கேற்ப பல்வேறு இணைபாடவிதானச் செயற்பாடுகளினூடாக மாணவர்களினதும்

பாடசாலையினதும் தரமேம்பாட்டினை ஏற்படுத்தும் வகையில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் செயற்பட வேண்டியுள்ளது. இந்தவகையில் அழகியற்பாட ஆசிரியர்களும் இதற்குக் கடடுப்பட்டவர்களாக தமக்கு வழங்கப்பட்ட கடமையினூடே மாணவர்களின் ஆளுமை விருத்திச் செயற்பாட்டில் பங்களிப்புச் செய்ய வேண்டியள்ளது. அதுமட்டுமல்லாமல் எமது பிரதேச பண்பாட்டு விழுமியங்களை அழகியற்கல்விக்கூடாக போதிக்க வேண்டிய பெரும் பொறுப்பும் அழகியற்பாட ஆசிரியர்களிடம் எதிர்பார்க்கப்படுகிறது. இன்றைய சூழ்நிலையில் தரமான பாடசாலை என்பது சிறந்த ஒழுக்க விழுமியங்களை கடைப்பிடிக்கின்ற பாடசாலை என்ற விடயத்தையும் உள்ளடக்கியதாக அமைய வேண்டும் என்ற தேவையையும் பொறுப்பையும் சமூகம் எம்மிடமிருந்து எதிர்பார்க்கின்ற நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தவகையில் அழகியற்கல்வியின் தேவைப்பாடு இன்று மேலும் விரிவடைந்துள்ளதுடன் இவை வெறுமனே வகுப்பறைக் கல்வியாக அமையாது ஆற்றுகைகளை மேம்படுத்தும் செயற்பாடுகளாக வளர்க்கப்பட வேண்டும். குறிப்பாக இடைநிலை வகுப்புக்களில் கற்கும் மாணவர்களை ஆற்றுகைச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதன் மூலம் அவர்களின் மனங்களை ஆற்றுப்படுத்த முடியும். 10 வயது தொடக்கம் 18 வயது வரையான பதின்ம வயதையுடையவர்களே மாணவப்பருவத்தினர். இவர்கள் கிட்டத்தட்ட ஒரு நாளின்(நித்திரை நேரத்தைத் தவிர) அரைப்பங்கு நேரத்தை பாடசாலைகளிலேயே கழிக்கின்றனர். அவர்களுடைய பாடசாலைப் காலத்தை ஆர்வமுள்ளதாகவும், ஈடுபாடுள்ளதாகவும், பயனுள்ளதாகவும் ஆக்கக்கூடிய பாடமாக அழகியற்பாடம் அமைய வேண்டும். இனிவரும் காலங்களில் க.பொ.த உயர்தரத்தில் சகல துறைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கும் அழகியற்பாடத்தை கற்பிக்க வேண்டுமெனப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இதன்படி மாணவர்களின் மனங்களை ஆற்றுப்படுத்துவதற்கும், பாடச்சுமைகளினால் ஏற்படும் மன அழுத்தத்தைக் குறைப்பதற்கும் அழகியற்பாடங்களுக்கூடாக நேரம் ஒதுக்கப்பட்டு இதனூடாக மாணவர்களின் நடத்தைக் கோலங்களைச் செம்மைப்படுத்த வழிவகுக்க முடியும் என நம்பப்படுகிறது.

அத்துடன் இன்றைய காலகட்டத்தில் உயர்கல்வியை முடித்து வேலையுலகிற்கு தம்மைத் தயார்ப்படுத்தும் மாணவர்களிடம் பெருமளவில் காணப்படும் பிரச்சினை யாதெனில் தலைமைத்துவப்பண்பு போதாமையாகும். ஏன்னதான் திறமையான அறிவைத் தம்மிடையே வளர்த்துக்கொண்டிருந்தாலும் துணிந்து முன்னே வந்து நின்று தமது திறன்களை வெளிப்படுத்த முடியாமை என்பது பலரிடம் காணப்படுகின்ற குறைபாடாகும். அதுமட்டமல்ல பல்கலைக்கழகக் கல்வியில் முதற்தரச் சித்தியைப் பெற்று வெளியேறிய மாணவரிடையே துறை சாராத மேலதிக திறன்கள் (Extra curricula activities) இருக்கின்றதா என்பது கேள்விக்குறியாகவே காணப்படுகின்றது. இன்றைய போட்டி மிகுந்த வேலையுலகிற்குத் தங்களைத் தயார்ப்படுத்த வேண்டியிருப்பின் இவ்வாறான மேலதிக திறன்களைப் பெற்றிருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. இவற்றுக்கு அடித்தளமிடுகின்ற செயற்பாடுகளைப் பாடசாலைகளில் விரிவுபடுத்தப்பட வேண்டும் என்பது தற்காலத்தின் தேவைப்பாடாக விரிவடைந்துள்ளது.

நிறைவாக, கடந்த காலங்களில் எமது பிரதேச மாணவர்களுக்கான ஆளுமை வளர்ச்சிக்கான எந்த விதமான தொடர்பாடலும், சந்தர்ப்பங்களும், வசதிவாய்ப்புக்களும் இல்லாதிருந்த நிலையிலும் அவர்கள் தங்களைத் தாங்களே வளப்படுத்திக் கொள்ள அரும்பாடுபட்டுச் செயற்பட்டுக் கொண்டார்கள். ஆனால் இன்றைய காலகட்டத்தில் எத்தனையோ வசதிவாய்ப்புக்கள், திறன்களை வெளிப்படுத்துவதற்கான களங்கள், உதவிகள், தொழிநுட்ப அறிவு என்பன எமக்குத் தாராளமாகக் கிடைக்கின்றன இருந்தும் நாம் அவற்றை சரிவரப் பயன்படுத்தத் தவறிவிடுகின்றோம். எனவே பிள்ளைகளின் ஆளுமை வளர்ச்சியிலும் சமநிலையான மனப்பாங்கை உருவாக்குவதிலும் நாம் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும். இவற்றைக் கருத்திற் கொண்டு பிள்ளைகளைச் சிறுபருவத்திலேயே ஏதோவொரு அழகியற்கலையில் ஈடுபடுத்துவதுடன் அவர்களது திறன்களை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களையும் ஏற்படுத்திக் கொடுத்தல் முக்கியமானதாகும். இதன் மூலம் வருங்காலங்களில் நேரான சிந்தையுடைய, ஆளுமைமிக்க தலைவர்களை உருவாக்க முடியும் என்பது திண்ணம்.

# துணுக்காய் கல்வி வலய
# முழு நிலா நாள் கலைவிழா - 2018
# நிகழ்ச்சிகளில் சில...


















# துணுக்காய் கல்வி வலய
# முழு நிலா நாள் கலைவிழா - 2018
# நிகழ்ச்சிகளில் சில...





















# மறைந்தும் மறையாத கலைச்சுடர் கலாபூஷணம் நாட்டிய வாரிதி திருமதி லீலாம்பிகை செல்வராசா



**திருமதி மதிவாணி விக்னராஜா**
*ஆசிரிய வளவாளர்*
*மாகாணக் கல்வித்திணைக்களம்*
*வடக்கு மாகாணம்*

மனிதர்களைப் பண்படுத்தும் ஆன்மீக அம்சங்களையும் அழகியல் அம்சங்களையும் தன்னகத்தே கொண்டது பரதக்கலை. இதனால் இன, மத, மொழி பேதமின்றி உலக மக்களால் பெரிதும் விரும்பிப் பயிலப்படுவது பரதம். இத்தகைய சிறப்புகள் நிறைந்த பரதக் கலையைப் பயின்று, பயிற்றுவித்து 15.04.2018 அன்று தில்லைக் கூத்தன் திருப்பாதங்களை அடைந்தவர் தான் கலாபூஷணம் நாட்டிய வாரிதி திருமதி. லீலாம்பிகை செல்வராஜா அவர்கள். இலங்கையின் வடபால் அமைந்துள்ள மானிப்பாய் நகரில் திரு. சின்னப்பு கந்தையா, திருமதி. கந்தையா, தங்கம்மா தம்பதியினருக்கு 03.02.1940 அன்று கண்டியில் பிறந்தார். ஆரம்பக் கல்வியை கண்டி கிங்ஸ்வூட் கல்லூரியிலும், உடுவில் மகளிர் கல்லூரியிலும், இடைநிலைக் கல்வியை கண்டி நல்லாயன் திருக்குடும்ப கன்னியர்மட பாடசாலையிலும், உயர்கல்வியை யா/இராமநாதன் கல்லூரியிலும் நிறைவு செய்தார். சிறு வயதிலிருந்தே நடனக் கலையில் இவருக்கிருந்த ஈடுபாட்டை உணர்ந்த பெற்றோர் 1956 இல் தமிழ் நாட்டின் தலைசிறந்த நடனக் கல்விக் கூடமான கலாக்ஷேத்ராவில் இணைத்து பரத நாட்டியத்தை ஸ்ரீமதி. ருக்மணி அருண்டேசை அவர்களிடம் பயில வழிவகுத்தனர். அங்கு நடனத்துடன், வாய்ப்பாட்டில், வீணை ஆகியவற்றையும் ஐந்து ஆண்டுகள் கற்றுத் தேறிய பின் தாயகம் திரும்பினார். 1961.09.11 இல் யாழ்ப்பாண மாநகரசபை மண்டபத்தில் தனது பரத நாட்டிய அரங்கேற்றத்தை

நிகழ்த்தினார். இன்றுமுதல் தனது கலைப் பணியை ஆரம்பித்த இவர், மானிப்பாயில் கலைக்கோயில் என்னும் நடனப் பயிலகத்தை நிறுவினார்.

இவர் 03.07.1972 இல் மானிப்பாய் மகளிர் கல்லூரியில் நடன ஆசிரியராகப் பணியை ஆரம்பித்தார். கற்பனைத் திறன், கண்டிப்பு நிறைந்தவர். பரதக் கலையைக் கற்ற அனுபவம், ஐம்பத்தெட்டு ஆண்டுகளுக்கு மேலாக பரத நாட்டியத்தைக் கற்பித்த அனுபவம் ஆகியவற்றினூடாகத் தான் பெற்றுக் கொண்ட அனுபவ அறிவைப் பயன்படுத்தி சிறப்பாகத் தன் பணியைத் தொடர்ந்தார். தன்னம்பிக்கையின் உறைவிடமான இவர் தமிழ், ஆங்கிலம், சிங்களம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் புலமை வாய்ந்தவர். பரத நாட்டியம் பற்றிய ஆழமான, அகலமான இவரது தேடல் இவரை உயர் நிலைக்கு கொண்டு வந்தது. ஆசிரியர் ஒருவருக்கு உளவியல் அறிவு மிக அவசியம். அதுவும் நடன பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர் உளவியல் அறிவை நிறையவே பெற்றிருக்க வேண்டும். உளவியல் அறிவை அதிகம் பெற்றிருந்ததனால் அன்னாரின் கற்பித்தல் வெற்றியளித்தது. கண்டிப்பு நிறைந்த இவரது கற்பித்தல் மாணவர்களை உயர் நிலைக்குக் கொண்டு வந்தது.

இவர் மானிப்பாய் கலைக் கோயில் என்னும் கலையகத்தில் பயின்ற மாணவியர் பலருக்குஅரங்கேற்றம் செய்து பரதக் கலையின் பெருமையை உலகிற்கு பரப்பினார். யாழ்ப்பாண பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப் பிரிவின் வருகை ஒரு விரிவுரையாளராக பணியாற்றினார். பரதக் கலையின் இரு பெரும் பிரிவுகளான செய்முறை, அறிமறை என்ற இரண்டு விடயங்களையும் அணுவணுவாகப் பிரித்து மாணவர்களுக்கு வழங்கும் இவரது ஆசிரியப் பண்பு உயர்வானது. எந்தச் செயலையும் முழுமனதுடனும், அர்ப்பணிப்புடனும், முழுமையாகவும் செய்து முடிக்க வேண்டும் என்று அடிக்கடி கூறுவார். வகுப்பறையின் கற்பித்தற் செயற்பாட்டில் ஆசிரியர் சிறந்ததோர் தர உள்ளீடு. ஆசிரியரின் வினைத்திறனான செயற்பாடு மாணவர்கள் உரிய தேர்ச்சியை அண்மிக்க உதவும். அந்தவகையில் நடனம் கற்பிக்கும் போது நிலத்தில் அமர்ந்து நட்டுவாங்கம் செய்து கொண்டிருக்கும் இவ்வாசிரியர் தேவைப்படும் போதெல்லாம் தான் எழுந்து நின்று செய்முறை அலகுகளை அபிநயித்து விளக்கம் கொடுப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. கலைஞர்கள் தமது கலையை மாணவர்களுக்குக் கையளிக்கும் போது முழுமையாக வழங்குவதில்லை என்ற கருத்து நிலவும் நம் சமூகத்தில் இவர் தான் கற்றுக் கொடுக்கும் விடயம் வகுப்பிலுள்ள ஒவ்வொரு மாணவருக்கும் சரியாகக் கையளிக்கப்பட வேண்டும் என்பதில் அதிக அக்கறை கொண்டு தான் கற்ற கலையைப் பிறருக்குச் சரியான வடிவத்தில் சென்றடைய உழைத்தவர். இச்செயற்பாட்டில் மாணவர் துலங்கல் திருப்தி தராவிடில் இவருக்கு ஏற்படும் கோபம் வரையறை அற்றது. பணத்தைப் பெரிதெனக் கருதாது கலைப் பணியைப் பெரிதாகக் கருதியவர்.

இக்கலைஞர் சிறந்த ஆற்றுகையாளர், நாட்டிய அமைப்பாளர், சிறந்த ஆசிரியர், உயர்ந்த கருத்துக்களைப் பரிமாறும் மதியுரைஞர், தலை சிறந்த எழுத்தாளர் எனப் பன்முகப்பட்ட ஆற்றலுடன் மிளிர்ந்தவர். இத்தகு சிறப்புகள் அனைத்தும் ஒருவரிடத்தே அமைவது எல்லோருக்கும் கிடைத்து விடாத வரம். இறைவன் இக்கலைஞருக்கு கொடுத்த கொடை.

பிற கலைகளையும் உயர்த்தி மதிக்கும் நற்பண்பு இவரிடம் நிறைந்திருந்தது ஓவியம் வரைவதிலும் இவர் வல்லவர் என்பது பலர் அறியாத உண்மை. நிறைகுடம் தழும்பாது என்பதற்கு இலக்கணமாய் இவர் திகழ்ந்தவர்.

சரியானதைக் கூறுவதில் தயங்கமாட்டார். மனதில் தோன்றுவதை ஒளிவு மறைவின்றிக் கூறும் தைரியம் இவருக்கு மட்டுமே உரியது. இத்தகைய பல சிறப்புகள் வாய்ந்த இக்கலைஞரின் கலைத்திறன், கலைச் சேவை ஆகியவற்றைப் பாராட்டி 1987 இல் இலங்கைப் பிரதேச சபையினரால் "நூபுரலயநிதி" என்ற விருதும், 1997 இல் இலங்கை கலை கலாசார பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தால் கலாபூஷணம் விருதும், 2003 ஆம் ஆண்டில் ஸ்ரீலங்கா கலைக்கழகம், கலாசார அலுவல்கள் அமைச்சினால் "கலாரத்னா" விருதும், 2009 ஆம் ஆண்டில் சக்தி தொலைக்காட்சி நிறுவனத்தால் "வாழ்நாள் "சாதனையாளர் விருதும், 2010 ஆம் ஆண்டு மன்னார் தமிழ்ச் சங்கத்தால் தங்கம்மா அப்பாக்குட்டி விருதும், 2012 ஆம் ஆண்டில் அரச நாட்டிய நாடக விழாவில் நாட்டிய வாரிதி விருதும் 2016 ஆம் ஆண்டில் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தினால் "தலைக்கோல்" விருதும் 2016 ஆம் ஆண்டு வடக்கு மாகாண சபையால் முதலமைச்சர் விருதும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். அத்துடன் 2015 ஆம் ஆண்டு சண்டிலிப்பாய் பிரதேச கலாசாரப் பேரவை கலைஞர் சேவையைப் பாராட்டி மகிழ்ந்தது. இத்தகைய உயர்ந்த கலைஞரின் தூய்மையான அரிய கலைச் சேவையைப் பாராட்டி இலங்கை வாழ் நடன ஆசிரியர்கள் (இவர்களில் பலர் தம் மாணவர்கள்) இணைந்து யாழ்ப்பாணம் இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் பணி மதிப்பு விழா ஒன்றை 23.04.2016 அன்று சிறப்புற நடாத்தி மகிழ்ந்தனர். அத்துடன் புலம்பெயர்ந்து நம்மக்கள் வாழும் ஐரோப்பிய நாடுகளுக்கும் சென்று தன் கலைச்சேவையை வழங்கிய இக்கலையரசிக்கு அங்கு வாழும் நடனக் கலைஞர்கள் இணைந்து 2011 ஆம் ஆண்டில் அவரது கலைப் பணியின் 50 ஆண்டுகள் நிறைவை நினைவு கூர்ந்து பொன் விழா ஒன்றினைச் சிறப்பாக முன்னெடுத்தனர். இவர் தம் அறிவின் விழுதுகளாக 2001 ஆம் ஆண்டில் நடனசாரம் என்ற நூலும், 2002 இல் பரத நாட்டியம் கற்பித்தல் முறைகள் என்ற நூலும், 2008 இல் ஆடற்கலை என்ற நூலும் வெளியிடப்பட்டன. தற்போது கூட பரத நாட்டியம் பற்றி ஆங்கில மொழியில் அன்னார் எழுதிய நூல் ஒன்று தட்டச்சில் உள்ளது. இக்கலைஞரின் கலைப் புலமை எம்முடன் மட்டுமல்லாது இனிவரும் சந்ததிக்கும் இந்நூல்கள் வழியே சென்றடையும் என்பதில் மாற்றுக் கருத்துக்கள் இல்லை. இத்தகு பெருமைகள், சிறப்புகள் நிறைந்து இம்மண்ணில் வாழ்வாங்கு வாழ்ந்த நாட்டிய வாரிதி, கலாபூக்ஷணம் திருமதி. லீலாம்பிகை செல்வராஜா அவர்கள் இயற்கை வகுத்த நியதிக்கமைய 15.04.2018 அன்று தில்லைக் கூத்தன் திருவடிகளை அடைந்தார்.



# கலைத்திட்டத்தை நடைமுறைப் படுத்தலில் ஆசிரியரின் வகிபாகம்



**திருமதி. சூரியயாழினி வீரசிங்கம்**
*சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்*
*நடனம்*
*வலயக் கல்வி அலுவலகம்*
*வவுனியா தெற்கு*

கல்விச் செயற்பாடுகளை கோட்பாடுகள் ரீதியில் விளங்கவும், விளக்கவும், பல்வேறு தளங்களில் பல நிலைகளில் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் உள்ளவர்களுக்கு கலைத்திட்டம் பற்றிய அறிவு இன்றியமையாது வேண்டப்படுகின்றது. கலைத்திட்டம் பற்றிய கோட்பாட்டு ரீதியிலான விளக்கமும் நடைமுறை சார்ந்த புரிதலும் அகலமாக்கப்பட்டு ஆளமாக்கப்படும். இப்பொழுதே தரமான கல்வி வழங்கும் ஏற்பாடுகள் முழுமை நோக்கி நகர்த்தப்படும். கல்விச் செயன்முறையினால் வெளிவீசப்படுபவர்கள் பற்றியும் எல்லைப்படுத்தப்பட்டவர்கள் பற்றியும் சிந்தித்துப் பொருத்தமான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு கலைத்திட்டம் பற்றிய அறிவு அவசியமாகின்றது. இதனூடாக மாணவர்களது பன்முகப்படுத்தல்களுக்கும் தனித்துவங்களுக்கும் முன்னுரிமை வழங்குதலும், கல்வியிலே சமத்துவம், சமசந்தர்ப்பம், சமநீதி முதலியவை பற்றிய சிந்தனைகளை தொகுத்தலும் மேலேழுந்து உயருகின்ற நிலை உருவாகும்.

கலைத்திட்டம் நவீன ஆய்வாளர்கள், கலைத்திட்டம் பற்றிக் கூறியுள்ள கருத்துக்களை தொகுத்து நோக்கின் பாடசாலையில் எவை கற்பிக்கப்படுகின்றனவோ எவை கையளிக்கப்படுகின்றனவோ அவையெல்லாம் கலைத்திட்டம் என்றும் கற்கும் பாடங்களின் கூட்டு மொத்தமான தொகுதி என்றும் மாணவர்களுக்கு வழங்கப்படும் அறிவின் உள்ளடக்கம் என்றும் கல்வி சார்ந்த பொருட்களில் கூட்டான தொகுதி என்றும் ஆற்றுகை செய்வதற்குரிய கல்வி இலக்குகளின் தொகுதி என்றும் பாடசாலையால் நெறிப்படுத்தப்பட்டு பாடசாலைக்கு உள்ளும் வெளியும் எவை கற்பிக்கப்படுகின்றனவோ அவை ஒன்றிணைக்கப்பட்டு கலைத்திட்டமாக முகிழ்ந்தெழச் செய்யப்பட்டுள்ளது. என்றும் கல்வி நிறுவன ஆளணியினரால் திட்டமிடப்படும் ஒவ்வொரு செயல் என்றும் வாழ்க்கையில் எவை எவ்வாறு அடையப்பட வேண்டுமோ அவற்றை கல்வியால் அடையச் செய்வதற்குரிய ஆற்றல்களை ஒழுங்கமைத்துக் கொடுப்பது என்றும் கல்வியால் ஈட்டப்படக்கூடிய வெற்றிகளையும் தோல்விகளையும் உள்ளடக்கிய நடைமுறை வடிவமே கலைத்திட்டம் என்றும் விளக்கமளித்துள்ளார்.

கல்வி நிறுவனங்களின் தொழிற்பாட்டிற்கு அடிப்படையாக, செயல்களுக்கான திட்டமொன்று இருக்க வேண்டும். அத்திட்டம் அந்நிறுவனத்திற்கான சட்டகம் ஒன்றினை அமைத்துத் தருவதாக

அமைய வேண்டும். கல்வி நிறுவனங்களின் சட்டகமாக கலைத்திட்டம் விளங்குகின்றது. இக்கலைத்திட்டங்கள் உலக ரீதியான கலைத்திட்டம் தேசிய ரீதியிலான கலைத்திட்டம் பிராந்தியக் கலைத்திட்டம், உள்ளூர் மட்ட கலைத்திட்டம் என அமைக்கப்பட்டுள்ளன. எனினும் இலங்கை பாடசாலைகளின் கலைத்திட்டம் தேசிய மட்ட கலைத்திட்டமாகவே கருதப்படுகின்றது.

கலைத்திட்டச் செயன்முறைகள் தத்துவக் காரணிகள், சமயக் காரணிகள், சமூகவியற் காரணிகள், பொருளாதாரக் காரணிகள், அரசியற் காரணிகள், மாணவர்களது உடல், உள வளர்ச்சித் திறன்கள், வரலாறு தொழில்நுட்பம், நவீன கற்றல் கோட்பாடுகள் கல்விச் சீர்திருத்தங்கள், மெய்யியல், உளவியல், முகாமைத்துவவியல், தகவல் தொழில்நுட்பவியல், உலகமயமாதல் முதலிய காரணிகளது செல்வாக்கிற்கு உட்பட்டே கலைத்திட்டங்கள் உருவாக்கப்படுகின்றன.

கலைத்திட்டமானது கொள்கை வகுப்பாளர் நவீன கல்வி உளவியலாளர்கள், கல்வித் தத்துவவியலாளர்கள், தேசிய கல்விச் சேவை ஆணைக்குழு, தேசிய கல்வி நிறுவனம், கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களம், வலயக் கல்வி அலுவலகம், பாடசாலை என்ற நிறுவன ஒழுங்குகளினூடாக ஆசிரியரை வந்தடைகின்றது. ஆயினும் மாணவர்களிடம் கற்றலை ஏற்படுத்துபவர்கள் ஆசிரியர்களாக கையால் கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தலில் ஆசிரியரின் வகிபாகம் முக்கியம் பெறுகின்றது.

மாணவர்கள் கற்பதற்கு உதவுவதே கலைத்திட்டத்தின் நோக்கமாகும். இதனால் கலைத்திட்டம் அவர்களுக்கு பொருத்தமாக இருக்க வேண்டும். இதற்கு ஆசிரியர்கள் பிள்ளைகளின் கல்வி சார் பின்னணி பற்றியும், அனுபவங்கள் பற்றியும் அறிந்திருப்பதுடன் கற்பதற்காக தூண்டல்கள் ஊக்கல்கள், பால்நிலைச் சமத்துவம், வயது தொகை, பற்றிய விகரங்கள், மாணவர்கள் கற்கும் பாணியும் பழக்கங்கள் பற்றியும், அறிந்திருக்க வேண்டும். வெறுமனவே மாணவர்களுக்கு அறிவைக் கடத்தும் வகிபாகத்தில் நின்று ஓர் ஆசிரியர் கலைத்திட்டத்தினை நிறைவு செய்தால் மட்டும் போதாது. இங்கு மாணவர்களை புரிந்து கொள்வதற்கான உளவியல் அறிவைப் பெற்றிருப்பதோடு உளவியற் கோட்பாடு பற்றிய அறிவும் இருக்க வேண்டும். இந்நிலையில் கலைத்திட்ட நடைமுறைப்படுத்தலானது ஆசிரியரின் கைகளிலே தங்கியுள்ளது.

கலைத்திட்டமானது சமூக புரிதல்களுக்கு இடமளிக்கின்றது. ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு வகையான சமூக ஒழுங்குகள் உள்ளன. சமூகக் குழுக்கள் உள்ளன. இனம், மதம், மொழி, சாதியம், தொடர்பான நிலைப்பாடுகள் வர்க்க பேதங்கள் என்பனவும் அடிமைத் தனமும் மேலோங்கிய நிலைப் பாடுகளிலும் இருக்கக் கூடும். அவை யாவற்றிற்கும் முகம் கொடுத்து அதற்குள் இருந்து வரும் பிள்ளைகளின் கல்விக்கு வழிகாட்டுபவர் ஆசிரியரே ஒவ்வொரு மாணவனதும் தனியாள் இயல்புகளை இனங்காண்பதுடன் விசேட தேவைகளைப் பற்றியும் அறிதல் வேண்டும். பிள்ளைகளின் மீத்திறன் மற்றும் மெல்லக் கற்போர் பற்றிய புரிதலும் அவசியம். எவ்வாறு மாணவர்களது உளத்திறனை புரிந்து கொண்டாரோ அதேபோன்று மாணவர்களது திறன்களையும் ஆசிரியர் அறிய வேண்டும். அவ்வாறு

அறிவதன் மூலம் கலைத்திட்டத்தினை ஆசிரியர் வெற்றியடையச் செய்ய முடியும். ஒவ்வொரு மாணவர்களது குடும்ப நிலைமைகளும் வேறுபட்டவை. இன்றைய சூழலில் பல்வேறு அனர்த்தங்களுக்கும் இடப்பெயர்வுகளுக்கும் உள்ளாகி வெவ்வேறு உள முரண்பாடுகள், உள நெருக்கடிகள், உள்ள சூழலிலிருந்து பாடசாலைக்குப் பிள்ளைகள் வருகின்றனர். இதனை கருத்தில் எடுக்காது அசிரியரால் திட்டமிடப்பட்ட ஆண்டுத் திட்டத்தில் அன்றைய நாளுக்கான பாடத்திட்டத்தை மட்டும் நடாத்தி முடித்து விடுவதனால் மட்டும் கலைத்திட்டக் குறிக்கோள்கள் வெற்றியளித்துவிடாது. மாணவர்களை நன்கு புரிந்து மாணவர்களது தேவையை அறிந்து அதற்கேற்ற வகையில் கற்பித்தல் அமைய வேண்டும். மாணவனது பலங்கள், பலவீனங்கள், இயலுமை, இயலாமை முதலியவற்றை அறிந்து அதற்கேற்ற வகையில் கலைத்திட்டத்தினை பகுத்து, தொகுத்து வழங்குதல் வாண்மைத்துவம் மிக்க ஆசிரியரின் பணியாகும். ஆசிரியர்கள் கலைத்திட்டத்தினை நிறைவு செய்வதில் கருத்தாக இருக்கும் போது மாணவர்களால் அடிப்படையில் விளங்கிக் கொள்ள வேண்டிய எண்ணக்கருக்களுக்கு ஆசிரியர்கள் முக்கியத்துவம் கொடுப்பதில்லை. இவ்வகைச் செயன்முறையால் மாணவர்கள் தங்களது ஐயப்பாடுகளை தீர்க்க வாய்ப்புக் கிடைப்பதில்லை. எனவே மாணவர்களுடன் இணைந்து அவர்களின் தேவையை அறிந்து செயற்படும் போது பிள்ளை மையக் கல்வியில் ஆசிரியர், வழிகாட்டுபவர் என்ற வகிபாகத்தின் மூலம் கலைத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில் வெற்றிகாண முடியும்.

கலைத்திட்டமானது காலத்திற்குக் காலம் மாற்றமடைகின்றது. அம்மாற்றம் ஆசிரியரது கற்பித்தல் முறைகளிலும், அவரது வாண்மைத்துவத்திலும் கற்பித்தல் பொருளடக்கத்திலும் பாடப்பொருளிலும் குறிக்கோளிலும் தேர்ச்சிகளிலும் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. ஓர் ஆசிரியர் கலைத்திட்ட மாற்றங்களை உள்வாங்கி அதனை நடைமுறைப்படுத்துவதற்கேற்ப தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும். தனது வாண்மைத்துவத்தை விருத்தி செய்வதும் பாடப்புலமையை அடைவதும் முக்கியமாகின்றன. உதாரணமாக கலைத்திட்ட மாற்றத்தின் போது பாடப்புலத்தில் மாற்றங்கள் கொண்டுவரப்படும் பொழுது ஆசிரியர் அதனை ஏற்றுக் கொள்ளும் மனப்பாங்கினை முதலில் பெற வேண்டும். அத்துடன் அறிவதற்காகப் பயிற்சிகளில் ஈடுபடுவதுடன் பயிற்சிகளில் பெற்ற விடயங்களை நடைமுறைப்படுத்தவும் முன்வர வேண்டும். தேர்விலும், ஆராய்விலும், ஆசிரியர் இதனை உணர்ந்து அர்ப்பணிப்புடன் செயற்பட்டாலே கலைத்திட்டமானது வெற்றியளிக்கும்.

கற்பித்தல் முறைகளில் மாற்றங்களை ஏற்படுத்துமிடத்து அதனை உள்வாங்க வேண்டும். ஆசிரியர் ஒரு வழிகாட்டியாக இங்கு செயற்பட வேண்டும் என்று கலைத்திட்டத்திலே கல்வி மறுசீரமைப்பு செயற்பாட்டின் போது (2007) 5E என்ற மாதிரிகை முறையும் அறிமுகப்படுத்தப்பட்டது. இதில் மாணவர்களின் செயற்பாடு முக்கியப்படுத்தப்பட்டுள்ளது. மாணவர்கள் ஆய்வூக்கம் உடையவர்கள். அவர்களுடைய திறன்களை ஊக்குவிக்க வேண்டும்.

குழுவாகச் செயற்படுவதன் மூலம் தலைமைத்துவப் பண்புகளை வளர்த்துக் கொள்கின்றனர். எனினும் 5E மாதிரிகையை எத்தனை வீத ஆசிரியர்கள் ஏற்றுக் கொள்கின்றார்கள்.

நடைமுறைப்படுத்துகின்றார்களா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. இவ்விடத்திலே ஆசிரியர்கள் வகுப்பில் உள்ள மாணவர்களது எண்ணிக்கை கற்பித்தலுக்கான நேரமும் இடவசதியும் கிடைக்கத்தக்க ஊடகமும் வசதியும் குறித்த முறையைக் கையாள்வதில் ஆசிரியரது தேர்ச்சி என்பவற்றை ஆசிரியர் புரிந்து செயற்படும் போதே கலைத்திட்டமானது வெற்றியளிக்கும்.

கலைத்திட்ட உருவாக்கத்திலே மதிப்பீடு என்பது முக்கியம் பெறுகின்றது. இம்மதிப்பீடு குறிப்பிட்ட கற்கை நெறியின் குறிக்கோள்களும் நோக்கங்களும் மாணவர்தொடர்பாக எந்தளவு நிறைவேறியுள்ளதென தீர்மானித்தலாகும். இது மாணவரது அடைவு மற்றும் ஆற்றுகை தொடர்பான மதிப்பீடுகளால் இனம்காண முடியும். கலைத்திட்டம் தொடர்பான பின்னூட்டல் தகவல்களை பெறும் நோக்குடன் மதிப்பீடு செய்தல் பின்னூட்டல் தொடர்பான கற்கை நெறிக் குறைபாடுகள் நிறைவுகளைக் கண்டறிவது இதன் நோக்கமாகும். இதனூடாக இவற்றை எதிர்காலத்தில் திருத்தியமைக்க முடியுமென எதை மதிப்பிடுவது எவ்வாறு மதிப்பிடுவது எப்போது மதிப்பிடுவது என்பன கலைத்திட்ட கொள்கைகளாக வகுக்கப்பட்டுள்ளன. ஆனாலும் இதன்படி மதிப்பீடு செய்ய முடியாது. மாணவர்களது ஆற்றுகைகள், திறன்கள், மனப்பாங்குகள், சுயநம்பிக்கைகள், அறிகை, என்பவற்றை ஆசிரியர் நேரடியாக அவதானிப்பதன் மூலமும் எழுத்துப் பரீட்சை, கொள்கைகளின் குறிக்கோள்கள் அடையப்பட்டுள்ளனவா என்பதை அர்ப்பணிப்பும் சமூக நோக்கும் மாணவர் மீதான அக்கறையும் கொண்ட ஆசிரியர் ஒருவராலேயே மேற்கொள்ள முடியும். இதன் அர்த்தம் கலைத்திட்ட நடைமுறைப் படுத்தலானது ஆசிரியர்களின் கைகளிலே தங்கியுள்ளது என்பதாகும்.

இவ்வாறாக கலைத்திட்ட நடைமுறைப்படுத்தலில் ஆசிரியரின் கைகள் செயற்பட்டாலும் கூட ஆசிரியர்களிடத்தும் புறச்சூழலிலும் சில மட்டுப்பாடுகள் காணப்படுகின்றன.

ஆசிரியர் நியமனங்கள் இங்கு முக்கிய மானதாகும். வேலையற்றுத் திரிபவர்கள், இறுதியாகத் தெரிவு செய்யும் தொழில் ஆகிய கூற்றில் ஆசிரியர் தொடர்பாக அன்றைய சமூகவியற் பார்வைக்கும், இன்றைய சமூகவியல் பார்வைக்குமான இடைவெளி தெரிகின்றது. இங்கு ஆசிரியர் தொழில் என்று கூறுகின்றமை ஒரு மட்டுப்பாடாகும். இது தொழிலல்ல. சமூக உருவாக்கப்பணி இங்கு ஆசிரியர் என்ற நியமனம் கிடைத்ததால் அத்தொழிலைச் செய்கின்றனர். ஆசிரியர் தொழிலை விரும்பிச் செய்யாத நிலையில் கலைத்திட்ட நடைமுறைப் படுத்தலானது கேள்விக்குள்ளாகின்றது.

ஆசிரியர்கள் தமது வாண்மையை விருத்திசெய்வதில் ஆர்வமற்றவர்களாகவும் உளவியல் அறிவு பெறாதவர்களாகவும் மக்டூகல் கூறும் பிள்ளையின் தேவைகளை அறியாதவர்களாகவும் விளங்குவதும் தொழில் நுட்ப அறிவைப் பெறுவதில் விருப்பமற்றவர்களாகவும் இருக்கின்ற போது கலைத்திட்ட நடைமுறைப்படுத்தலானது வெற்றியளிக்காது. மேலெழுந்த வாரியஃன சமூகத்தோற்றத்திற்கும் உண்மைத்தோற்றத்திற்கும் இடையில் இன்று இல்லாமல் இருக்கும் சமநிலையை சீராக்குவதே ஆசிரியரின் தலையாய கடமையாகவுள்ளது. ஆசிரியர்களது கடமையை சரிவர செய்யவியலாத அளவுக்கு சமூக அரசியல் தலையீடுகள் இன்று

குறுக்கிடுகின்றன. கலைத்திட்டத்திலே அரசியல் செல்வாக்கு அதிகரிக்கும் போது அவை பரப்புரைகளாக அரசியல் அழுத்தங்களாக பிழையான வலியுறுத்தல்களாக அமையுமாயின் மறு நிலைகளைத் தோற்றுவித்து கலைத்திட்டம் சமூகப் பயனற்றதாக சிதைவடையும்.

கலைத்திட்ட இலக்குகள் குறிப்பிடப்பட்ட, வரையறுக்கப்பட்ட இலக்குகளைக் கொண்ட கற்பித்தல் நடவடிக்கைகள் எவை என்பவை முன்கூட்டியே திட்டமிடப் பட்டிருப்பதால் இவற்றை மட்டுமே மேற்கொள்ள முடிகின்றது. மாணவர்களது செயற்பாடுகளைக் கண்டிப்பாக நிர்ணயிக்க முடியாமல் இருப்பதும் எதிர்பாராத வெளிப்பாடுகள், மறைமுக விசைகள் மேற்கிளம்பி வரும்போது கலைத்திட்டத்தினை நடைமுறைப்படுத்த முடியாத நிலை உருவாகும். இவை கலைத்திட்ட நடைமுறைப்படுத்தலின் மட்டுப்பாடுகளாக விளங்குகின்றன.

கலைத்திட்டத்தை நடைமுறைப் படுத்தும் போது பிரதேசம் கிராமம், நகரம், என்ற பேதங்களைக் கொண்டிருப்பதுடன் வளங்களின் பகிர்வில் சமமின்மைகளும் காணப்படுகின்றன. கிராமப் புறங்களிலே தொழில்நுட்ப சாதனங்களைப் பயன்படுத்துவதும் கேள்விக் குறியாகியுள்ளது. இத்தகைய சூழலானது கலைத்திட்ட நடைமுறைப் படுத்தலில் பின்னடைவை ஏற்படுத்துகின்றது.

எனவே மாணவர்களையும் ஆசிரியர்களையும் இணைக்கும் ஒப்பந்தச் சாதனம் கலைத்திட்டம் மாணவர்களும் ஆசிரியர்களும் உயிரும் உணர்ச்சியும் உள்ளவர்கள் உயிரற்ற பொருளாகக் கலைத்திட்டம் இயங்கினாலும் அது ஓர் உயிருள்ள சாதனம், உயிரற்றும் உயிராக விளங்கும் கலைத்திட்டம் சக்தி நிறைந்த சமுதாயத்தை உருவாக்க வேண்டும். மக்களையும் சமூகத்தையும் இணக்கம் பெறச்செய்தல் வேண்டும். சமநிலை கொண்ட பண்பாட்டு மரபுக்கு வழி கோல வேண்டும்.

மாணவனின் பண்பாட்டு மரபினையும் நாட்டின் அபிவிருத்தியையும் அடிப்படையாகக் கொண்டு எழுதுவது கலைத்திட்டம், கல்விப் பயனை அடிப்படையாகக் கொண்டு எழுவதாற் கல்வித்திட்டத்திற்கும், கல்விப் பயனுக்குமிடையே காரணகாரியத் தொடர்பு இருத்தல் வேண்டும். கற்பித்தல் கல்விப்பயன் அடைதலை இலக்காகக் கொண்டால் கலைத்திட்டமும் கல்விப் பயனையும் அதனடிப்படையில் எழுந்த வாழ்க்கைப் பயனையும் வாழ்வுப் பயணிப்பினையும் அடிப்படையாகக் கொண்டு அமைகின்றது.

எவ்வாறாயினும் கலைத்திட்டத்தின் நோக்கங்கள் குறிக்கோள்கள் எழுத்துருவில் இருந்த போதிலும் அதற்குச் செயல்வடிவம் கொடுப்பவர்கள் ஆசிரியர்களே இதனை மறுக்கவோ மறைக்கவோ முடியாததாகும். மேற்கூறப்பட்ட அடிப்படையிலே நோக்கும் போது கலைத்திட்ட நடைமுறைப் படுத்தலானது ஆசிரியரிடம் மட்டுமன்றி மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் உள்ளிட்ட சமூகம் என்ற பலதரப்பட்டவர்களின் கூட்டுச் செயற்பாடுகளின் தொகுப்பாகும். எனினும் இதில் பள்ளி முதல்வர், ஆசிரியர்களின் வகிபாகமே முதன்மையானதாகும்.

# மன்னார் கல்வி வலய
# முழு நிலா நாள் கலைவிழா - 2018
# நிகழ்ச்சிகளில் சில...

















# மன்னார் கல்வி வலய
# முழு நிலா நாள் கலைவிழா - 2018
# நிகழ்ச்சிகளில் சில...






# வடமராட்சிக் கல்வி வலய
# முழு நிலாநாள் கலைவிழா - 2018
# நிகழ்ச்சிகளில் சில...











# வடமராட்சிக் கல்வி வலய
# முழு நிலாநாள் கலைவிழா - 2018
# நிகழ்ச்சிகளில் சில...



















# நாட்டுப்புறக் கலைகள் ஓர் கண்ணோட்டம்



**திருமதி. சுபாலினி வசந்தகுமார்**
*ஆசிரிய ஆலோசகர் (நடனம்)*
*வவுனியா வடக்கு கல்வி வலயம்.*

ஒரு நாட்டின் கலை மற்றும் கலாசாரம் அச் சமூகத்தினைப் பிரதிபலிக்கும் சிறந்த கருவியாகும். கலை என்பது பொழுது போக்கிற்காக மட்டுமன்றித் தகவல் ஊடகமாகவும் கலாசாரப் பலகணியாகவும் திகழ்கின்றது. கலை என்பது மன உணர்வுகளின் வெளிப்பாடு. குறிப்பாக நாட்டுப்புறக் கலைகள் நமது மண்ணோடு, நம்மோடு தொடர்புடையவை. நமது பாரம்பரியத்தையும் அடி ஆழத்து வேர்களையும் பிரதிபலிப்பவை. கலை சமூக வளர்ச்சிக்கும் மன எழுச்சிக்கும் சிறந்த கருவி

நமது முன்னோர்களின் நம்பிக்கைகள், எண்ணங்கள், சிந்தனைகள், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை நாட்டுப்புறக் கலைகள் மூலம் அறிய முடிகிறது. இக்கலைகளே சமுதாயத்தின் ஆவணமாகத் திகழ்கின்றன. இக் கிராமியக் கலைகளே தகவல் பரப்பும் ஊடகமாகவும் பழக்கவழக்கப் பண்பாட்டுப் பெட்டகமாகவும் நிகழ்ந்துள்ளன.

இன்று தொழில் நுட்பத்தின் அசுர வளர்ச்சியான தகவல் தொடர்பிற்கும் பொழுதுபோக்கிற்கும் பல்வேறு ஊடகங்கள் உருவாகி வருகின்றன. இம்மாறுதல் இயற்கையானதே. இவற்றினை நாம் எளிதில் புறக்கணித்து விடமுடியாது. காலத்திற்கு ஏற்ற மாறுதல்கள் தேவைதான். இது போன்று ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு விதமான கலைகள் உள்ளன. இந்தக் கலைகள் வெளியே தெரியாமல் உள்ளன.

பண்டைக் காலத்தில் இருந்தே தமிழர்களின் உழைப்பும், ஓய்வும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தே வந்திருக்கின்றன. பசிக்காக மட்டுமே உழைத்தாலும் தம் ரசனையை ஒரு போதும் மறக்கவில்லை. பழந்தமிழரின் உள்ளத்தில் ஏற்படும் மகிழ்ச்சி, அன்பு, கோபம், துக்கம், காதல், கனிவு, போட்டி என உணர்வுகள் பலவும் இம் மண்ணின் கலைகளாகத் தோற்றம் பெற்றன. இக் கலைகளில் இருந்தே நம் சாஸ்திரிய நடனமான பரதநாட்டியம் தோற்றம் பெற்றது என்பதற்குப் பல ஆதாரங்கள் உள்ளன. மக்களின் உணர்வுகளுக்குத் தீனி போட்டு பசியாற்றிக் கொண்டிருந்த இக்கலைகள் ஒரு சில கிராமங்களில் மட்டுமே இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

தமிழர்களின் பழங்கலைகள் அழியாதிருக்க இன்றும் பல தொண்டு நிறுவனங்களும் தனியார் நிறுவனங்களும் இக்கலைகளுக்குச் செயற்கைச் சுவாசம் கொடுத்து வருகின்றன.

நாட்டுப்புற வழக்காறுகளில் நாட்டுப்புற இலக்கியம் தவிர்ந்த மற்ற அனைத்து வழக்காறுகளையும் நாட்டுப்புறக் கலைக்குள் அடக்கம் செய்யலாம். பின்பு அதனை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

*1. நாட்டுப் புறப் பழக்கங்கள்*
*2. நாட்டுப் புறக் கலைகள்*
*3. நாட்டுப்புற அறிவியல் மற்றும் தொழிநுட்பம்*

**1. நாட்டுப் புற பழக்கங்கள்**

வாழ்க்கை முறைகளின் கூட்டுச் சேர்க்கைதான் பண்பாடு என்ற ஒன்றை உருவாக்குகின்றது. ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தின் சடங்குகள், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் இவைதாம் அச்சமுதாயத்தின் பண்பாட்டின் அடையாளத்தைக் காண வழி வகுக்கின்றன. சமுதாயத்தின் பழக்கங்கள் என்பனவற்றுள்,

*1. நம்பிக்கைகள்*
*2. வழக்கங்கள்*
*3. சடங்குகள்*
*4. விழாக்கள்*
*5. விளையாட்டுக்கள் போன்றவை அடங்கும்.*

**2. நாட்டுப்புறக் கலைகள்**

*நாட்டுப்புற மக்களின் கலைகளை இரண்டாக பிரிக்கலாம். அவை*

1. நிகழ்த்து கலைகள் ( preforming Arts)
2. நிகழ்த்தாக் கலைகள் (Non-performing Arts)

*நிகழ்த்து கலைகளை மேலும் இரண்டாகப் பிரிக்கலாம்.*

1. சமூகச் சார்புக் கலைகள்
2. சமயச் சார்புக் கலைகள்

நிகழ்த்தாக் கலைகளை நாட்டுப்புற மக்களின் தொழில் சார்ந்த கலைகள் என்று குறிப்பிடலாம். இத்தொழில்கள் மக்களால் மக்களுக்காக உருவாக்கப்பட்டவை. கோயில்கள், தெய்வங்கள் இவற்றை அழகுபடுத்துவதற்காகச் செய்யப்படுவன எனலாம்.

**3. நாட்டுப்புற அறிவியல் மற்றும் தொழில் நுட்பம் மூன்று வகையாகப் பிரிக்கலாம்.**

*1. நாட்டுப்புற மருத்துவம்*
*2. நாட்டுப்புறத் தொழில் நுட்பவியல்*
*3. நாட்டுப்புறக் கட்டடக்கலை*

இவ்வாறு நாட்டுப்புறக் கலைகள் பல்வேறு விதமாக விரிக்கலாம். கிராம மக்களின் இதமான அரவணைப்பில் வளர்ந்தவை. (அரிய சிறப்புக்களுடன் அன்று தொட்டு இன்றுவரை நாடகத்தின் சாயலுடைய காட்சிகளை மேடையின்றி தெருக்களில் நின்று பாடல்கள் பாடி கூத்துக்களை ஆடி மகிழ்விக்கும் கலையைப் பெரிதும் விரும்புகின்றனர். நாட்டுப்புறக் கலைகள் அச்சமூகத்தினைப் பிரதிபலிக்கும் சிறந்த கருவியாகும்.

நாட்டுப்புறக் கலைகளுள் கும்மி, கோலாட்டம், ஒயிலாட்டம், கரகாட்டம் , பறையாட்டம், பள்ளு, குறவஞ்சி, நொண்டி நடனம், தெருக்கூத்து, பொம்மலாட்டம், சிலம்பாட்டம், பொய்க்கால் குதிரை, வேதாள ஆட்டம், புலிவேடம், உறியடி விளையாட்டு என பல்வேறு கலைகளை கூறலாம். இவை போன்று இன்னும் பல ஆடல் வகைகள் உள்ளன. இவை பற்றிய சில குறிப்புக்களைப் பார்க்கலாம்.

**பள்ளு:-** விவசாயத்தை தொழிலாகக் கொண்ட உழவர்களாலேயே இந்த பள்ளு என்ற கலை உருவாக்கப்பட்டது என்று வரலாறு கூறுகின்றது. உழவர்கள் தானியங்களைப் பிரிக்கும் போதும் வயல் உழுகின்ற பொழுதும் பள்ளுப் பாடல்களை பாடி வந்ததாக சங்க கால இலக்கியங்கள், தொல்காப்பியம், சிலப்பதிகாரம் போன்றன எடுத்துரைக்கின்றன.

**குறவஞ்சி :-** குறவர் சமூகத்தில் இருந்து குறவஞ்சிப் பாடல் கலை உருவாகியது என்று வரலாற்றுகள் கூறுகின்றன. அழகான பெண் ஒருத்தியின காதலை விரிவாக எடுத்துக்கூறுவதாக அமைந்திருக்கும். இத்தகைய பாடல்களில் இறையுணர்விற்கு சிறந்த இடம் கொடுக்கப்பட்டு இருக்கும்.

**நொண்டி நடனம்:-** நாட்டிய நாடகமாக கருதப்படும் அரிய கலைகளில் இதுவும் ஒன்று. கால் ஊனம் உள்ளவர்கள் தனது வாழ்க்கையை சித்தரிக்கும் கலையாக அமைகின்றது. 18 ஆம் நூற்றாண்டில் இந்தக் கலை மிகவும் சிறப்புற்று விளங்கியதாக அறிகின்றோம்.

**தெருக்கூத்து:-** பல வகையான தெருக்கூத்துக்கள் நாட்டுப்புற கலைஞர்களால் நடிக்கப்பட்டுள்ளன. நாட்டுப்புறக் கலைகளில் முக்கியமான கலையாக இது விளங்கியுள்ளதை வரலாறு கூறுகிறது. ஊரில் நடத்தப்படும் திருவிழாக்களில் தெருக்கூத்துக் கலையானது மிகச் சிறப்பாக நடைபெற்று வருவதுண்டு. அரிச்சந்திரன் கூத்து, இராம நாடகம், மன்மதன் கூத்து, சூரசம்காரம் போன்றன தெருக்கூத்துக்களில் முதன்மையாக விளங்கி வருகின்றது.

**ஒயிலாட்டம்:-** கிராமியக் கோவில்களில் ஒயிலாட்டம் விழாக் காலங்களில் ஆடப்படுகின்றது. இதிகாச புராண வரலாற்றுக் கதைகளே ஒயிலாட்டத்தில் பாடப்படும். கட்டபெம்மன் மதுரைவீரன், வள்ளி, திருமணக் கதைகள் இடம்பெறும். ஒயிலாட்டம் ஆடுபவர் வெள்ளை ஆடை அணிந்து இருப்பர். காலில் சலங்கையும் கட்டியிருப்பர். கையில் ஆளுக்கொரு கைக்குட்டையைப் பிடித்து இருப்பர். நுனியில் பிடித்து அதை அழகாக வீசியபடியே பாடி ஆடுவர்.

**கோலாட்டம்:-** கோலாட்டம் என்பது பெண்களுக்கென்றே உரிய ஆட்டமாகும். இரண்டு கோல்களைப் பயன்படுத்தி ஒன்றுடன் ஒன்று மோதி ஒலி எழுப்பி ஆடுகின்ற ஆட்டமே ஆகும். சமூகத்தைப் பற்றியும் தலைவர்களைப் பற்றியும் கோலாட்டப் பாடல்கள் எழுதப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் மட்டுமன்றி இந்தியாவின் பிற பகுதிகளிலும் கோலாட்டம் ஆடப்படுகின்றது.

**கரகாட்டம்:-** மாரியம்மனுக்கு ஆடிமாதத்தில் கரகம் எடுப்பது தமிழ் நாடெங்கும் உள்ள வழக்கமாகும். மலர்களைக் கொண்டு அழகான ஒப்பனை செய்யப்பட்ட குடத்தைத் தலையில் வைத்துக்கொண்டு ஆடும் ஆட்டம் கரக ஆட்டமாகும். இறை வழிபாட்டுடன் தொடர்பு உடையது. இந்தக் கலை பல்வகை வண்ண மலர்களால் போர்த்தப்பட்டு அழகாகச் செய்யப்பட்டிருக்கும். இந்த கரகாட்டத்தில் ஆண்கள் பெண்கள் ஒன்றாக ஆடுவது பல அடுக்குகள் கொண்ட கரகத்தைத் தாங்கி ஆடுவது கரகாட்டத்தின் தனிச்சிறப்பு ஆகும்.

**காவடியாட்டம் :-**

காவடியாட்டம் சமய உணர்விற்கும் பொழுது போக்கிற்காகவும் நிகழ்த்தப்படுகின்றது. காவடி தண்டைக் கொண்டு ஆடுவதால் இவ்வாட்டம் காவடியாட்டம் எனப்பெயர் பெற்றது. காவடி எடுத்து முருகக் கடவுளை வழிபடும் நிகழ்ச்சியாகக் காவடியாட்டம் நடைபெறுவது தமிழர்களின் மரபாகும். காவடியாட்டம் இறைவனுடன் தொடர்புடையது ஆதலால் பல கடுமையான நோன்புகளை மேற்கொண்டு எடுப்பர். கலைத்திறனும் ஆடல்நுட்பமும் இதில் மிகுதியாக இருக்கும்.

**கும்மியடித்தல்:-**

பெண்கள் வட்டமாகச் சுற்றிவந்து கைகளால் கொட்டி குனிந்து நிமிர்ந்து ஆடும் ஆட்டம் கும்மியாட்டமாகும். கும்மாய், கும்முதல், குழுமி என்பதிலிருந்து கும்மி என்ற சொல் வந்தது. பழந்தமிழ் இலக்கிய நூலான அக நானூறு, சிலப்பதிகாரத்தில் "கொம்மை" என்ற சொற்களும் வருகின்றன. கோயில் விழாக்கள். பூப்பு நிகழ்ச்சி, மழை பெய்ய வேண்டுதல் போன்ற வைபவங்களில் கும்மி ஆடப்படுகின்றது. கும்மி ஆடும்போது முளைப்பாரி. குத்துவிளக்கு, மலர்க்கட்டை, பலகாரக் கூடை வைத்து ஆடுவார்கள். இத்துடன் தோல் பானை, சிங்கி போன்ற இசைக்கருவிகளும் பயன்படுத்தப்படுகின்றன.

**பொம்மலாட்டம்:-**

பொம்மைகள் வைத்து நிகழ்த்துவதால் பாவைக் கூத்து எனப்படுகின்றது. பொம்மைகள் தோல் பொம்மைகள். மண் பொம்மைகள் என இருவகைப்படும். பாவைகள் மரத்தாலும் தோலாலும் செய்து நூல்களைக் கட்டி ஒரு திரைக்குப் பின்னால் இருந்து ஒருவர் ஆடியசைத்துக் கதைகளை விளங்கச் செய்யும் நாட்டுப்புறக் கலைக்கு பாவைக் கூத்து எனப்பெயர். மரப்பாவைகள் நல்ல ஆடைகள் அணிவிக்கப்பெற்றிருக்கும் தரையில் புரளுமாறு ஆடைகள் பெரிதாக இருக்கும். காண்பதற்கு கால்களே இல்லாமல் மனப் பாவனையில் கால்கள் உள்ளது போல் காட்டப்பெறும். கயிறுகள் இன்றி பொம்மைகள் தாமே இயங்குவதாக மனத்தோற்றத்தை முழுமையாகத் தோற்றுவிக்கிற போது அது கலையாகிவிடுகிறது.

**பறையாட்டம்:-**

பறை அல்லது தப்பு என்கின்ற இசைக்கருவியை இடது கை தோளில் தொங்கவிட்டபடி மார்போடு அணைத்து நீளமான குச்சியை இடது கையினாலும் சிறிய குச்சியை வலது கையினாலும் பிடித்து தாளங்களை அடித்து அடவுகளை ஆடுவதே பறையாட்டம். தப்பு அடித்து ஆடுவதால் தப்பாட்டம் எனவும், பறையர் சாதியினரால் ஆடப்பட்டதால் பறையாட்டம் எனவும் அழைக்கப்படுகிறது. இப்பறை மரக்கட்டைகளால் செய்யப்பட்ட வட்டவடிவச் சட்டத்தில் பதப்படுத்தப்பட்ட மாட்டுத்தோலை இழுத்து ஒட்டிச் செய்யப்படும். ஒன்றே கால் அடி நீளமும் ஒரு செ.மீ. அகலமும் கொண்ட "சிம்புக்குச்சி" (மூங்கில் குச்சி) யைப் பயன்படுத்துவர். இதனை இடக்கையிலும் மற்றும் பூவரசம் கம்பில் செதுக்கப்பட்ட அரையடி நீளமும் மூன்று செ.மீ. சுற்றளவுமுள்ள அடிக்குச்சியை வலது கையிலும் வைத்து அடித்து ஓசை எழுப்பப்படும். தப்பாட்டம் முன்பு "சாவு மேளம்" என்றும் உயர் சாதியினர் கூறினர். இன்று தமிழகத்தின் பல பகுதிகளில் கோயில்களிலும், தேவாலயங்களிலும் தப்பாட்டம் ஆடப்படுகிறது. இவ்வாட்டத்தில் பல அடி முறைகள் உள்ளன. அவற்றில் சில சப்பாத்துஅடி, டப்பா அடி, பாடம் அடி, ஜொயிண்ட் அடி, மருள் அடி, சாமி சாட்டுதல் அடி, சினிமா அடி, மாறடித்தல் அடி, வாழ்த்து அடி என்பவையாகும். இவற்றுக்கு துணைக்கருவிகளாவன:- மரம், சிங்கி, செண்டை, மேளம் போன்றவை பயன்படுத்தப்படுகின்றன.

இவ்வாறு பல ஆடல் வகைகள் இருக்கின்றன. இன்று இந்தியா மட்டுமன்றி மேலை நாடுகளிலும், இலங்கையிலும் கூட ஆடப்பட்டு வருகின்றன. இந்தியாவில் தமிழ் நாட்டு கிராமங்களில் பலவிதமான நாட்டுப்புறக் கலைகள் இன்னும் காணப்படுகின்றன. பாடசாலைகளிலும் பொது நிகழ்ச்சிகளிலும் பழந்தமிழர் ஆடிய நடனம் இன்று அழிவுறாமல் காப்பாற்றப்படுகின்றன. நம்நாட்டில் நாட்டுப்புறக் கலைகள் அருகி வருகின்றன. நவீன யுகத்தில் கலைகள் திரிபுபடுத்தப்பட்டு மரபுகள் மாற்றப்படுகையில் நாட்டுப்புறக் கலைகளும் கைவிடப்படுகின்றன. எனினும் காலச் சுழற்சியில் சில கலைகள் மறைந்திருந்தாலும் நம் மத்தியில் காணப்படும் நாட்டுப்புறக் கலைகளை மறையவிடாது போற்றிக் காக்க வேண்டியது அனைவரினதும் கடமையாகும்.

# நாட்டியக் கலையின் பெருமை



**செல்வி பவிசாலினி வீரசிங்கம்**
தரம் 7A
*வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம்.*

சமய தத்துவங்களையும், கருத்துக்களையும் புலப்படுத்தி மனித குலத்தை ஆத்மீக நெறியில் செலுத்துவதற்கு உகந்ததோர் கலை வடிவமாக உருவாக்கப்பட்டதே நாட்டியக் கலையாகும். மலர், தீபம், தூபம் ஆகிய எல்லாவிதமான உபசாரங்களிலும் நிருத்திய உபசாரத்தையே ஆண்டவன் பெரிதும் விரும்புகின்றான். இப்படிப்பட்ட புனிதமான நாட்டியக்கலையைப் பார்த்தால் ஒருவருக்கு நற்கீர்த்தி, முதிர்ந்த அனுபவம், அழகு, சாதுரியம் நான்கும் அதிகரிக்கின்றது. நாட்டியத்தைப் பயில்பவர்களும் காண்பவர்களும் பரலோகம் என்கின்ற சொர்கலோகத்தினை பூலோகத்திலேயே அடைகின்றார்கள் என விஸ்ணு தர்மேத்திர புராணம் கூறுகின்றது. ஒரு குழந்தையைக் கையிலெடுத்து கொஞ்சி மகிழும்போது ஏற்படுகின்ற பேரானந்தத்தை நாட்டியத்தைக் காணும்போது அடையலாம் அதனாலேயே காரைக்கால் அம்மையார் இறைவனிடம் "அறவா நீ ஆடும் போது உன் அடியின் கீழ் இருக்க வேண்டும்" என்று வேண்டுகின்றார்.

விஞ்ஞான ரீதியாகவும் மெய்ஞான ரீதியாகவும் இக் கலையைப் பற்றி எடுத்து நோக்கினால் இக் கலையைப் பயில்வதால் உடலும் உள்ளமும் ஆரோக்கியம் அடைகின்றது. விஞ்ஞான ரீதியாக எடுத்து நோக்கும் போது நாட்டியக்கலையில் உருவாக்கப்பட்ட ஒவ்வொரு அடவுகளும் நோய் தீர்க்கும் மருந்துகளாகவே காணப்படுகின்றன. தட்டடவைச் செய்யும் போது பாரிசவாதம், பித்தவெடிப்பு, நரம்புச் சுற்று போன்ற நோய்கள் வராமல் தடுக்கப்பட்டு கால் எலும்புகள், பலப்படுத்தப்படுகின்றன. அதே போல நாட்டடவு, குதித்து மெட்டடவு, போன்ற அடவுகளைச் செய்யும் போது சுவாசச் சுற்றோட்டத் தொகுதியில் ஏற்படும் பல விதமான நோய்கள் அகற்றப்படுகின்றன. குனிந்து நிமிர்ந்து தலையை அசைத்து ஆடும்போது தலைக்கு இரத்தோட்டம் செல்வது அதிகரிக்கப்படுகின்றது. அத்தோடு விரைவாக ஆடும்பொழுது சுவாசத் தொகுதியிலுள்ள கொழுப்புக்கள் அகற்றப்படுகின்றது. மாரடைப்பு , அஸ்மா போன்ற நோய்கள் வராமல் தடுக்கப்படுகின்றன. இதை விட அசைந்து அசைந்து சிறு நீரகத்தில் படியும் உப்புக்கள் கற்கள் எல்லாம் கரைக்கப்பட்டு சிறு நீருடன் வெளியேற்றப்படுகின்றது. உடம்பிலுள்ள கழிவுகள் அனைத்தும் வியர்வையாக வெளியேறுகின்றது. முறையான நாட்டியப்பயிற்சி மூலம் தேவையற்ற ஊளைச் சதைகள் உடம்பிலிருந்து அகற்றப்படுகின்றன.

இனி மெய்ஞான ரீதியாக நோக்கும் போது நாட்டியக்கலை சமயத்தோடு ஒன்றிணைந்து வளர்ந்து வரும் கலையாகும். அன்பு, பக்தி, சாந்தம், பணிவு, போன்ற நற்குணப் பண்புகள் உள்ளத்திலே ஏற்படுத்தப்படுகின்றது. கொடுமையான எண்ணங்கள் நீக்கப்பட்டு மென்மையான உணர்வுகள் மனதிலே ஏற்படுத்தப்படுகின்றது. உள்ளம் தூய்மைப்படுத்தப்படுகின்றது. இதனால் உள்ளத்திலே ஓர் புத்துணர்ச்சி ஏற்படும். இதை விட சமூகத்தோடு கூட்டாக செயற்படும் கலையாக இது காணப்படுகின்றது. இதனால் ஒற்றுமை, விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு, மனக்கட்டுப்பாடு, உதவி செய்யும் மனப்பாங்கு, பெரியவர்களை மதித்தல், எதையும் துணிவுடன் செய்யும் ஆற்றல், வெற்றி தோல்வியை ஏற்கும் மனப்பாங்கு என்பன ஒருவருடத்தில் ஏற்படுத்தப்பட்டு சிறந்த ஆளுமை வளர்க்கப்படுகின்றது. அத்தோடு முக வசீகரம் உடல் அழகு, சுறுசுறுப்பு, இன்முகம் போன்றன இயற்கையாகவே நாட்டியத்தைக் கற்கும் ஒருவரிடம் ஏற்படுத்தப்படுகின்றது.

விஞ்ஞான ரீதியாகவும், மெய்ஞான ரீதியாகவும் இக் கலையை நோக்கும் போது இது ஒரு சிறந்த கலையாக கருதப்படுகின்றது. உடற்பயிற்சியும், உளப்பயிற்சியும் ஏற்படுத்தப்படுவதோடு பக்தி சார்ந்த ஆத்மீகத்தை வளர்க்கும் கலையாகவும் காணப்படுகின்றது. நாட்டியக் கலையைப்போல ஏனைய நுண்கலைகளையும் பயிலும்போது இவ்வாறான ஆளுமை வளர்ச்சி ஏற்படும். இந்தப் பூமியில் பிறக்கும் ஒவ்வொரு மானிடரும் இந்த ஆத்மீக ரீதியான கலையைப் பயின்று பயனடைய வேண்டும்.

# தொன்மக் கலைகளில் ஓவியக்கலை



**திரு.பஞ்சநாதன் ராகுலன்**
*யா/கற்கோவளம் மெ.மி.த.க பாடசாலை*
*(வடமராட்சி வலயம்)*

வாழ்வியற் கோலத்தில் ஒரு தனியிடத்தை வகிக்கின்ற இந்த ஓவியக்கலை ஆதிகாலத்தில் இருந்து இன்றுவரை முற்றுப்பெறாத கஞைர்களால் அழியாமல் பேணப்பட்டுக்கொண்டிருக்கின்றது. ஆதிகாலத்தில் அதாவது வாழ்வியலுக்கான ஆரம்பகாலத்தில் ஓவியம் என அறிந்து கொள்ளாமல் தனது வாழ்க்கைக்கான தேவை எனக் கருதி குகைகளில் கோடுகளால் கிறுக்கியும் வர்ணம் பூசியும் தனது நம்பிக்கையை வளர்த்துக்கொண்டான் அன்றைய மனிதன். அதாவது மிருகங்களை வேட்டையாடி அதை உட்கொண்டு வாழ்ந்த மனிதன் கோடுகளால் அம் மிருகங்களை வரைந்து அதை வணங்கி செல்வதாலேயே இரையாக அம் மிருகங்கள் கிடைக்கின்றன என நம்பி குகைகளில் வரைந்து அம்மிருகங்களின் இரத்தத்தைக் கொண்டும், இயற்கையாகப் பெறப்பட்ட பொருட்களைக் கொண்டும், வர்ணங்களைப்பெற்று தாம் வரைந்தவற்றுக்கு வர்ணமும் தீட்டினான்.

இவ்வாறு அறியாமல் செயற்படுத்திய கலையானது தற்போது அறியாமை விலக்கி அறிவைக் கொடுக்கும் தெய்வீகக் கலையாக வளர்ந்துள்ளது எனக் கூறினால் அது மிகையாகாது. காலத்தின் வளர்ச்சிக்கேற்ப இக்கலையானது பொழுதுபோக்கிற்குரியதாகவும், வியாபாரத்திற்குரியதாகவும், விளம்பரத்திற்கும், காட்சிப் பாவனைக்கும், தெய்வீக தன்மையை வெளிக் காட்டவும், கற்றலுக்கும், நோய்களை குணப்படுத்தவும், மன நிம்மதிக்கும், வெவ்வேறு தேவைகளுக்காகவும் வளர்ச்சியடைந்து செல்கின்றது.

ஒவ்வு என்னும் வினையடியாகப் பிறந்த ஓவு, ஓவம், ஓவியம் என்னும் இம் மூன்று சொற்களும் சித்திரத்தையே குறிக்கின்றன. "ஓவினுள்ளத் துள்ளியது வியப்போன்" எனக் கூறும் மணிமேகலைச் செய்யுள் வரியிலிருந்து ஓவியர்கள் புறக் கண் கண்டதை அகக் கண் கொண்டு நோக்கி, அதை அகத்தினிற் தீட்டிப் பின்னர் பிற ஊடகங்களில் வரைந்தனர் என்பது புலனாகின்றது. நிறம் தீட்டாமல் வரையும் ஓவியத்திற்கு புனையா ஓவியம் (outling drawing) என்று பெயர். "புனையா ஓவியம் கடுப்ப" என நெடுநல்வாடை குறிப்பிடுகின்றது. இவ்வாறான ஓவியக்கலை ஓவு, சித்திரம், படம், வட்டிகைச் செய்தி எனப் பல பெயர்களால் குறிப்பிடப்படுகிறது.

ஓவிய நூலின் நுணுக்கத்தை நன்கு கற்று புலமை பெற்றவரை ஓவியப் புலவன் என்றும், ஓவிய மாக்கன் என்றும் குறிப்பிடுகின்றனர். ஆண் ஓவியர்களை "சித்ராங்கதன்" எனவும் பெண் ஓவியரை "சித்ர சேனா" எனவும் அழைக்கப்படுகின்றனர்.

ஓவியத்தின் வரலாறு வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதர்கள் உருவாக்கிய கலைப் பொருட்களில் இருந்தே தொடங்குவதுடன் எல்லாப் பண்பாடுகளையும் தழுவியுள்ளது. இவ் வரலாறு தொல் பழங்காலத்தில் இருந்தே தொடர்ந்துவரும் ஒரு கலை மரபைக் குறித்து நிற்கின்றது. பல பண்பாடுகளையும், கண்டங்களையும், காலப் பகுதிகளையும் இணைக்கும் இம்மரபு 21 ம் நூற்றாண்டிலும் தொடர்கிறது. 20ம் நூற்றாண்டின் தொடக்கப் பகுதிவரை ஓவியம், சமயத் தொடர்புள்ள செந்நெறிக்கால அலங்காரங்களோடு கூடிய காட்சிகளை அப்படியே காட்டும் இயல்பினவாகவே இருந்தன. இதன் பின்னர் பண்பியல் மற்றும் கருத்துரு அணுகுமுறைகளில் ஓவியம் வரைவது விருப்பத்துக்குரியதாகியது. ஓவியக்கலை என்பது வரைதல், கூட்டமைத்தல், பிற அழகியல் சார்ந்த செயற்பாடுகளையும் உள்ளடக்கி கடதாசி, துணி, மரம், கண்ணாடி, சுவர் போன்ற ஊடகங்களில் நிறப் பூச்சுக்களைப் பயன்படுத்தி வரைபவரின் வெளிப்பாட்டு மற்றும் கருத்தியல் நோக்கங்களை வெளிக்கொணரும் ஒரு கலையாகும்.

ஓவியக்கலை பல்வேறு ஆக்கத் திறன்களை உள்வாங்குவதற்கும், ஆவணப்படுத்துவதற்கும் வெளிப்படுத்துவதற்குமான ஒரு வழிமுறை ஆகும். ஓவியங்கள் இயற்கையானவையாகவோ ஒரு பொருளைப்போல வரையப்பட்டவையாகவோ. நிழற் படத்தை ஒத்தவையாகவோ, பண்பியல் தன்மை கொண்டவையாகவோ இருக்கலாம். அத்துடன் இவை ஒரு செய்தியை விளக்கும் உள்ளடக்கம் கொண்டவையாக, குறியீட்டுத் தன்மை கொண்டனவாக, உணர்ச்சிபூர்வமானவையாக அல்லது அரசியல் சார்ந்தவையாகக் கூட இருக்கக் கூடும். ஓவிய வரலாற்றின் பெரும் பகுதியில் ஆன்மீகம் சார்ந்த எண்ணக் கருக்களும் அழகூட்டல்களும் முதன்மை பெறுகின்றன. இத்தகைய ஓவியங்கள் மட்பாண்டங்களில் வரையப்பட்ட புராணக் கதைக் காட்சிகளிலிருந்து வழிபாட்டுக்குரிய கட்டடங்களில், சுவர்களையும் மேல் விதானங்களையும் அழகூட்டும் சமயம் சார்ந்த பெரிய ஓவியங்கள் வரை வேறுபடுகின்றன.

பல்வகைக் காட்சிகள், உருவங்கள் வரைய ஓவியர்கள் அக்காலத்தில் பல்வகைக் கருவிகளைப் பயன்படுத்தினர். இதில் வர்ணந்தீட்டும் கோல் தூகை "வட்டிகை" எனப்பட்டது. அக்காலத்தில் ஓவியங்கள் வரைவதற்கென்று தனியிடங்கள் அமைந்திருந்தன. இவ்வாறான இடங்கள் சித்திரக்கூடம், சித்திரமாடம், எழுது நிலை மண்டபம், எழுதொழில் அம்பலம் என்ற பெயர்களால் அழைக்கப்பட்டது.

அந்த வகையில் ஓவியக் கலைகளை சிறப்பானவையாக செயற்படுவதற்கு சில அம்சங்கள் முக்கியமானதாக நோக்கப்படுகின்றது. எந்தவொரு கலைப்படைப்பையும் உருவாக்குவதற்கு மட்டுமல்ல உள்வாங்குவதற்கும் அதனுடைய கூறுகள் (Elements) மற்றும் கொள்கைகளை (principles) புரிந்து கொள்வது மிகவும் முக்கியமாகும். அந்த வகையில் ஓவியத்தின் கூறுகள் கூறுகள், ஓவியக் கொள்கை என நோக்கும்போது.

| ஓவியக் கூறுகள் | ஓவியக் கொள்கைகள் |
|---|---|
| 1.கோடு (line) | 1.சமநிலை(Balance) |
| 2.வர்ணம் (colour) | 2. ஒருமை (unity) |
| 3.ஒளித்தகவு(value) | 3.வேற்றியல்பு (contrast) |
| 4.வடிவமும் உருவமும் (shape and form) | 4.முதன்மை (Emphasis) |
| 5.வெளி (space) | 5.பாங்கு(Pattern) |
| 6.இழையமைவு (Texture) | 6.அசைவு மற்றும் லயம் (Movement and Rhythm) |

இதன் அடிப்படையில் ஒவ்வொரு கலைகளையும் உருவாக்க ஏதோ ஒன்று கருவியாக இருக்கின்றது. அதேபோன்று ஓவியத்திற்கும், வடிவமைப்பாளர்களுக்கும் கருவியாக இருப்பவை கோடு, வர்ணம், ஒளித்தகவு, வடிவமும் உருவமும், வெளி, இழையமைவு என்பவை ஆகும்.

மேற்குறிப்பிட்ட ஓவியக் கூறுகள் நம் உலகின் ஒவ்வொரு இடத்திலும் இருக்கிறது. ஒவ்வொரு ஓவியரும் வடிவமைப்பாளரும் இந்தக் கூறுகளை அவர்களது விருப்பத்திற்கு ஏற்றாற்போல் பயன்படுத்துகின்றனர். நாம் பார்க்கும் ஒவ்வொரு பொருளும் உருவமாக இருக்கிறது. நமது தொடக்க கால நாகரிகத்தை கோட்டு ஓவியங்கள், பதிப்பு ஓவியங்கள் மற்றும் வண்ண ஓவியங்கள் மூலம் தெரிந்து கொள்ளலாம். ஒரு குழந்தையின் முதல் கலை வெளிப்பாடு என்பது அந்தக் குழந்தையின கிறுக்கலில் இருந்து பிறக்கின்றது. ஓவியக் கலையின் இரகசியம் கோடுகளில் தான் அடங்கி இருக்கிறது. நாம் பயன்படுத்தும் கோடுகளைப் பொறுத்தே நம் ஓவியங்களின் தரம் அமைகின்றது. அதில் வரி வடிவம் தான் மிகவும் முக்கியமானது. அழுத்தமாகவும், ஆழமாகவும் படைக்கப்படும் கோடுகள் பெரிதும் மதிப்புடையது.

இந்த வகையில் ஓவியக் கலையானது கோடுகளையும் வர்ணங்களையும், பிரதானப்படுத்தி கற்பனைக் கோலமாகவும், கட்புலக் காட்சியாகவும், தொட்டு உணரக் கூடியதாகவும், பண்பியல் ரீதியானதாகவும் வளர்ச்சி பெற்று வருகின்றது. இவை தற்காலத்தில் அலங்காரங்கள், கிரபிக், மெய்யுருக்கள், இயற்கைகள், செயற்கைகள், கட்டிடங்கள் என்ப நவீன முறைக்கேற்ப வரையப்பட்டு கற்றல் செயற்பாடுகளுக்கும், மன நிம்மதிக்கும், வருமானத்திற்கும், பொழுதுபோக்கு செயற்பாட்டிற்கும் பெரிதும் உதவியாகத் திகழ்கின்றது. இக்கலையானது கற்குகைகளில் தொடங்கி கற்கைக்கு ஒரு வழிகாட்டியாக திகழ்ந்து வருவதால் இது அழியாக் கலையாக வளரவேண்டும் என்பதே பலரது எதிர்ப்பார்ப்பாகும்.

# பாட்டன் கால கலையிதுவோ



**அ. காந்தறூபி**
கிளி/ பளை மத்திய கல்லூரி

வெள்ளியன்று மாலையிலே என் பாட்டன் உள்ளமதில்
வெளி வந்த குமுறலிது - அன்று நம்
பாட்டன் பூட்டன் காலத்திலே ஆட்டத்துடன் பாடலென
மெச்சி நின்ற எம் கலையிதுவே

காத்தவராயன் கூத்தென்ன தெருக்கூத்து என்றதுமே
சின்னையாண்ணை அன்னமக்கா சுந்தரமென
அறுபத்தெட்டு குரல்களும் ஒத்து ஒலித்திடுமே
ஐந்து மணிக்கெல்லாம் கூத்து ஆரம்பமென்றோ

மாமியும் மருமகளும் சிறுசுகளும் பெரிசுகளும்
ஆரவாரப்படுமந்தக் காட்சியே அழகு தானப்பா
அடுப்படியில் பிட்டுப்பானை கிணற்றடியில் உடுபுடவை
முற்றத்து கஞ்சல்களை ஆங்காங்கே பொறுக்கிவிட்டு

குளியல் எனும் சாட்டில் நான்கைந்து வாளி ஊற்றிவிட்டு
சிங்காரம் செய்து சீக்கிரமாய் வெளிக்கிட்டு நடந்திடுவர்
வறுத்து வைத்த கடலையை கையில் எடுத்தபடி
கிராமத்து மேடையாம் எங்கள் ஆலமரத்தடிக்கு

கட்டப்பொம்மன் கதை தனை வெள்ளாடை
அணிந்தபடி
கைக்குட்டைதனை அழகாய் வீசியாடும் ஒயிலாட்டமும்
மயிலிறகால் அலங்கரித்த பெண்கள் நின்றும் இருந்தும்

மெய்யான மயில் போன்றாடும் மயிலாட்டமும்
உறியடியும் கும்மியும் கோலாட்டம் பொய்க்கால் குதிரையும்
வில்லுப்பாட்டு பாம்பாட்டம் தெருக்கூத்துடனே
அழகான ஆடவர் தம் கணுக்காலில் மணிகட்டி இசையோடு
நடனமாடும் ஒயிலாட்டமும் தனி ரகமல்லோ

இரவு வேளைதனில் திறந்தவெளி எரிவாயுடனே
தெருக்கூத்தும் அங்கு நடப்பதுண்டு-நீண்டதொரு
சிலம்புதனை வளைத்தாட்டும் சிலம்பாட்டம்
புலியாட்டம் பொம்மலாட்டம் இன்று இலைமறை காயல்லோ

பாட்டனன்று கூறுகையில் எனக்குள் வந்ததுண்டு ஆயிரம்
கற்பனைகள் ஆடிப்பாடி வாழ்வின் உண்மைதனை
கூறுமந்த கரகாட்டம் மயிலாட்டம் பொம்மலாட்டம் எல்லாம்
நம் சிறுவர் காண்பது இன்று சினிமாப் படத்திலல்லலோ

# மடுக் கல்வி வலய
# முழு நிலா நாள் கலைவிழா - 2018
# நிகழ்ச்சிகளில் சில...










# மடுக் கல்வி வலய
# முழு நிலா நாள் கலைவிழா - 2018
# நிகழ்ச்சிகளில் சில...















# உளச் சிகிச்சையாக அரங்கு



**திரு. து. ஆயூரன்**
*ஆசிரியர் - நாடகமும் அரங்கியலும்*
*யா/மகாஜனக் கல்லூரி*

இன்றைய நவீன யுகத்தில் ஒவ்வொரு மனிதர்களும் நாளாந்த வாழ்வில் ஏதோ ஒரு பிரச்சினைக்கு முகங்கொடுக்க வேண்டிய சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அப்பிரச்சினைகளுக்கு வெற்றிகரமாக முகம் கொடுப்பவர்கள் தமது வாழ்க்கைப் பயணத்தில் சீராக பயணித்துக் கொண்டு இருக்கின்றனர் ஏனையோர் ஏதோ ஒரு உளப்பிரச்சினைக்கு உள்ளாக்கப்படுகின்றனர். இன்று உலகளாவிய ரீதியில் உளச்சிகிச்சைக்கான பல்வேறு நுட்பங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அதில் நாடகம் என்பது ஒரு Therophy ஆக பயன்படுத்தப்பட்டு வருகின்றது. அது இன்று ஒரு Therophy ஆக கண்டுபிடிக்கப்பட்டு கையாளப்பட்டு வந்தாலும் உலக வரலாற்றிலே அறிந்தும் அறியாமலும் பல்வேறு விடயங்களில் நாடகமானது உளச்சிகிச்சைக்காக பயன்பட்டு வந்துள்ளதை நாம் மனம் கொள்ளவேண்டும்.

நாடகத்தின் தோற்றத்திற்கு மக்கள் மத்தியில் நிலவி வந்த சடங்குகளே காரணம் என்கிறார் ஜே.தொம்சன் அவர்கள். அச்சடங்குகளில் இருந்து நாடகமானது தோற்றம் பெறுகின்றபோது ஒவ்வொரு படிநிலைகளைத் தாண்டியே அது தோற்றம் பெற்றது. அதில் முதலாவது படிநிலையான மதகுருவே தெய்வமாக அபிநயித்து ஆடும் சடங்கில் மக்கள் தமது பயத்தை போக்குவதற்காக அச்சடங்கினை மேற்கொண்டுள்ளனர். அதன்பின்னர் மதகுரு இயக்க இன்னொருவர் தெய்வமாக அபிநயித்த சடங்குகளில் மக்கள் தமக்கேற்பட்ட நோயினைத் தீர்த்துக்கொள்வதற்காக அச்சடங்கினை மேற்கொண்டனர். இதனை எமது ஈழத்தின் சிங்கள அரங்கிலே தொவில், ரட்டயக்கும, சன்னியக்கும, கொஹொம்பகங்காரிய போன்ற சடங்குகளிலும் தமிழகத்தின் களவேள்வி, வேலன்வெறியாடல், தைநீராடல், ஆய்ச்சியர்க்குரவை, குன்றக்குரவை, வேட்டுவ வரி போன்ற சடங்குகளிலும் காணமுடிகின்றது. இவ்வாறான சடங்குகள் உலகின் பல்வேறு சமூகங்களிலும் நிகழ்த்தப்பட்டுள்ளதை நாம் காணமுடிகின்றது போர்னியாவில் “டயக்” எனும மக்கள் பிரிவினருடைய பாசத்தை இலகுபடுத்துவதற்காக மந்திரவாதி ஒருவன் வயிற்றிலே கல் ஒன்றினைக்கட்டி அதை ஆட்டி அசைத்து மந்திரங்கள் ஜெபிப்பதாக கூறப்படுகின்றது. இச்சடங்கு நிலை அரங்குகளிலேயே மக்களின் உளத்திருப்தி அல்ல உள சமுக நன்நிலையைப் பேணுதல் என்பது நோக்கமாக இருப்பதை அறியமுடிகின்றது.

நாடகத்தின் தொட்டிலாக விளங்கும் கிரேக்கத்தில் நாடக ஆற்றுகையின்போது உளவியல் சார் பல்வேறு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதனை காணமுடிகின்றது. கிரேக்கத்தின்

திறஜெடி நாடகங்களில் கொலை, கொள்ளை, சண்டைக்காட்சி, இரத்தம் சிந்துதல் போன்ற உளத்தைப் பாதிக்கும் செயல்கள் தவிர்க்கப்பட்டிருந்தன ஆரம்பகாலத்தில் அவலச்சுவை நாடகங்கள் ஆற்றுகை செய்யப்படுகின்றபோது மூன்று நாடகங்களைக்கொண்ட ஒரு தொகுதியாகவே ஆற்றுகை செய்யப்பட்டன. அம்மூன்று நாடகங்களையும் பார்க்கும் பார்வையாளரின் உளம் பாதிப்படைந்து விடக்கூடாது என்பதற்காகவே அங்கதச்சுவை கொண்ட மகிழ்வை உண்டு பண்ணக்கூடிய சற்றயர் நாடகங்கள் ஆற்றுகை செய்யப்பட்டன. இவை யாவும் உளம் பாதிப்படைந்து விடக்கூடாது என்பதற்கான ஏற்பாடாக இருந்த நிலையில் உளம் பாதித்தவருக்கான சிகிச்சையாகவே "கதாசிஸ்" எனும் உணர்ச்சி வெளியேற்றக் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. அதில் பயம் மற்றும் கழிவிரக்கம் ஆகிய இரு உணர்வுச் சமநிலைகள் பேணப்பட்டு வந்தன. இதற்கு அடுத்த படியாக கிரேக்க அரங்கே ஒரு விதத்தில் உளச்சிகிச்சை நிலையமாக விளங்கியிருந்தது. அதாவது பதினாறாயிரம் பேர் இருந்து பார்க்கக்கூடிய வட்டப் பேரரங்கில் அதிகமான மக்கள் கூடி ஒருவரோடு ஒருவர் உரையாடி மன ஆறுதல் அடையும் சந்தர்ப்பத்தினை அது வழங்கி இருந்தது அதனாலேயே கிரேக்க அரங்குகளைத் திருவிழா அரங்கு என அழைத்திருந்தனர். இதேபோன்ற ஏற்பாடுகள் எமது ஈழத்தின் கூத்தரங்குகளிலும் வழக்கில் இருந்தன. கூத்து மரபிலே "சுமையிறக்கல் - நடிப்பினால் மனப்பாரம் குறைதல்", உத்திப்பிடித்தல் - ஆடல் பாடல் கூடிக் கருமமாற்றல்" போன்ற பல்வேறு அம்சங்கள் உளச்சிகிச்சையாக அமைந்திருந்தன. இன்றும் வடமராட்சியில் அமைந்துள்ள நெல்லண்டை பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் நேர்த்திக்காக கூத்துப்போடும் வழக்கம் உண்டு.

இதன் தொடர்ச்சியாகவே ஆசிய அரங்கின் யப்பானிய நாடகங்களில் "யூஜின்" எனும் உணர்வு நிலை பேசப்படுகின்றது. இவ் உணர்வு நிலையினால் பார்ப்போர் மத்தியில் ஏற்படும் உளத் திருப்தியினை "யூகன்" என அழைக்கின்றனர். இந்தியாவின் சமஸ்கிருத அரங்கிலே மகிழ்வான முடிவுகளை மாத்திரம் கொண்ட நாடகங்களே அரங்கு ஆற்றுகை செய்யப்பட்டு வந்தன. இவ்விதமாக உலகின் பல்வேறு அரங்கப் பண்பாடுகளிலும் உளச்சிகிச்சையாக அரங்கு பயன்பட்டு வந்ததை நாம் அவதானிக்க முடிகின்றது.

அரங்கின் வளர்ச்சிப் போக்கில் சமூக ஏற்றத்தாழ்வுகள் உள்ளடக்கிய அரங்க மரபுகளையும் நாம் மறந்துவிட முடியாது. சமஸ்கிருதத்தின் மார்க்க, தேசி அரங்குகள் சிலப்பதிகாரத்தின் வேத்தியல், பொதுவியல் அரங்குகள் குறிப்பிடக்கூடியவை. இதற்கு சமூக வரலாற்றில் இடம்பெற்ற பறிப்பு (Exploitation)நடவடிக்கையினூடான கலைப்பறிப்பு காரணமாய் இருந்தது. மேலைத்தேய அரங்குகள் பெரும்பாலும் இதற்கு விதிவிலக்காகவே இருந்து வந்துள்ளன. இருந்தபோதிலும், தேசி மற்றும் பொதுவியல் அரங்கினை சார்ந்த அடிநிலை மக்கள் உளச் சிகிச்சைக்காக நாடகங்களைத் தொடர்ச்சியாக ஆற்றுகை செய்து வந்தனர்.

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் அரங்க வரலாற்றில் பல்வேறு அரங்கப்போக்குகள் மேற்கிளம்பின அபத்த அரங்கு, ஒடுக்கப்பட்டோருக்கான அரங்குகள், அதில் அடங்கும் விவாத அரங்கு, படிம அரங்கு, கலந்துரையாடல் அரங்கு, கண்ணுக்குப் புலனாகாத மற்றும் சிகிச்சை என அவற்றின் பட்டியல் இன்றுவரை நீண்டு கொண்டே செல்கின்றது.

நாடகங்கள் தமது பேசுபொருளாகச் சமூகப் பிரச்சனைகளையே கொண்டிருந்தன. தாக்கங்களுக்குட்பட்டோர் மீளவும் ஈடுபடுவதற்கு அது வாய்ப்பளிக்கிறது. இச் செயற்பாடு சிலரை உளத்தாக்கத்தில் இருந்து குணமடையச் செய்யும், சிலரை மேலும் நோய்க்குள்ளாக்கிவிடும். இதனை வேறு பிரித்தறியும் ஆற்றல் உடையவர்களாக உளவளத் துணையாளர்கள் செயற்பட வேண்டும். பொதுவாக உளச்சிகிச்சைக்காக அரங்கை பயன்படுத்தும்போது அங்கு பின்வரும் நோக்கங்கள் எய்தப்படுகின்றன.

1. குறித்த பாத்திரம் ஒன்றை ஏற்று நடிப்பதால் ஏற்படும் உளத்திருப்தி.
2. பார்வையாளராக இருந்து உளத் திருப்தி அடைதல்.
3. நாடகச் சம்பவங்களோடு தனது சொந்த அனுபவங்களை ஒப்பிட்டு ஏற்படும் உளத்திருப்தி.
4. கூடிக் கருமமாற்றுவதால் ஏற்படும் உளத்திருப்தி.
5. உரையாடல்களை மேலும் நீட்டியும், விபரித்தும், நெறிப்படுத்தியும் உளத் திருப்தி அடைதல்.
6. நாடக பாத்திரங்களை முன்மாதிரிகளாக கொண்டு தமது நடத்தைகளை மாற்றி அமைத்தல்.
7. நிஜ வாழ்வில் கிடைக்கப்பெறாத பாத்திரத்தை நாடகத்தில் நடிப்பதன் ஊடாக ஏற்படும் திருப்தி.
8. கலந்துரையாடல் அரங்கில் சம்பவங்களும் முடிவுகளும் மாற்றி அமைக்கப்படுவதால் ஏற்படும் திருப்தி.
9. நாடகப் பயிற்சிகளின்போது உளத் திருப்தி.
10. உடல், உள்ளம், மனவெழுச்சி ஆகியன ஒன்றிணைந்து இயங்குவதால் ஏற்படும் உளத் திருப்தி என பல்வேறு அம்சங்கள் அரங்கின் ஊடாக உளத் திருப்தியை கொடுத்து நிற்கின்றன.

# யாழ்ப்பாணன்
# (இசைநாடகம்)



**யோ. யோண்சன் ராஜ்குமார்**
*ஆசிரியர்*
*யா/யாழ்பாணம் இந்துக் கல்லூரி*

பாத்திரங்கள்

| | | |
|---|---|---|
| கவிவீர ராகவன் (யாழ்பாடி) | - | கண்தெரியாத யாழ்பாடி |
| மலர்விழி | - | கவிவீர இராகவனின் மனைவி |
| நரசிங்கன் (ஏலேலசிங்கன்) | - | உக்கிர சிங்கன் மன்னனின் மகன் செங்கடக நகரை (கந்தரோடை)ஆள்பவன் |
| தளபதி | - | செங்கடக நகர் தளபதி |
| மந்திரி | | செங்பகடக நகர் மந்திரி |
| புலவர்கள் 1.2.3 | - | செங்கடக நகர் அரசவைப் புலவர்கள் |
| வீரன் 1.2.2 | - | படைவீரர்கள் |
| படகோட்டிகள் 1.2.3 | | |

**காட்சி 1**

இராகம் :-சிந்துபைரவி மெட்டு :- 'காசி நாதா கெங்காதரா' தாளம் :- ஆதி

கவிவீர இராகவன் வரவு (யாழ்பாடி)

பல்லவி

ஆதி நாதா அரனே சிவா
அருளைப் பொழிவாயே
சோதியே என் சொர்ணா உனை
பாடினேன் பாணனே
பார்வை நீயே பேதை எனக்கே
ஆதாரமும் நீயே. தொகையறா
அம்பலத்தானே அண்டமதை ஆள்பவனே
அந்தகன் எனக்கேன் நிந்தையையா
அறிவை தந்தாய் அகில நாதா
ஏன் வேதனை கூறாய்.

ஆதி....

(வசனம் ) அண்டசராசரங்களையெல்லாம் ஆண்டு நடத்தும் எம்பெருமானே, வசையிலா இசையினால் எவரையும் வசியம் செய்யும் ஆற்றலைத் தந்தாய், ஞானக் கண்ணால் உன்னையும் உலகையும் காணச்செய்தாய், என் ஊனக்கண்ணை மட்டும் ஏன் பறித்தாய்.. அந்தகன் என்று இந்த உலகம் என்னை நிந்தனை செய்கிறதே.

(தடுமாறியபடி பாணன் தனது வீட்டிற்கு வந்து சேருதல்)

மலர்விழி : என்ன வந்து விட்டீர்களா - இன்றும் வெறுங்கைதானா? இந்த யாழை வீசி விட்டு வீதியில் இருந்து யாசகம் செய்யலாம்.

யாழ்பாடி : ஏனம்மா இப்படித் தூற்றுகிறாய்.

மலர்விழி : நான் தூற்றவில்லை வீட்டில் அடுப்பை ஏற்றுவதற்கு ஏதுவழி சொல்லுங்கள் .

யாழ்பாடி : அதற்காகத்தானே இத்தனை காதம் நடந்து தொண்டைமான் மன்னனிடம் சென்றேன்.

மலர்விழி : புரிகிறது கண்ட உடனே அள்ளிக் கொடுத்திருப்பார்.

யாழ்பாடி : அவரைக் காணவிடாது துரத்திவிட்டார்கள்

இராகம் : செஞ்சுருட்டி

மெட்டு : "மார்கழி மாதம் திருவாதிரை நாள்" தாளம் :- ஆதி

யாழ்பாடி :
தொண்டைமான் வேந்தனின்
அண்டை நான் சென்றே
யாழ்தனை நான் இசைத்தேன் அந்தகன் என்றென்னை
நிந்தனை செய்தே
தள்ளினார், துயரடைந்தேன்.

இராகம் :-சங்கராபரணம்

மல்ர்விழி : நாண முண்டோ கூறும் - உமக்கு
மான முண்டோ ஏதும்
நயனமின்றி நீரும் - நல்ல
கலைகள் செய்யலாமே.

யாழ்பாடி : நயனமேன் பொண்ணே
நான் இசை பொழிந்தால்
நானிலம் வணங்காதே
யாழிசை கேட்டால்.
யாசகன் கூட
என் இசை வசமாவான்.

மலர்விழி : எண்ணாங் கொண்ட மனுஷா - உனக்கு
ஏது உண்டு உலகில்
ஏழ்மைக்கோலம் மாற - உம்மால்
ஏது செய்யலாகும்.

யாழ்பாடி : என்னை அந்தளவுக்கு பயனற்றவன் ஆக்கிவிட்டாயே

மலர்விழி : வெறுங்கை முழம் போடாது.

விருத்தம் இராகம் :- தன்னியாசி

மலர்விழி : யாழினை மீட்டி நீரும் ஊதிபம் பெறுவதெப்போ
ஊழியம் ஒருங்கே வந்து
உறு பசி தீர்க்குமோ சொல்
ஆக்கமாய் ஏது செய்தீர்
யாக்கையை வெல்லுதற்கே
போக்கிடமின்றி நானும்
பதியென வந்து மாண்டேன்

யாழ்பாடி : விருத்தம் இராகம் :- கானடா

ஏதுமில்லாதாய் என்று ஏசினாய் என் பதியே
தீது வாதில்லா வாழ்வில் தெய்வமெனகூட உண்டே
நாதி இல்லாதான் என்று நயத்தனை நீயுமென்னை
நற்கலை அறியாமண்ணில் நானித்தரித்திலேனே

யாழ்பாடி : நாமகள் எனக்குத்தந்த நற்கலையை இந்த நாடும் அறியவில்லை. என்னை விரும்பி மணந்த என் பத்தினி நீயும் அறியவில்லை. பின்னர் நான் ஏன் இங்கு இருக்க வேண்டும் இசைக்கலையை மதிப்பதற்கு ஈழதேசம் உண்டு. பற்றுறுதிமிக்க முத்தமிழர் அங்குதான் இருக்கின்றார்கள் என அறிந்தேன் - நான் அங்கே செல்கிறேன்

மலர்விழி : என்ன ஈழதேசம் போகப்போகிறீரோ? அதுவும் கடல் கடந்து..?
அங்கு போய் என்ன வளநாடும் மழகளிறும்
வாங்கிவரப்போகிறீரா. ஆ... வாங்கி வாரும் வாங்கி வாரும்...

(யாழ்பாடி கோபமாக வெளியேறுதல்)

காட்சி -2

இடம் : துறைமுகம்

யாழ்பாடி : ஐயா!. துறைமுகத்திற்கு போவதற்கு யாராவது வழிகாட்டுங்கள்.

இராகம் :- சிந்து பைரவி மெட்டு :- "வேகமாய் நடந்து.."

தாளம் :- ரூபகம்

சிந்தை கனக்குதே நிந்தை வருத்துதே
முந்தை வினைப்பயனோ
எந்தை நாடே உன்னை விட்டுப் பிரிந்தே
ஏகினேன் நெடு வழியே

அந்தகன் எந்தனை வெந்துறையில் சேர்ப்பீர்
பாதை தெரியவில்லை
நொந்த மனத்துடன் நாடுவிட்டேகினேன்
நல்லவரே உதவீர்.
தொண்டை நாடு விட்டு அண்டை நாடு சேர
தோணிகளிங்குண்டோ
தம்பியரே தயவோடு வழிசெல்லும்
தமியனெனக்குதவுவீரே!

வசனம் : ஐயா! உங்களுக்கப் பெரும்புண்ணியம் கிடைக்கும் என்னையும் உங்கள் படகிலேற்றி. லங்காபுரியில் விட்டுவிடுங்கள்.

படகோட்டி 1: லங்காபுரிபோய் என்ன செய்யப்போகிறீர் ஐயா.?

படகோட்டி 2: வேறு என்ன யாசகம் செய்யப்போகிறாரோ என்னவோ.

யாழ்பாடி : நான் யாசித்து வாழ்பவனாக இருந்தால் இங்கேயே வாழ்ந்திருப்பேன்.

படகோட்டி 1 : ஒகோ... ஐயாவுக்கு கண்கள் தான் இல்லை தன் மானம் தலைக்கு மேல் இருக்கிறது.

படகோட்டி 2 : சரி அங்கு எங்குதான் போகப் போகிறீர்கள்.

யாழ்பாடி : லங்காபுரியின் செங்கடக நகரையாளும் நரசிங்க மன்னனை காணச் செல்கிறேன்.

படகோட்டி 1 : ஏன்....?

படகோட்டி 2 : அதையேன் நமக்கு... ஐயா.... உங்களை கொண்டு போய் விடுவதென்றால் 6 வெள்ளி தரவேண்டும்

யாழ்பாடி : தம்பிமாரே நானொரு புலவன். யாழிசைத்துக் கவிபாடிப் பிழைப்பவன்.. தற்சமயம் என்னிடம் எதுவும் இல்லை இந்த யாழைத்தவிர.அங்கு சென்று..

பாடகோட்டி : சரி கூலியாக அவரது யாழினைப் பறித்து விடுவோம்....ம்.. ஏறுங்கள் (யாழ்பாடியை கைபிடித்து ஏற்றி விடுதல் )

இராகம் :-சங்கராபரணம் மெட்டு :- "மணிபுரம் விட்டோம்.." தாளம் :- ஆதி

படகோட்டிகள் :-
ஏலை ஏலோ ஏலோ ஏலோ
ஏலவலே ஏலோ
ஏலை ஏலோ ஏலோ ஏலோ
ஏலவலே ஏலோ

பாரத நாட்டின் தரை தனை விட்டே
படகதனைத் தொட்டோம்
ஈழ வளத்திரு நாடு அடைந்திட
பயணமதைத் தொட்டோம்.

இந்து சமுத்திரம் மீதினிலே அலை
சிந்தி விளையாட
நந்தவனக்கொடி கொண்டபடகது
நிமிர்ந்து போகுது பார்

படகோட்டி 1: ஜயா - நீங்கள் புலவர்தானே பாடலொன்றை எடுத்துவிடுங்கோ
படகோட்டி 2 : பொழுது போகும்.

இராகம் :- சாருகேசி மெட்டு :- "அல்லி மகா இராணி.." தாளம் :- ஆதி

யாழ்பாடி :

விருத்தம்

ஓசையால் உயர்ந்தோய் உன்னில்
ஓடங் கொண்டமர்ந்தோம் அம்மா
நேசமாய் அரவணைப்பாய்
நீ கிளர்ந்தால் நாம் அழிந்தோம்
நாவார உன் நாமம் புகழ்வோம்.
நீர் மகளே இரங்கிடம்மா
நிலமகளை நலமுடனே நாமடைய
நீடுவழி நடந்திடம்மா

பல்லவி

வங்கக் கடலாட எங்கள் படகோட
ஈழுவள நாடு காண எங்கள் ஆவல் ஓங்க

சரணம்

குடதிசையாக கொண்டலது வீசும்
அலையோடு பேசிப்பறைந்து ஓசை ஓங்கப்பாடும்.

இராமரிட்ட பாலம் போகும் வழி காட்டும்.
நம்ம தமிழ் உறவுகளின் நேச கதைகள் பேசும்.

படகோட்டி 1: ஐயா... அந்தக் கலைவாணியே உங்கட நாவில இருக்கிறாள்.
படகோட்டி 2: என்ன தெய்வீகமான இசை....
படகோட்டி 1: ஐயா உங்களை சங்கை செய்யாமல் பேசிப்போட்டம் எங்கள மன்னிச்சுக் கொள்ளுங்க..
படகோட்டி 2: நாங்கள் காயத்துறைக்கு வந்தது இறங்கி இருக்கிறம் .இனி நீங்கள் உங்கட பயணத்தை தொடரலாம்.
யாழ்பாடி : மெத்தப் பெரிய உபகாரம் தம்பி.. உங்கட வெள்ளி..
படகோட்டி 1 : அது ஒண்டும் வேணாமையா... நீங்கள் பாடின பாட்டிக்குப் பெறுமதியே இல்லை ஐயா.. நீங்கள் போய் வாருங்கோ....

இராகம் :- மெட்டு :- தாளம் :-

யாழ்பாடி : செந்தமிழோங்கிடும் அந்தமில்லாத்தீவின் சொந்தங்களே கேளீர்.
அந்தகன் எந்தனை வேந்தனின் மாளிகை சேர்ந்திட வழிசொல்வீர்.

காட்சி -3
நரசிங்க மன்னன் வரவு
இராகம் :-மத்தியமாவதி மெட்டு :-"இறை தேவனை" தாளம் :-ரூபகம்

அலையாடிடும் ஈழ நாடு
எழிலோடதை ஆளும் வேந்து
வீர தீரமாக ஆண்டிடும்
மகராசன் நரசிங்கன் நானே -இந்த
செங்கடக நகரையாளும்
நரசிங்கன் என் பெயர் கேளீர்

வான் பொழிவும் மண்விளைவும்
மாண்புடனே சிறந்தோங்க
மேன்மையுறு குடிமக்கள் நிம்மதியாய் வாழ்ந்தோங்க
வான் புகழும் சைவ நீதி தேசமெங்கும் சிறந்துயர
நீதியோடு நிதமும் ஆளும் மகராசன் என் பெயர் நரசிங்கன்

மந்திரி : செங்கடகம் ஆளும் நரசிங்க பூபதி!
எல்லோ : வாழ்க! வாழ்க!
மந்திரி : உக்கிரம சிங்கனின் உத்தம புத்திரன்
எல்லோ : வாழ்க! வாழ்க!
மந்திரி : வங்கக் கடலாளும் வீரதிலகம்
எல்லோ : வாழ்க வாழ்க!
மந்திரி : முத்தமிழ் வளர்க்கும் சித்திரன்
எல்லோ : வாழ்க ! வாழ்க !
நரசிங்கன் : வாழ்த்துக்களுக்கு நன்றி
மந்திரி : புலவர்களே உங்கள் புகழ்பாடல் தொடங்கட்டும்

விருத்தம் இராகம் : காம்போதி

புலவர்கள் : செங்கடக நகரையாளும்
செந்திருவே சிங்கேறே..
சங்கம் முதல் தமிழ்வளர்த்த
சான்றோரின் வழிமரபே
பொங்குகடலெங்கணுமே
புகழுடைய பூபதியே
மங்காது தமிழ் காக்கும்
மாமன்னா வாழியவே...

நரசிங்கன் : நன்றி புலவர்களே.. ஆனால் இன்று உங்கள் புகழ்ச்சிகள் ஏதும் என்சிந்தையை தொடவில்லை.
மந்திரி : தாங்கள் வரும்போதே. தங்கள் வதனத்தில் சிறிய வாட்டத்தினை கண்டேன்.. ஏன் மன்னா ஏதும் உடல் நலத்தில் குறைவோ.
நரசிங்கன் : இல்லை மந்திரியாரே... இரவிலே கண்ட கொடிய கனவு ஒன்று என் சிந்தனையை ஆட்கொண்டுள்ளது. அதற்கு சரியான தீர்வு காணும் வரை என் மனம் ஓயப்போவதில்லை
மந்திரி : கலக்கமேன் மன்னா... அதற்குத்தானே நானும் அறிவில் உயர்ந்த இந்தப் புலவர்களும், இங்கே காத்துக் கிடக்கிறோம்.
புலவர் நீங்கள் கண்ட கனவை கூறுங்கள் மன்னா

நரசிங்கன் : கூறுகிறேன்...அப்படி ஒரு சம்பவம் என்மண்மீது என்றும் நடக்க கூடாது என்று வேண்டிக் கொண்டே கூறுகிறேன்.

விருத்தம் இராகம் :-தன்னியாசி

நரசிங்கன் : மா கொடிய நாளதொன்றில்
பெரும்படைகள் பல சூழ்ந்தே
பொருதியே போர் தொடுத்தே
சதிபுரிந்தெமை வென்றார்
ஏந்தலாம் எனையும் கொன்றே
குடிகளை கருணையின்றி கொலை புரிந்தார்
கண்ணீரும் கதறலுமே
காற்றிலே கலந்ததையா...

மந்திரி : என்ன கொடுமை இப்படியொரு கனவா....?

புலவர் : வெறுங்கனவுதானே ?

இராகம் :- தன்னியாசி மெட்டு :- அங்கொருத்தி வருகிறாள்
தாளம் :-ஆதி

நரசிங்கன் : அப்படியோர் பேரவலம் இப்புவியில் வந்த தென்றால்
செப்பிடுவீர் என்ன செய்குவீர் - என் சபையோரே

மந்திரி : அப்படி நடந்திடுமோ நரசிங்கன் ஆட்சியிலே
துர்க்கனவு தானே மன்னா துயரந் தவிர்த்திடுவீர்

நரசிங்கன் : புலவர்களே நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?

புலவர்1 : மன்னன் இங்கு இல்லை என்றால் மாகுடிகள் என்னவாகும்
மாண்டே மடிந்திடுவோம் மன்னனுனையே தொடர்வோம்.

புலவர் 2: மண்ணதனை விட்டே மாந்தர் மேவிடுவார் வேறு நாடு
யாரிருப்பார் இந்த நாட்டில் ஈசனுனையே பிரிந்தே.

மந்திரி : மன்னா, வெறுங்கனவை நினைத்துக் கலங்குவதேன்?
திருக்கேதீஸ்வரத்தில் சிறப்பு வழிபாடு ஒன்றுக்கு நான் ஏற்பாடு செய்து விடுகிறேன்.

புலவர் 2: மன்னா கனவு பாதகமாக இருக்குமாயின் விளைவு நல்லதாக இருக்குமென்பார்கள்

நரசிங்கன் : நான் அதையிட்டுக் கலங்கவில்லை... அப்படியொரு அபாயம் வரும் போது என்ன செய்யலாம் என்பதை சிந்திக்க வல்ல மதிநுட்பத்துடன் யாம் யாரும் இல்லை என்பது தான்.. என்னுடைய கவலை

மந்திரி : மன்னா....

நரசிங்கன் : போதும் மந்திரியாரே என்னை சற்றுத் தனியே விடுங்கள்....

(மன்னன் வெளியேறுதல்)

புலவர் 1 : மன்னர் ஏன் இப்படிக் குழும்பிப்போயுள்ளார்.

மந்திரி : இல்லை, அவருக்கு நாடுதான் உயிர். இக்கட்டான ஒரு சூழல் ஏற்பட்டால் அதை எப்படி வெல்வது என்ற குழப்பம் தான்.

புலவர் 2: மன்னனின் நம்பிக்கைக்குரிய சிந்தனையை யாம் யாரும் வழுங்கத் தவறிவிட்டோம்.

மந்திரி : அதற்கு விவேகமும் கூரறிவுமுடைய இராஜ தந்திரம் வேண்டும்.

புலவர் 3: ச..... மன்னரை எப்படி ஆற்றப்போகின்றோம்.

மந்திரி : சிந்திப்போம் நல்ல ஆலோசனையுடன் மீளவும் வருவோம்.

காட்சி - 4

இடம்: அரண்மனை வாயில்

(வீரர்கள் இருவர் யாழ்பாடியை இழுத்துக்கொண்டு வருதல் )

வீரன் 1 : தளபதியாரே, இந்தக் கண்ணிழந்த கபோதி, மன்னனைக் காணவேண்டுமென்று மாபெரும் கலவரம் செய்கிறான்.

வீரன் 2: இரக்க வந்தவன் தானே பிழைத்துப்போ என்று கூறினாலும், தான் இரக்க வந்தவன் அல்லவாம்.. மன்னரிடம் பாடிப்பரிசில் பெறவேண்டுமாம்.

வீரன் 1: தடுத்தால் தற்கொலை செய்வேனென்று மிரட்டுகிறான்.

வீரன் 2: இவன் தொந்தரவு தாங்காமல் சிறையில் அடைத்தோம் அவன் சிறையில் இருந்து யாழ் இசைத்துப் பாடல் பாட பணியாளர்களும், தூங்கிப்போய் விடுகிறார்கள், பணிகள் எதுவும் நடக்கவில்லை

வீரன் 1 : தொந்தரவு தாங்காமல் வெளியே விட்டால் வீணை இசைத்துப் பாடல் பாடி, பள்ளி மாணவர்கள் எல்லோரையும் தன்னோடு கூட்டுச் சேர்த்துவிடுகிறான். பள்ளிகள் வெறிச்சோடுகின்றன.

வீரன் 2: தாங்க முடியவில்லை... அதுதான் தங்களிடம் கொண்டுவந்தேன்□ சில வேளை இவன் செய்பவற்றைப் பார்த்தால் இவனைக் குருடனாகவே தெரியவில்லை.

தளபதி : ஏய்..யார்... நீ ?.

பாடல்

இராகம் :-சுத்த தன்னியாசி மெட்டு :- "எங்கே நீவந்தாய்.." தாளம் :- ஆதி

தளபதி : எங்கே நீ வந்தாய் ஏந்தலின் அரண்மனைக்கு
எங்கே நீவந்தாய்
அத்தனை துணிவு கொண்டு அந்தகன் வேடமே பூண்டு
எங்கே வந்தாய்.

யாழ்பாடி : அந்தகன் நானே ஐயா வேடம் பூணவில்லை
அந்தகன் நானே

வேந்தனைப் பாடிப் பரிசில் வேண்டவே வந்தேன்.

அந்தகன் நானே

தளபதி : யாரோ நீ கூறாய் எங்கிருந்து இங்கு வந்தாய்

யாரோ நீ கூறாய்

கண்ணிழந்து கதைதூரம் வந்தகதை நம்பிலேனே

யாரோ நீ கூறாய்

யாழ்பாடி : இராகவன் நானே தொண்டை நாடிருந்து வந்த

இராகவன் நானே

பண்ணோடு யாழை இசைக்கும் பாணனே பிழைக்க வந்தேன்.

இராகவன் நானே

தளபதி : உன் நடவடிக்கைகள் எதுவும் நம்பும் படியாக இல்லை நீ உளவுபார்க்கும் ஒற்றனோ என்று நான் சந்தேகப்படுகிறேன்

வீரர் 1: இருக்கலாம்.. ஐயா....

வீரர் 2: இவனை நன்றாக விசாரணை செய்ய வேண்டும்

யாழ்பாடி : விருத்தம் இராகம் :-முகாரி

நம்பிலேன் என்னுரைத்த தானையின் தலைவா கேளாய்
அம்புவி மீதில் நானோர் அபலையே அறிவாய் ஐயா
கம்பனையொத்தவனாய் காவியஞ்செய்யு மென்னை
எம்புவியோர் ஏற்கவில்லை என் பத்தினியும் போற்றவில்லை
ஆதலால் வந்தேன் ஐயா..

ஐயா தயவு செய்து என்னை நம்புங்கள் ! என்னை ஒரே ஒரு முறை மன்னனை காண அனுமதியுங்கள்.

தளபதி : மன்னன் அந்தகன் முகத்தில் விழிப்பதில்லை .உன்னை எப்படி காணச் சம்மதிப்பார்.

யாழ்பாடி : சரி மன்னன் என்னைக் காணாமலே இருக்கட்டும்... மறைவிலிருந்து மன்னனைப் பற்றி யான் எழுதியிருக்கும் வாழ்த்தினைப் பாடுகிறேன் மன்னன் அதைக் கேட்டாலே போதும்...

வீரர் 2: அரச சபையே தூங்கிப்போகும்..

வீரர் 1: எச்சரிக்கை ஐயா... இவன் சாதாரண ஆள் இல்லை.

தளபதி : இவனை காவல் செய்யுங்கள் நான் மன்னனைக் கண்டு வருகிறேன்.

(தளபதி வெளியேறுதல்)

யாழ்பாடி : நான் ஒரு பாடல் பாடட்டுமா..

வீரர் 1 : அதை மட்டும் செய்துவிடாதே..

வீரர் 2 :நாங்கள் தூங்கினால் எங்கள் பதவியே பறிபோய்விடும்

யாழ்பாடி : (தனக்குள்) வளநாடும் மழகளிறும் வேண்டவா போகிறாய் என என் பத்தினி ஏளனம் செய்தாள்..இவர்கள் மன்னனையே நெருங்க விடேன் என்கிறார்கள்.. என் செய்வேன் சிவ சிவா..

காட்சி - 5

இடம் அரச சபை

தளபதி - வணங்குகிறேன் மன்னா!

நரசிங்கன் : என்ன செய்தி ...?

தளபதி : தொண்டை நாட்டில் இருந்து கவிவீரராகவன் எனும் அந்தகனான பாணன் ஒருவன் தங்களிடம் பாடிப் பரிசில் பெறவேண்டுமென்று பெரும் தொந்தரவு செய்கிறான்

மந்திரி : மன்னர் மனக்குழப்பத்தில் உள்ளார் இந்த வேளையில்...?

புலவர் 1: அந்தகன் முகத்தில் மன்னர் விழிப்பதில்லையே.

தளபதி : மன்னனின் குழப்பத்தினை அவனது இசைக்கலை சிலவேளை தீர்த்து வைக்கலாம். மன்னன் அவனைக் காணாது இருக்க, திரை அமைத்து அதன் பின் இருந்து அவனைப் பாடச் செய்யலாம்.

புலவர்: என்ன தளபதியாரே.. அறிவிலும் ஞானத்திலும் வல்ல பெரும்புலவர்ளெல்லாம் இங்கு காத்திருக்க.. எங்கிருந்தோ வந்த ஒரு அந்தகப்புலவன் மன்னனின் குழப்பத்தினைத் தீர்ப்பானா..

புலவர் 3 இது எங்களையெல்லாம் இழிவுபடுத்துவதுபோல் இருக்கின்றது.

நரசிங்கன் : இப்போது எதும் வேண்டாம் அவனை அனுப்பி விடுங்கள்

தளபதி : உத்தரவு மன்னா.

காட்சி - 6

(மலர்விழி யாழ்பாடியை தேடுதல்)

இராகம் :-சிவரஞ்சனி மெட்டு :- "வாராதிருப்பதேனோ." தாளம் :- ஆதி

பல்லவி

மலர் விழி: மீளாதிருப்பதேனோ மீளாதிருப்பதேனோ- உந்தன்
மனங்கவர் மலர்விழியை மறந்துநாள் பலவாக மீளாதிருப்பதேனோ

சரணம்

கோபமது குறைந்து மனம் ஆறவில்லையா
பாவி எனைக்காணமனம் ஏவவில்லையா
விழி இன்றி தனிவழி சென்றெதெங்கே ஐயா

வசனம் : தம்பி என் கணவரை எங்காவது கண்டீர்களா

படகோட்டி1 : கணவனா .. எப்படி இருப்பாரம்மா ?

மலர் விழி : அவருக்கு கண் தெரியாது..

படகோட்டி2: பாட்டெல்லாம் பாடுவாரா..

மலர் விழி : ஆமாம் அவர் பெரிய புலவர்.. இசைவாணர்

படகோட்டி3: கையில் யாழ் வைத்திருப்பாரா?

மலர்விழி : சரியாகச்சொன்னீர்கள். அவரேதான் எங்கே கண்டீர்களப்பா

படகோட்டி1: அவரை நாங்கள் தான் எங்களுடன் இலங்காபுரிக்கு கொண்டு சென்று விட்டுவந்தோம். இப்போது தான் இலங்காபுரியில் இருந்து வருகிறோம்.

மலர் வழி : என்ன லங்காபுரிக்கா..?

படகோட்டி1: ஆமாம் மன்னனைக் கண்டு பரிசில் பெறவேண்டுமென்று கூறினார்

மலர் விழி : ஐயோ கண்தெரியாது அந்நியதேசத்தில் எப்படி..?

படகோட்டி3 : கவலைப்படாஙேகோ அம்மா. கலைமகளே அவரோடு இருக்கிறாள் என்ன தெய்வீகமான குரல்

மலர்விழி : வேதனையோடு சென்றாரோ..?

படகோட்டி2: ஆமாம்..நாமகள் தனக்குத் தந்த நற்கலையை இந்த நாடும் அறியவில்லையாம் தன்னை விரும்பி மணந்த தன் பத்தினியும் அறியவில்லையாம். பின்னர் தான் ஏன் இங்கு இருக்க வேண்டும். என்று வேதனைப்பட்டாரம்மா.. நாங்கள் வருகின்றோம் கவலைப்படாதீங்க அவர் வெற்றியோடு வருவார்.. வங்கக்கடலாட எங்கள் படகோட..

(படகோட்டிகள் செல்லுதல்)

மலர் விழி : ஐயனே.. வறுமையால் நான் சொன்ன வார்த்தைகள் உங்களை அந்தளவுக்கு காயப்படுத்தி விட்டதா என்னை மன்னித்து விடுங்கள்...

மீளாதிருப்பதேனோ மீளாதிருப்பதேனோ- உங்கள்
மனங்கவர் மலர்விழியை வெறுத்து நாள் பலவாக மீளாதிருப்பதேனோ

தேசம் விட்டு தனிவழியே சென்றதெங்கையா
பாசமுள்ள பதியெனக்கு சொல்வதென்னையா
வறுமையில் சிறுமையாய் சொன்ன மொழி
பொறுத்திரையா மீளாதிருப்பனோ

## காட்சி- 7

(மன்னன் மனக்குழப்பத்துடன் மாடத்தில் உலாவுதல் யாழ்பாடி இரவிலே தன் பாட்டில் திண்ணை ஒன்றில் இருந்து யாழ்மீட்டிப் பாடுதல்)

நரசிங்கன் : ஆகா எங்கிருந்து இந்த யாழோசை வருகின்றது. என்ன இனிமை.. என் கனத்த இதயத்தை வருடிச்செல்லுகின்றதே

இராகம் :-சிந்துபைரவி மெட்டு :- "ஏழுபிள்ளைக் காரியடி.." தாளம் :-ஆதி

யாழ்பாடி : மூசுகடல் பேசுதம்மா நேசத் தமிழ் ஓதுதம்மா
வீசுதென்றல் பாடுதம்மா ஈழுதேசம் இனிமையம்மா

வெண்ணிலவு வான் பொழிய தண்ணுமை எங்கோ பறைய
கண்ணிழந்த கவிராகவன் காத்திருந்து பாடுகிறேன்

செங்கடக நகரோன்தனை கண்டுவந்தால் செயமென்றாரே
வங்கக்கடல் தாண்டி வந்தேன் (அவன்) வாசலது கண்டிலேனே

சீரிளமைத் தமிழ் வளர்த்தான் பேரிலங்கப் பதியே காத்தான்

வாரி நல்கும் வள்ளலென்றார் வந்தடைந்தேன் காண்கிலேனே

நரசிங்கன் : என்ன இனிமையான பாடல்.. யாரங்கே.. யாழ் இசைத்துப்பாடும் அந்த பாவலனை நாளை எனது அரசசபைக்கு அழைத்து வாருங்கள்

காட்சி -8

அரசசபை

(தளபதி கவிவீர இராகவனை அழைத்து வந்து திரை மறைவில் இருத்துதல்)

தளபதி : உனது விருப்பப்படியே மன்னன் உனது பாடலைக் கேட்கப்போகிறார். அவர் அந்தகர் கண்ணில் விழிப்பதில்லை அதனால் உனக்கு முன்னால் திரையிட்டிருக்கின்றோம். நீபாடு..

விருத்தம்

யாழ்பாடி : நரைகோட்டிளங் கன்று நல்வள நாடு நயந்தளிப்பான்
விரையூட்டு தார்ப்புயன் வெற்பீழ மன்னனென்றே விரும்பிக்
கரையோட்டமாக மரக்கலம் போட்டுனைக் காணவந்தாற்
திரை போட்டிருந்தனையோ வாலசிங்க சிரோமணியே ~~மூ~~
(யாழ்ப்பாண சரித்திரம்)

புலவர்1 : ஏய் உனது பாடலை மன்னன் கேட்கப்புகுந்ததே பெரிய விடயம்□.இம் தொடர்வாய்

யாழ்பாடி : - விருத்தம் - இராகம் :-சகானா

அழகெழில் லங்கா புரியை எழிலுடன் ஆளும்
ஏந்தலே போற்றி எங்கள் வள்ளலே போற்றி போற்றி
விழியிலா இசைஞன் எந்தன் வசையிலா கலையை இங்கு
இசைத்துமே ஏழ்மை நீங்க எழுந்தோடி வந்தேனையா
மந்திரி : மன்னன் உன் பாடலைக் கேட்கிறார் பாடு...

இராகம் :- சிந்துபைரவி மெட்டு :- "மயிலே மலர் மாங்குயிலே.." தாளம் :-ஆதி

யாழ்பாடி :

பல்லவி

மன்னா மனம் போல் நீடு நீ வாழுவாய் - இந்த
மாநிலத்தோருன்னை வாயார வாழ்த்திட

அனுபல்லவி

தமிழ் மேவிய தேர்ந்த புலமையும்.
கலையூறிய ஆழ்ந்த கேண்மையும்
கொண்டாளும் உன்போல
புரவலர் உண்டோ சொல்

சரணம்

முத்து மணியாசன மமர்ந்தே அரசோச்சிடும் அழகெழிலும்
சித்தமொன்றாகியென் செந்தமிழ் பாவினை சிந்தையில் ரசிப்பதுவும்.
இரத்தின ராச பட்டயப் பேரொளி பட்டுத்தெறிப்பதுவும்.
முத்தாரம் மின்னும் சௌந்தர்ய வதனமே

நரசிங்கன் : நிறுத்து!

விருத்தம் இராகம் : மோகனம்

யாரடா. புலவன் நீயா ஃ நயவஞ்சகம் கொண்ட பகையா
கூறடா பொய் பகர்ந்தாய் நயனமிலை யென்றுரைத்தாய்
பார்த்திடா தெந்தனையே பாவிலே வர்ணம் செய்தாய்
பொய்யனே கூறிடாய் போக்குவேன் உயிர்தனையே

இராகம் :-சங்கராபரணம் மெட்டு :- "உக்கிரவீரமதுற்றிடு தூதரே.." தாளம் :- ஆதி

நரசிங்கன் : உக்கிர சிங்கனின் புத்திரன் எந்தனை ஏய்த்திட வந்தாயோ
அக்கிரமம் புரி சத்துருவோ பகை ஒற்றனோ ஓதிடுவாய்
உரைப்பாய். உண்மை உரைப்பாய்
அந்தகன் வேடமேனென்றே உரைப்பாய்.

யாழ்பாடி : அந்தகன் நான் உண்மையையா
நிந்தை செய்ய வேண்டாமையா
சொந்த மண்ணை நீங்கி உந்தன்
நிந்தகமே வேண்டி வந்தேன்.

நரசிங்கன் : அந்தக வேடமணிந்திடு பாவலா எந்தனை காணாதே
விந்தையதாய் கவி செய்து புனைந்தது எங்ஙனமேயோது
விரைவாய் உண்மை புகல்வாய் - அன்றேல்
மண்ணிலே தலை கவிழும் உணர்வாய்.

(வசனம்) பொய்யானனே... என்னைக் காணத உன் கண்கள் எப்படி என்னை வர்ணிக்க முடியும். நான் அணிந்திருந்த வைரம் .அமரந்திருந்த மணியாசானம் எப்படி உனக்குத் தெரிந்தது.

புலவர்3 : ஆகா சரியாக மாட்டிக்கொண்டான். மன்னனின் தமிழறிவை இவன் அறிந்திருக்க மாட்டான்

விருத்தம் இராகம் :- பைரவி

யாழ்பாடி : பேரறிவாளா பொன்றும் பொறையுடை வேந்தனே கேள்
பொய்தனை வாழ்விலென்றும் புகன்றறியேனே ஐயா
பார்வையெனக்கிருந்தால் பாவியேனிங்கு வந்தேன்
ஞானத்தினாலுணர்வேன் நாமகள் வரமே ஐயா.....

(வசனம்) ஐயனே என்னைச் சந்தேகிக்கர்தீகள்.. என் ஊனக்கண் குருடாயினும் ஞானக்கண்ணைத் தந்தாள் கலைவாணி. அக் கண்ணால் உங்களை கண்டுதான் பாடினேன்.. அப்படி நான் பொய் சொல்வதாக இருந்தாலும், இன்னமும் நான் உங்கனை காண முடியாதவாறு திரை தடுக்கின்றதல்லவா மன்னா..

நரசிங்கன் : ஆமாம்... நீ சொல்வது முற்றும் உண்மை
புலவர் 1 : என்ன ஞானக் கண்ணால் அனைத்தையும் காணுவாயா?
புலவர் 2 : யாரை ஏமாற்றப் புகுந்தாய்
மந்திரி : நாம் கேட்கின்ற கேள்விகளுக்கு உன்னால் பதில் அளிக்க முடியுமா
யாழ்பாடி : நிச்சயமாக முடியும்.
மந்திரி : மன்னா இவனை சோதிப்பதற்கு எங்களுக்கு ஒரு சந்தர்ப்பம் தரவேண்டும்.
நரசிங்கன் : அப்படியே ஆகட்டும்
புலவர் 3 : புலவரே தயாரா...!
(போட்டி நடப்பதனைப்போல் பாடல் தர்க்கம் இடம்பெறும் )

இராகம் :-சிந்துபைரவி மெட்டு :- "எம தர்மராஜா எந்தன் நாதன் உயிர்"
தாளம் :-ஆதி

யாழ்பாடி : நாமகளே எந்தன் நாவிலமர்ந்தாளே
வினாவெதுவோ விடை தந்தருளுவாளே
புலவர் 1 : ராகவனே பதில் ஓதிடுவாய் கவி தந்திடு தெய்வமதாரோ
யாழ்பாடி : ஆய கலை தரு அன்னையவள் கலை வாணி அறிந்திடுவீரே.
புலவர் 2 : தத்துவம் அத்தனையும் தரு வித்தகன் சித்தமுணர்ந்தவன் ஆரு
யாழ்பாடி : அம்மையும் அப்பனுமாகிய சக்தியை கண்டவிநாயகன் பேரு
மந்திரி : நெற்றிக்கண் கவியாரு?
யாழ்பாடி : நக்கீரர் பெருமானே
புலவர் 3 : தந்தைக்கார் உபதேசி?
யாழ்பாடி : கந்தன் தான் பிரசங்கி
நரசிங்கன்: அட ஞானமதாய் விடை ஓதுகிறாய் பலே.
மந்திரி : பரீட்சை முடியவில்லை புலவரே.... ஈழநாட்டுக்கு வந்தாய் எங்கன்

நாட்டைப் பற்றி கூறு பார்க்கலாம்.

புலவர் 1 : காவியம் கூறிய காரிகையாள் அவள் ஈழமதில் புகுந்தாளே

யாழ்பாடி : மணிபல்லவமாம் கடல் சூழ்நிலத்தினில் வந்தவளே மணி மேகலா

புலவர் 2 : நகுல முகத்தொடு வந்து நலம் பெறு சோழ நிலத்தவள் யாரு?

யாழ்பாடி : வேந்தனவர் திரு அன்னையவள் (அந்த) மாருதப்புரவல்லி

மந்திரி : இந்து சமுத்திர முத்து?

யாழ்பாடி : லங்கா புரியொரு சொத்து.

புலவர் 3 : மூத்தவனானவன் யாரு?

யாழ்பாடி : இராவணேஸ்வரன் பேரு !

நரசிங்கன் : அட தீரமதாய்ப் பதில் ஓதுகிறாய் பலே...

நரசிங்கன் : கவிவீர ராகவனே.... உன்னை நான் நம்புகிறேன்.. உன்னைப்போல் விவேகம் மிக்கவர்கள் சிலரே.சரி... இப்போது நான் மிகவும் குழப்பத்தில் இருக்கிறேன் என் குழப்பத்திற்கு நீ பதில் தரமுடியுமா..

மந்திரி : அதாவது மன்னர் இரவு கண்ட கனவினால் குழப்பமுற்றுள்ளார்.

யாழ்பாடி : என்ன கனவு மன்னா...?

நரசிங்கன் : நயவஞ்சகர்களினால் என் நாடு அழிக்கப்படுகிறது. நானும் என் குடும்பமும் சொல்லப்படுகின்றோம். கொடியவர் மக்களை கொன்று குவித்து, வல்லுறவு செய்து காட்டேரிகள் போல நடந்து கொள்கிறார்கள் அவலக் குரல் எழுப்பி ஆக்கிரமிப்பாளருக்கு அடிபணிகிறார்கள்.... இது என் கனவு இப்படி நடந்தால் என்னவாகும் என்நாடு...? அழிவேதான் முடிவா.

இராகம் :-சிந்துபைரவி மெட்டு :- "தொன்று திகழ்ந்திடு:.."
தாளம் :-ஆதி

யாழ்பாடி : தர்மவாழ்வு தன்னை சூது கௌவுவது புதியதல்ல மன்னா - தர்மம்
மீளவெல்லுவதும் தீமை மாறுவதும் உலக நியதி மன்னா

மன்னரில்லையெனில் மக்கள் யாவருமே மன்னராகுவாரே - மதி
கொண்டு பகைதனை வென்று மீளவும் நாடு ஆளுவாரே

புத்தியே பெரும் சக்தியேயெனக் கொண்டு வாழவேண்டும் -தமிழன்
கத்தியின்றியும் ரத்தம் இன்றியும் சித்தம் வெல்ல வேண்டும்.

(மன்னன் திரையை விலக்கி மகிழ்வுடன் பாடுதல்)

நரசிங்கன் : அப்பனே கவி வாணனே உனை ஆரவே தழுவுவேன் - நீ
செப்பிய கவி முற்றுமாக என் சித்தம் வென்றதையா.

நரசிங்கன் : இதைத்தான் நான் எதிர்பார்த்தேன். இந்த நம்பிக்கை வரிகளுக்காகத்தான். நான் காத்திருந்தேன் புலவர்களே இப்போது புரிகிறதா. ? கவிவீர இராகவனே எங்கிருந்தோ வந்து என் மனக்குழப்பத்திற்கு மருந்திட்டாய்.. மகாபுலவன் நீ

இராகம் :- காபி மெட்டு :- 'இறைவனே அருள்வாய்...' தாளம் :-

நரசிங்கன் : பல்லவி

இசைக்கவியே பெரும் விசையறிவே... உந்தன்
பெருமையை அறிந்தேன் புலவனே மகிழ்ந்தேன்

சரணம்

ஈழவழ நாடுவந்த இணையில்லா கவியே
நிலமொன்று தந்தேன் நலமுடன் வாழ்வாய்
நல்லை நகரண்டை மணற்றியெனும் ஊரை
மகிழ்வுடன் ஆள்வாய் மகிபனே வாழ்வாய்.

மழுகளிறோடு மணியுடை தேரும்
மகிழ்வுடன் ஈந்தேன் வரிசைகள் தந்தேன்
மதி நிறை வாளா யாழிசை வாண்ணா
யாழ்ப்பாணன் என வாழுவாய் நீடு

யாழ்பாடி : மன்னா, அறிவையும் கலையையும் மதிக்கும் உன் அண்டை வந்தால் தான் எனக்கு வாழ்வு என்று எண்ணினேன் வந்தேன் உன்னை கண்டேன் என்துன்பம் தீர்ந்தது.

நரசிங்கன் : கவிவாணா... நீ கவிபாடிப் பெற்ற மணற்றி இன்றுமுதல் யாழ்ப்பாணம் என்று அழைக்கப்பட்டும். அம்மக்கள் உன்னைப் போல், விவேகமும், ஞானமும் மிக்கவர்களாக விளங்கட்டும், கல்வியை அவர்கள் கண்களாகப் போற்றட்டும்.

மந்திரி : கொடை வல்ல வேந்தன் நரசிம்மன்

எல்லோ : வாழ்க ! வாழ்க!

மந்திரி : யாழ்பாடி, வென்ற கவிவீர ராகவன்

எல்லோ : வாழ்க வாழ்க

மந்திரி : யாழ்பாடி பெற்ற யாழ்ப்பாணம்.

எல்லோ : வாழ்க வாழ்க.

--நிறைவு --

குறிப்பு:- ஈழத்தமிழரின் பண்பாட்டு மையமாக, கலாசாரத்தின் தலைநகராக விளங்குகின்ற யாழ்ப்பாணம் என்ற பிரதேசத்தின் பெயர் உருவாக்கத்திற்கு காரணமாகக் கொள்ளப்படுகின்ற அந்தகனான யாழ்பாடியின் (கவிவீர இராகவன்) வரலாறானது மாதகல் மயில் வாகனப் புலவரின் 'யாழ்ப்பாண வைபவ மாலை, ஆ.முத்துதம்பிப் புலவரின் 'யாழ்பாணச்சரித்திரம்', எஸ் ஜோணின் 'யாழ்ப்பாணச் சரித்திரம்' சுவாமி ஞானப்பிரகாசரின் 'யாழ்பாண வைபவ விமர்சனம்' கலாநிதி சிற்றம்பலம் அவர்களின் 'யாழ்ப்பாணத்தொன்மை வரலாறு' ஆகியவற்றில் காணப்படுகின்றது எனினும் அவ் வரலாற்றுக் குறிப்புக்களில் பல்வேறு முரண்பாடுளும் காணப்படுகின்றன. அவற்றில் இருந்து யதார்த்தபூர்வமானதாக எடுக்கப்பட்ட கதைப்பொருளில் மாற்றங்கள் செய்யாது நாடக அமைப்புக்கமைய சில கற்பனைகளையும் இணைத்து இந்த யாழ்ப்பாணன் இசை நாடகம் 2017 ஆம் ஆண்டு ஆக்கப்பட்டது.

# முல்லைத்தீவு கல்வி வலய
# முழு நிலா நாள் கலைவிழா - 2018
# நிகழ்ச்சிகளில் சில...





















# முல்லைத்தீவு கல்வி வலய
# முழு நிலா நாள் கலைவிழா - 2018
# நிகழ்ச்சிகளில் சில...

























# பாவம் இல்லாத பாடல் பெரும் பாபம்



**செல்வி. வெ. விஜயபாரதி**
*இசை ஆசிரியை*
*யாழ் இந்துமகளிர்கல்லூரி*

**அசைச்சொல்லின் தொடராலே ஆனதே இராகம் பாடலின் அளவை முறைப்படுத்த அமைந்ததே தாளம் இசையதன் பொருள் விளங்க பாடுவதே பாவம்** அனைவரும் அறிந்த பக்திப்பாடலின் வரிகள் இவை பாரம்பரிய இசை, நாட்டுப்புற இசை இந்துஸ்தானிஇசை பாப்இசை என இசை வகைகள் விரிந்து செல்கின்றன.

· இசை இயற்கையின் வடிவம். இயற்கையின் அதிர்வலைகளும் இசையின் அலைகளும் ஒன்று போலவே அமைந்து உள்ளதில் இருந்தே இதனை நாம் அறியலாம். இயற்கையாக வளர்ந்துள்ள மூங்கிலில் காற்று மோதும் போது இசை பிறக்கிறது. இயற்கையின் பிரதிபலிப்பான இசையில் ஏற்படும் லயம் தாளம் காலப்பிரமாணம் ஆழும் யாவும் இயற்கையில் இருந்தே துவங்குகிறது.

கடலின் அலை ஓசை காற்றின் ஓசை காற்றில் இலைகள் ஆடும் ஓசை மழைத்துளியின் ஓசை மரத்தில் துளை போடும் மரங்கொத்தியின் அலகின் ஓசை யாவுமே இசையாகத் தான் துவங்குகின்றன. இந்த இசைக்கு மனிதன்தன்னுடைய ஆழ் மன உணர்வினால் ஒரு கலையாக உருவம் கொடுத்திருக்கிறான்

மனிதர்களிடம் இருந்து இசையை பிரிக்கவே முடியாது அனைத்து உணர்ச்சிகளிலும் இசையை மனிதன் பயன்படுத்தி வருகிறான் தனது பிறப்பில் இருந்து இறப்பு வரை இசையை தன்னோடு சுமந்தே செல்கிறான் காரணம் இசை மேல் அவன் வைத்து உள்ள அளவற்ற காதல்.

காலத்தின் மாற்றங்களுக்கு ஏற்ப இசையும் மாறிக்கொண்டு வருகிறது.

இசையானது பல வகை பாவங்களை வெளிக்கொணரும் உன்னத ஊடகம் பரத நாட்டியத்தில் பாவம் அல்லது பாவனை என்பது உள்ளத்தில் எழும் உணர்ச்சிகளை உடலுறுப்புகளாலும் முகத்தாலும் வாக்கினாலும் வெளிப்படுத்துவதாகும்.

அது போலவே பலவகை பாவங்களை வெளிக்கொணருவது ராகங்களின் சிறப்பு. இத்தகைய இராகங்களை கொண்டு அமைக்கப்பட்ட பாடல்கள் அந்தப்பாடல்கள் பாடப்பட்ட சந்தர்ப்பம் அதன் கருத்து அந்தப்பாடல்கள் மூலம் வெளிப்படுத்தப்படும் உணர்வு என்பவற்றிற்கேற்ப உணர்வு மயமாகப்பாடப்பட்டன

ராகங்களை விஸ்தாரமாகப் பாடும் கர்நாடக இசையில் அதன் அழகுகளை காட்டும் மிக மிக அற்புதமான வெளிப்படுத்தும் உணர்வு கலந்த படைப்புக்களாகவே பாடல்களை நம் முன்னோர்கள் ஆக்கினர்

ஆனால் இன்று எம்மத்தியில் நாம் பாடும் இசையானது பெரும்பாலும் உருப்போடுதல் மனனம் செய்தல், ஒப்புவித்தல் என்ற வகையிலேயே நிகழ்த்திக்கொண்டிருக்கிறோம் மாணவர்கள் நிலைதான் இவ்வாறு உள்ளதென்பதல்ல.

மிகவும் பயிற்சி பெற்ற இசைவல்லுனர்களாயிருந்தாலும் கூட தியாகராஜசுவாமிகள் புரந்தரதாஸர் கோபாலகிருஸ்ணபாரதியார், முத்துத்தாண்டவர் போன்ற இசைமேதைகளால் பாடப்பட்ட பாடல்களை அது பாடப்பட்ட சந்தர்பம் அப் பாடலின் பொருள் போன்றவற்றை உணர்ந்து பாட முடிவதில்லை. அதனை அறிந்து பாட வேண்டுமென்ற ஆர்வமும் எம் மத்தியில் இல்லை வெறுமனே இராகத்திற்குரிய ஸ்வரஸ்தானங்களை சரியாகப் பாடிவிட்டால் போதுமென்று நினைத்து பல ஸ்வரசஞ்சாரங்களையும் சங்கதிகளையும் பாடி தமது மேதாவித்தினை வெளிக்காட்டுவதே குறிக்கோள் என்று கருதி வித்துவச் செருக்கோடு பாடும் இவர்களின் பாடல்களில் நாம் தியாகரஜர், புரந்தரதாஸர், கோபாலகிருஸ்ணபாரதியார் முத்துத்தாண்டவர போன்றோர் வெளிப்படுத்திய பக்தி உணர்வையும் நவரஸங்களையும் எதிர்பார்த்து ஏமாந்து போகிறோம் என்பதே உண்மை

அறிவு விசாலம் கொண்ட வாக்கேயகாரர்கள் தமது கருத்துக்களை மிக எளிமையாகவும் விசாலமான நோக்குடனும் இலகுவான நடையிலும் பாடல்களை ஆக்கினர்.

எளிமை அவர்களின் அழகாகும். இவர்களிடம் அகந்தை அகங்காரம் தந்திரம் மற்றவர் மனதை குத்திக்குதறி நோகடிக்கும் இயல்பு எதுவும் இருக்கவில்லை. இதனால் இவர்கள் பாடல்கள் படித்தவர் முதல் பாமரர் வரை எல்லோர் மனதையும் கொள்ளும் விதத்தில் இருந்தது. அவர்கள் வெறும் இசைக்கலைஞர்களாக மட்டும் இருக்கவில்லை. மிகப்பெரும் அறிவு மேதைகளாகவும் சமூகமாற்றங்களை விரும்பும் முற்போகக்கு சிந்தனை கொண்ட சீரிய சிந்தனையாளர்களாகவும் இருந்தனர் உதாரணமாக வாக்கேயகாரர்களுக்கு முன்னோடியான புரந்தரதாஸரை எடுத்துக் கொண்டால் அவரது பாடல்களில் அதிகாலையில் ஈர ஆடையுடன் ஆலயத்தை சுற்றி வருவதல்ல ஆசாரம் மனதிலிருக்கும் கோபம், பொறாமை, வெறுப்பு ஆகியவற்றை ஒழிப்பதுதான் உண்மையான ஆசாரம் என்கிறார்.

சமூகபோதனைக்குச் சான்றாக "தருமமே ஜயம்"(தர்மமே ஜயா) என்ற கீர்த்தனை அமைகிறது. "நஞ்சு கொடுத்தவனுக்கு நல்ல உணவு தரவேண்டும் பழித்தவனைப்

பாராட்டவேண்டும்"என்கிறார்.இது பாக்கியம் (இது பாக்யா )என்ற கீர்த்தனையில் கல்லாயிருக்க வேண்டும் கடின சம்சாரத்தில் வில்லாக வளைய வேண்டும். என்கிறார்

எதையும் எதிர்த்துநிற்கும் ஆன்மபலம் மனிதனுக்கு வேண்டும் என்ற வற்புறுத்தல் அவர் பாடல்களில் தொடர்ந்து இடம்பெறுகிறது.

பக்தி என்பது பல கோயில்களுக்குச் செல்வதல்ல சரியான வாழ்க்கைமுறைதான் என்கிறார். மண். பொன். பெண். இவற்றின்மீது இருக்கும் ஆசை நீக்கப்படவேண்டும் என்ற செய்தி சொல்லப்படும்விதம் அழகானதாக உள்ளது.

என்ன சாதியாக இருந்தாலும் யாவரும் ஒரே குலம் என்பதை (குலவந்தரேனு ) கீர்த்தனையில் குறிப்பிடுகிறார் மனிதநேயத்தைப் புரிந்துகொள்ளாவிட்டால் என்ன பயன் ஒருவனுடைய பிறப்பு மட்டும் அவன் உயர்வுக்கோ தாழ்வுக்கோ காரணமாக முடியாது. வெவ்வேறு நிறமுடைய பசுக்கள் தரும் பாலும் வெவ்வேறு வடிவம்கொண்ட கரும்புகள் தரும் சுவையும் வித்தியாசப்படமுடியுமா? தோற்றத்தில் இருக்கும் வேறுபாடு யாருடைய இயல்புத் தன்மையையும் பக்குவத்தையும் மாற்ற முடியாது எனும் அவரது கருத்து பிற்காலத்தில் பாடிய மகாகவி பாரதியாரை நினைவு படுத்தி வியக்க வைக்கிறது இத்தகைய அறிவும் ஆற்றலும் கொண்ட உயர்ந்த இசை மேதைகளால் பாடப்பட்ட பாடல்களை பொருளும் விளங்காமல் கருத்தும் புரியாமல் எவ்வாறெல்லாமோ எந்த வித உணர்வு பாவமும் இல்லாது நாம் ஒப்புவித்துக் கொண்டிருக்கின்றோம் என்பதே உண்மை நமது கர்நாடக மரபிசையில் பாவத்தை வெளிப்படுத்துவதில் வாய்ப்பாட்டுக் காரர்களுக்கு இருக்கும் சாத்தியங்கள் வேறு இசைக் கருவிகளில் கிடையாது. மொழியும் உணர்வும்கலந்து வெளிப்படுத்தும் சாத்தியம் வாய்பாட்டிசைக் கலைஞர்களுக்கே உண்டு இவ்வாறு உணர்வு மயமான பாவம் நிறைந்த பாடல்களை அள்ளித்தந்து நெஞ்சை நிறைக்கும் இந்தியஇசைக்கலை வல்லுனர்களையும் நாம் இவ்விடத்தில் நினைவுகூர வேண்டியது கட்டாயமானதாகும் சிறிது காலத்திற்கு முற்பட்ட கலைஞர்களில் அளவு கோலில் அனைத்து ஸ்தாயிகளிலும் சஞ்சரிக்கும் குரல் வளம் பட்டம்மாவின் விலைமதிப்பற்ற சொத்தாக இருந்தது. பட்டம்மாள் ஆரம்பத்திலிருந்தே இந்த அம்சத்தை நன்கு உணர்ந்த குரலிசை மேதை. ஐம்பது வயதானபோது லயத்தோடு பாவத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கத் தொடங்கினேன்.. பாவத்தை மையமாக வைத்துப் பாடுவது. இசையை உள்முகமாகத் திருப்புகிறது.. அது ரசிகர்களையும் உள்முகமாக்கி அவர்கள் உள்ளத்தைச் சென்று தொடுகிறது" என்று பட்டம்மாள் ஒருமுறை கூறினார். ஸ்ருதியும், லயமும் சிறிதும் பிசகாமல் ராக பாவம் முழுமையாக நிறைந்து அந்தக் குரலோடு சேர்வதால் விளையும் சங்கீதம் தான் பட்டம்மாளின் இசை. இது போலவே தற்காலஇசைக்கலைஞர்களில் அருணா சாயிராம் பமபேஜெய ஸ்ரீ போன்றோர் ". கீர்த்தனங்களின் சொற்களை தெளிவான உச்சரிப்போடு அவற்றின் பொருள் விளங்குமாறு பாடுவது முக்கியம் என்பதை உணர்ந்து அதை ஆரம்பத்திலிருந்தே கடைப் பிடிப்பவர்களாக உள்ளனர்.

குயிலின் இனிமையும் தேனின் அடர்த்தியும் மலரின் மென்மையும், வீணையின் கம்பீரமும் அருவியோசையின் இதமும் எல்லாம் சேர்ந்த ஒரு அற்புத பாவம் நிறைந்த பாடல்களால் எம்நெஞ்சை நிறைத்து எம்மை வாழ வைத்துக் கொண்டிருக்கின்றனர் என்பதே உண்மை.

கர்நாடக இசையில் பக்தி பாவத்தின் பங்கு மிக அதிகமானது. கடவுளை அடைய இசை ஓர் எளியவழி என்ற எண்ணம்கொண்டு சாதாரண மனிதனும் விரும்பி ஏற்கும் வகையில் பண்பாடு மற்றும் சமய மேன்மை சார்ந்த கருத்துக்களை கீர்த்தனைகளாக்கி வாக்கேய சாரர்கள் தங்கள் பக்தியை வளப்படுத்தினர். 'நாதோபாசனா' என்ற பெயரில் அமையும் இது இசை பக்தி இலக்கியம் என்ற மூன்றையும் உள்ளடக்கியது என்றாலும் தனித்தனியாக இனம் கண்டறியமுடியாத அளவுக்குத் தமக்குள் இணைந்துள்ளது. இந்த வகையில் நாயன்மார்ளின் தேவாரங்களையும் நம்மில் பெரும்பாலானோர் பொருள் விளங்காது உணர்வும் புரியாமல் வாய்ப்பாடு ஒப்புவிப்பதை போல ஒப்புவித்துக் கொண்டிருக்கிறோம் என்பதே உண்மை. இந்த நிலை நீங்க நாம் அனைவரும் முயற்சி செய்வோமாக.

# வலிகாமம் கல்வி வலய
# முழு நிலாநாள் கலைவிழா - 2018
# நிகழ்ச்சிகளில் சில...

















# வலிகாமம் கல்வி வலய
# முழு நிலாநாள் கலைவிழா - 2018
# நிகழ்ச்சிகளில் சில...













# யாழ்ப்பாணக் கல்வி வலய
# முழு நிலா நாள் கலைவிழா - 2018
# நிகழ்ச்சிகளில் சில...












# யாழ்ப்பாணக் கல்வி வலய
# முழு நிலா நாள் கலைவிழா - 2018
# நிகழ்ச்சிகளில் சில...












# தென்மராட்சிக் கல்வி வலய
# முழு நிலா நாள் கலைவிழா - 2018
# நிகழ்ச்சிகளில் சில...







# தென்மராட்சிக் கல்வி வலய
# முழு நிலா நாள் கலைவிழா - 2018
# நிகழ்ச்சிகளில் சில...

















# தீவகக் கல்வி வலய
# முழு நிலா நாள் கலைவிழா - 2018
# நிகழ்ச்சிகளில் சில...




















மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்